பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

அறிமுகவிலை 20/=

புதுமை : 01 | 27 ஓகஸ்ட் 2016 | விதி : 11



## சரியா பிழையா?

## 10,000 குழந்தை வேட்டைகள்

## 'ஜெயசிகுறு' அணைக்கப்பட்ட நெருப்பாறு



தொடர்கதை

> சின்னப்பெடியன் திடீரென்று எழுந்து இவனை மிரட்சியுடன் பார்க்கத் தொடங்கினாள். இவன் தலையைக் குனிந்து கொண்டான். வெளிச்சம் பரவிய போது அவன் தன் பெட்சீட்டை சுருட்டிக் கொண்டு ஒரே தாவலில் போய் இன்னுமொரு இடம் பிடித்துக் கொண்டான். அகிலா இவனைக் கட்டிப்பிடித்தாள். இவனுக்குள் செருகிக்கொண்டு வந்தாள். அகிலாவின் முகத்தை கைகளில் ஏந்தினாள். சட்டென்று அவள் வாயைக்கடித்து கொஞ்சத் தொடங்கினான். அகிலா திமிறினாள்.



11

சயந்தன்

# ஆறாவடு

விடிந்தபோது சுற்றிவரக் கடல் இருந்தது. இவன் இரவு முழுவதும் நித்திரை கொள்ள வில்லை. ட்ரவலிங் பையை எடுத்து முதுகுக்கு அணைத்து கொஞ்சம் சாய்ந்து கண்ணயர்கின்ற போதெல்லாம் இரண்டு காரணிகள் இவனைக் குழப்பிக் கொண்டிருந்தன. ஒன்று ஏதாவது பெரும் அலையில் சாய்த்து நிமிரும் வள்ளம். மற்றையது பக்கத்தில் படுத்திருந்த சின்னப்பையன். அவன் இவனைக் கட்டிப்படுப்பதும் இவனுக்குள் செருகிக் கொண்டு வருவதுமக இருந்தான். சுற்றிப் பிடித்திருக்கிற அவனின் கையை வலுக் கட்டாயமாக ஒவ்வொரு முறையும் பிரித்து விட்ட போதும் தூக்கத்தில் அவன் விடுகிற மாதிரித் தெரியவில்லை.

கொஞ்சநேரத்துக் கனவொன்றில் அகிலா வந்தாள். இவனும் அவளும் டைட்டானிக் கப்பலின் ஏதோ ஒரு தளத்தில் ஜீப் ஒன்றிற்குள் கிடந்தார்கள். ஜீப்பின் கண்ணாடிகள் பனிப்புகை படிந்திருந்தது. அகிலா இவனைக் கட்டிப்பிடித்தாள். இவனுக்குள் செருகிக்கொண்டு வந்தாள். அகிலாவின் முகத்தை கைகளில் ஏந்தினாள். சட்டென்று அவள் வாயைக்கடித்து கொஞ்சத் தொடங்கினான். அகிலா திமிறினாள்.

சின்னப்பெடியன் திடீரென்று எழுந்து இவனை மிரட்சியுடன் பார்க்கத் தொடங்கினாள். இவன் தலையைக் குனிந்து கொண்டான். வெளிச்சம் பரவிய போது அவன் தன் பெட்சீட்டை சுருட்டிக் கொண்டு ஒரே தாவலில் போய் இன்னுமொரு இடம் பிடித்துக் கொண்டான். போகும் போது யாரையோ உழக்கிக் கொண்டு போனான் என்று கத்தினார்கள்.

வள்ளம் வெளியிலும் உள்ளுக்கும் நிறைய இடங்களில் துருப்பிடித் திருந்தது. எஞ்சின் அறைக்கென ஒரு கூடு இருந்தது. ஒரு காஸ் அடுப்பும் சிலிண்டரும் அங்கிருந்தன. அந்தக் கூட்டின் தளத்தில் ஒன்றுக்கொன்று சதுர அடியில் ஒரு வாசலும் கீழே இன்னுமொரு அறையும் இரண்டையும் இணைத்து ஏணி ஒன்றும் இருந்தன. கீழறைக்குள் அரிசி பருப்பு சாப்பாட்டுச் சாமான்களையும் மருந்துகளையும் பத்திரப்படுத்தியிருந்தார்கள். ஓட்டிகளின் அறையாகவும் அது இருந்தது. பயணிகள் வெளியே கடலைப் பார்த்தபடி இருக்க வேண்டும். ஆளுக்காள் அனுசரித்துக் கொண்டு படுக்க வேண்டும்.

இவனுக்கு வயிற்றுக்குள் கட முட வென்ற சத்தம் காது வரைக்கும் கேட்டது. இவன் காலையிலேயே கக்கூசு போகிற பழக்கம் உள்ளவனாய் இருந்தான். அதற்காக வள்ளத்தின் விளிம்பிற்கு வெளியே நிற்கத்தக்கதாக நடுவில் ஓட்டை போட்ட கறள்பிடித்த பேசின் ஒன்றை ஸ்குரூ போட்டுப் பொருத் தியிருந்தார்க்ள். அதில் உட்கார்ந்து முன்னாலே கடல் தண்ணீர் நிரப்பிவைத் திருக்கிற மண்ணெண்ணெய் ட்றம்மை கெட்டியாக பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

இவன் தனது முறைக்காக வரிசையில் பன்னிரண்டாவதாக நின்றான். பதினொன் றாவதாக நின்றவர் எழும்பி வந்த பிறகு அங்கே இங்கே என்று கையைப் பிடித்து ஊன்றி சாரத்தைத் தூக்கி குந்தி மண்ணெண்ணெய் பரலைக் கெட்டியாகப் பிடித்தான். தண்ணிக்குள் தொப் தொப் என்று விழுகின்ற சத்தங்கள் கேட்டன. திடீரென்று "ஆழக்கடலெங்கும் சோழ மகாராஜன் ஆட்சி புரிந்தானே அன்று" என்ற பாட்டு நினைப்பில் வந்தது. சோழ மகாராஜனும் இப்படித்தான் இருந்திருப்பான் என்று யோசனை வந்தது. கழுவிய போது பின் பக்கத்தில் உடைந்து கிடந்த சூட்டுக் கட்டியில் உப்புத்தண்ணி பட்டு எரியத் தொடங்கியது. கொஞ்சம் காற்றுப்பட சாரத்தை உயர்த்திக் கட்டி அங்கே கயும் இங்கேயும் நடந்தான். சிங்கள இளைஞர்களின் சிலமனைக் காண வில்லை. கீழே ஓட்டிகளின் அறையில் அவர்கள் போர்த்துக் கட்டிக் கொண்டு ஆளுக்கொரு தலையணையில் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார்கள். அவர்களில் பத்துப் பேர் இருந்தார்கள். இவனுக்குப் பத்திக்கொண்டு வந்தது.

வள்ளத்தில் மத்தியானம் சோறும் பருப்புக்கறியும் கொடுத்தார்கள். கடலுக்குள் சீக்கிரமாகவே பசிக்கத் தொடங்குகிறது. இவன் அவுக் அவுக் என்று வாயக்குள் அள்ளி எறிந்தான். அரை டம்ளரில் குடிக்கத் தண்ணீர் கிடைத்தது. சிங்களப் பெடியன்களைத் திரும்பவும் காணவில்லை. அவர்கள் கீழ் அறையில் ஸ்பெஷலாக எதையாவது சாப்பிடுகிறார்களோ? என இவனுக்கு டவுட் வந்தது. ஓட்டிகளில் ஒருவன் இவர்களிடத்திற்கு வந்து இன்றைக்கு முதல் நாள், அதனால் சரியான ஏற்பாடு எதுவும் செய்யவில்லையென்றும் நாளை முதல் இந்த வள்ளத்திலேயே மீன்பிடித்து சமைக்க உள்ளதாகவும் சொன்னான். மீன்பிடி, சமையல், துப்பரவு என வேலைகளை ஆட்களுக்குள் பிரித்துக் கொள்ளுமாறு மேலும் சொன்னான்.

"இந்த வள்ளத்தில எத்தனை பேர் போறம்" என்று நாற்பது வயதுகளில் உடல் தளர்ந்து போய் இருந்த ஒருவர் ஓட்டியைப் பார்த்துக் கேட்டார். அவரை இன்று காலையில் யாரோ 'பெரியய்யா' என்று அழைத்ததாக ஞாபகம். இடுப்பில் சுருட்டி விட்ட சவுதிச் சாரமும் கையில் லாத வெள்ளை பெனியனுடனும் அவர் நின்றார்.



"எங்கள் ரண்டு பேரையும் விட்டுப் பார்த்தா அறுபத்துநாலு" என்றான் ஓட்டி. அப்பொழுது ஒரு நாளைக்கு ஒன்பது பேர் என்று வேலைகளைப் பிரிக்கலாம் என இவன் கணக்குப் போட்டான். சிங்கள இளைஞர்கள் பத்துப்பேருக்கும் ஒரு நாளைக் கொடுத்துவிடலாம்.

இவன் 'பெரியய்யா' என்று அந்த வயதானவரைக் கூப்பிட்டான். அவர் திரும்பிப் பார்த்தார்.

"இங்கை வாற ஆட்களில நீங்கள்தான் வயசுக்கு மூத்தவர் என்று நினைக்கிறன். ஆளாளுக்கு என்ன வேலை எப்ப வேலை என்டதை நீங்கள் தான் கொண்டு நின்டு நடத்த வேணும். என்ன சொல்லுறியள்" என்று எழும்பி நின்று இவன் அபிப்பிராயப்பட்டான்.

'பெரியய்யா' தயங்கினார். "இதில நான் என்ன செய்யிறது" என்றார்.

"அண்ணை சொல்லுறது சரி. சும்மா நாங்கள் இதுக்கை இருந்து ஆளையாள் மூஞ்சியைப் பார்த்துக் கொண்டு இருக்கா மல் ஆளும் பேருமா வேலைகளைச் செய்தால் பொழுது போறதும் தெரியாது. ஒரு ஒழுங்கு முறையாவும் இருக்கும். பெரியய்யா இனி நீங்கள் தான் எங்கடை கப்டன்" என்று இன்னுமொரு இளைஞனும் சொன்னான்.

'பெரியய்யா' கூச்சப்பட்டு தலையாட்டினார். அவரின் முகத்தில் பெருமித இழை ஓடியதை இவன் அவதானித்தான். 'பெரியய்யா' முதல் வேலையாய்ச் செய்த காரியம் இது:

'பெரியய்யா' எல்லோரையும் பார்த்து "வெட்கப்படாமல் சொல்லுங்கோ. யாருக்கு விடியமுதல் ரொய்லட் வாறது" என்று கேட்டார். கிட்டத்தட்ட எல்லோருமே கையுயர்த்தினார்கள். விடிய பழக்கம் இல்லாதவர்கள் ஏழு எட்டுப்பேர்தான் இருந்தார்கள். பெரியய்யா ஓட்டிகளிடம் போய் நிலைமையை விளக்கினார். அவர்கள் இன்னொரு கறள்பிடித்த மண்ணெண்ணெய் பரல் மூடியைக் கொடுத்தார்கள். அதில் நடுவில் வட்டமாக வெட்டப்பட்டிருந்தது. 'பெரியய்யா' அதை வளைத்து நெளித்து வள்ளத்தின் இன்னொரு பக்க விளிம்பில் பொருத்தி கம்பிகளால் இறுக்கிக் கட்டினார். ஒரு தடைவ அதில் இருந்து பார்த்தார். வள்ளத்தின் சட்டங் களில் கயிற்றைக் கட்டி அதை புதிய ரொய்லட்டுக்கு இழுத்து வந்தார். கயிற்றை கைகளில் சுற்றிப் பிடித்துக் கொண்டு இன்னுமொரு தடைவை இருந்து பார்த்தார். திருப்தியாய் எழுந்தார்.

(வலிகள் இன்னும்...)

# அது ஒரு பனைக்காலம்

சிங்கலிங்கம் றெஜிவோல்ட்

பனை எங்கள் குலதெய்வம் என்ற அளவுக்கு இருந்தது ஒரு காலம். ஒரு காலமென்றால், ஏதோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னெல்லாமில்லை. கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி (1960) க்குப் பிறகும் பனைதான் எல்லாத்துக்கும் துணை.

பனையின்றி வீடுமில்லை வாழ்வு மில்லை என்றிருந்தோம். வீடு வேய்கிறது, வேலியடைக்கிறது, மாட்டுக்குத் தீனி போடுறது, பெட்டி, கடகம், படுக்கிற பாய், நெல்லுக்காய வைக்கிற பாய், பந்திப்பாய், புட்டவிக்கிற நீத்துப்பெட்டி, காசு வைக்கிற கொட்டப்பெட்டி, அரிசி புடைக்கிறதுக்குச் சுளகு, தலைக்குப் பட்டை என்று எல்லாம் இழைக்கிறது பனையோலையில்தான்.

பனையினால்தான் பல காரியங்கள் நடந்தன. பனம்பழத்தில் பணியாரம் செய்தோம். அதைச் சுட்டுச் சூப்பிச் சுவைத்தோம். பனாட்டு வார்த்தோம். கூரையமைப்பதற்கும் பனையே துணை. அடுப்பெரிக்கக் கொக்காரை, அப்பச் சட்டிக்கும் புகையிலை உலர்த்துவதற்கும் ஊமல். வேலிக்கும் கோழிக்கூட்டுக்கும் மட்டை. கட்டுவதற்கு நார், பின்னுவதற்கு ஈர்க்கு என்றொரு வரிசை தனியாக நீளும்.

பிட்டுக்கும் கூழுக்கும் ஒடியல். முறித்தும் இடித்தும் தின்பதற்கு கிழங்கு. காயவைத்தால் புளுக்கொடியல். குடிப்பதற்குள். கள்ளுக்குடிக்காதவர் களுக்கு நுங்கு. இல்லையென்றால் பதநீர் (கருப்பனி). ருசிக்கக் கருப்பட்டி, பனஞ்சீனி. சலாகைகளில் ஏராளம் வேலைகள். நீர் இறைப்பதற்குப் பட்டை.

பின்னேயே. இரவும் பகலும் வந்து போனதும் பனங்கூடல்களின் பின்னிருந்தே என்றே எண்ணியிருந்தேன். அந்தளவுக்கு பனைகள் நிறைந்த உலகம் நமதாயிருந்தது. வானத்தைத் தாங்கி வைத்திருந்ததும் ஊரை ஏந்தி வைத்திருந்ததும் பனைகளே. பனையின் அழகில்தான் ஊரே மலர்ந்து கிடந்தது. ஈழத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் பனைதான் தமிழரின் அடையாளம், தமிழர் வாழ்வென்றிருந்தது.

ஆனால் இன்று?

பனைகள் அருகி விட்டன. சில ஊர்களில் பனைகளே இல்லை. இன்னும் சில ஆண்டுகளில் பனை என்றால் என்ன? என்று நம் பேரப் பிள்ளைகள் கேட்பார்கள். என்ன பதில் சொல்லப்போகிறோம்?

போர் தின்ற பனைகள் கோடிக் கும் அதிகம். பங்கருக்கும் ஷெல்லுக்கும் பலியாகிய பனைகள் எங்கள் தலைகளுக்கு நிகர். மிஞ்சியதை வீட்டுக்கும் வேறு தேவைகளுக்கும் என்று தறித்து முடித்து விட்டோம். ஆனால், இன்னும் பனைகளைத் தறிக்கும் வெறி தீரவில்லை. ஒரு பனையைத் தறிக்கும் போது இன்னொரு பனையை நடவேண்டும் என்று யாரும் சிந்திப்பதில்லை. இவ்வளவுக்கும் எளிதாக வளர்க்கக்கூடிய மரம் பனை.

மிஞ்சியிருக்கும் பனங்கூடல்களும் இன்னும் பத்து, இருபது ஆண்டுகளில் காணாமல் போய் விடும். ஒற்றைப் பனைகள் அங்கொன்றும் இங்கொன் றுமாக நிற்கலாம். ஆனால், அவையும் கூடிய கெதியில் காணாமல் போய் விடும்.



பனந்தும்பில் பலவகை அலங்காரப் பொருட்கள். வடலியில் குருத்து, வெட்டித்தின்னப் பூரான்... கூழ் குடிக்கப் பிளா, சோறுண்ண தட்டுவம் என ஆயிர முண்டு பனையில்.

எல்லாவற்றுக்கும் மேலாக பனை ஓலையில் தான் ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதிப்படித்தனர் நம் முன்னோர். எண்ணும் எழுத்தும் திருக்குறளும் இலக்கியமத்தனையும் வாகடமும் சோதிடமும் பனையோலைச் சுவடியில் தான் பதிந்ததும் பகிர்ந்ததும் நடந்தது.

தமிழே வளர்ந்தது ஓலைச் சுவடிகளி லன்றி வேறில்லைப் பராபரமே!

இப்படிப் பனையெங்கள் உயிருக்கு நிகர் என்றிருந்தோம்.

தமிழர்கள் வாழும் ஊரெங்கும் பனை நின்றது. பனை நிற்குமிடமெல்லாம் தமிழ் நிலம் என்பதே அடையாளம். பனங்கூடல்களின் பின்னிருந்தே சூரியன் எழுந்தது. மாலையில் சூரியன் மறைந்ததும் பனங்கூடல்களின் பின்னால் தான். நிலவு எழுந்ததும் விழுந்ததும் கூடப் பனங்கூடல்களின்



பனையை வளர்ப்பதற்கென்று ஆயிரம் திட்டங்கள் உண்டு. பனையைப் பாதுகாக்கவென ஆயிரமாயிரம் சட்டங்களுமிருக்கின்றன. இந்தத் திட்டங்களைத் தூக்கிக்கொண்டும் சட்டங்களைக் காவிக்கொண்டும் திரிகிறார்கள் ஆயிரமாயிரம் விண்ணாதி விண்ணன்கள்.

ஆனால், காணிகளைத் திருத்தித் துப்புரவு செய்வோர், பனையென்றால் துடக்கு என்றமாதிரி, கீரையைப் பிடிங்கி எறிவதைப் போலத் துடைத்து எறிந்து விடுகிறார்கள் எல்லாப் பனைகளையும் எல்லா வடலிகளையும். பெரிய கனரக வாகனங்கள் புரட்டியெறிகிற பனைகளை யும் வடலிகளையும் பார்த்தால் நெஞ்சு பற்றியெரிகிறது. பிள்ளையைக் கொலை பண்ணுவதைப் போல, ஒவ்வொரு வடலியையும் கொன்று தள்ளுகிறார்கள். போதாக்குறைக்கு மண்ணெண்ணெயை ஊற்றி அழிக்கிறார்கள்.

தலைமுறைகளையும் நம் முன்னோ ரையும் வாழ வைத்த கற்பகதரு எத்தனை வாஞ்சையோடு, ஒரு தாயைப் போல எங்களையெல்லாம் காத்தது. இதை யெல்லாம் எப்படிச் சுலபமாக மறந்தோம்? எங்களுக்கு என்ன வியாதி வந்தது, வெறி கொண்டவர் போலத்தானே வளர்ந்து தமிழ்க் குலத்தைக் காத்த பனைகளை, நம் குல தெய் வங் களை அழிக்கிறோம்?

கைதடியில் பனை ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. கொழும்பில் பனை அபிவிருத்திச்சபை உள்ளது. ஆண்டுக்கு ஆண்டு நிதியும் தாராளமாக ஒதுக்கப்படுகி றது. ஆட்கள், அப்பு சேனைகள் என்று பலதும் பத்தும் இருக்கு. ஆனால்,

தனியொருவர் மில்க்வைற் கனகராஜா செய்த அளவுக்கு எந்தப் பயலும் பனையை வளர்க்கவில்லை. பனை நடுகை என்றால் அதை உருப்படியாகச் செய்தது அந்த மனுசன் மட்டும் தான். அவர் நாட்டிய பனைகள்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக மிஞ்சியிருக்கிறது.

பனை நடுகை என்பது இப்பொழுதெல்லாம் பம்மாத்து விளையாட்டு என்று சனங்கள் கொடுப்புக்குள் சிரிக்கிற அளவுக்குத்தான் தலைவர்களின் காரியங்கள் நடக்கின்றன. கணக்குக் காட்டுகிற வேலைகள் இப்படித் தானிருக்கும்.

ஆண்டுக்கு ஐந்து லட்சம் பனைகளை நடுகிறோம் என்று சொல்லப்படும். கணக்கைக் கூட்டினால் உலகமே பனைகளால் தான் நிறைந்திருக்கும். ஆனால், ஊரே பனையின்றி வெறிச் சோடிப் போயிருக்கே...!

ஆனையிறவு தொடக்கம் தீவின் வெளிகளில் பனைக ளைத் தாராளமாக நடலாம். பெரிய நெடுஞ்சாலை வழிநெடுக பனைகளை வளர்க்கலாம். கிழக்கு மாகாணத்தில் தாராளமாகப் பனைகளை வளர்க்கலாம். யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல், எதற்கும் தொல்லை தராமல், நீருமின்றி, போசிப்புமின்றித் தானே வளரும் தால விருட்சமல்லவா

எங்கள் தாயவள்!

மரபைப்பற்றியும் பண்பாட்டைப் பற்றியும் அதிகமதிகம் பேசுகிறோம். மரபுரிமைகள் அழிவதைப் பற்றிக் கவலைப்படுகிறோம். முதுசம் என்ற நம் பெரும் சொத்து, நம்முடைய முகம், நம்முடைய அகம் என்ற பனை அழியும்போது மட்டும் நாம் பேசாதிருக்கிறோம். பனையென்பது தீண்டத்தகாத ஒன்றாகியதன் விளைவா இது? எதற்காக பனைகள் பேணுவாரின்றிப் பயனற்ற ஒன்றென ஆனது?

நம்முடைய மரபின் வேர்கள் பல. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குண முண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலமுண்டு. எல்லா வேரும் இணைந்து வளர்ந்ததே மரபாகும். பனை, தமிழின் மூலவேர். அதனால்தான் அதைத் தாலமூலவிருட்சம் என்றறிந்தனர் முன்னோரும் மூத்தோரும்.

பனை நின்றாலும் நூறு வருசம். பட்டாலும் நூறு வருசம் என்பார்கள். பர்மாத் தேக்கை உலகம் கொண்டாடு வதைப் போல, எங்கள் பனைகளை நாங்கள் மட்டுமல்ல, ஐரோப்பியர்களும் கொண்டாடிய காலமொன்றிருந்தது. இன்றும் அவர்கள் பனைகளை மறக்கவில்லை. நாங்கள் தான் மறந்து விட்டோம்.

சிங்கள மக்கள் அரச மரங்களை நாட்டிப் போற்றி வளர்க்கிறார்கள். அரசு என்பது சாதாரணமான ஒன்றல்ல. அதனுடைய வேர் ஆழமானது. அரசு போல் வேரூன்றி... என்று தெரியாமலா சொன்னார்கள். அந்த அரச மரம் எங்களூர்களிலும் இப்பொழுது தாராளமாக நடப்படுகிறது. அரசு தளைத்தால் அக்கம்பக்கமெல்லாம் கிளை விரிக்கும். கிளையோ பெரிய இடம் பிடிக்கும். ஆகவே, அரசு இடம்பிடிக்கும்.

நாங்கள் எங்கள் பனைகளையே அழித்து வருகிறோம். பனைக்குப் பதிலாக அரசா?

சொந்த முகத்தையும் அகத்தையும் அடையாள அழிப்புச் செய்வதற்கு எங்களை விடச் சிறந்தவர்கள் வேறு யாருமில்லை.



● நோக்கன்

# நட்புக்காக உயிரைக் கொடுத்த நாய்

நன்றி பாராட்டுவதில் நாய்க்கு நிகர் நாயே தான் எனப் பல தடவை கண்டும் கேட்டும் இருக்கிறோம். இதை நிரூபிக்கும் வகையில் பல படங்களைப் பார்த்திருக்கிறோம்.நாய்களின் விசுவாசத்தைக் காட்டும் வீடியோக்கள் பல இணையங்களில் உலாவவும் செய்கின்றன. ஆனால் அவற்றில் பலவற்றை நம்பமுடிவதில்லை. அவற்றை பார்க்கும் தோறும் "செட்- அப்" ஆக இருக்குமோ? என்று ஐயுறவும் ஏற்படுவது சகஜம். ஆனால் தன் நன்றி விசுவாசத்துக்காக- தன்னை வளர்த்தவருக்காக - யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் தன்னுயிரையே கொடுத்து நெஞ்சை நெகிழ வைத்துள்ளது "சீபா" எனும் பெண் நாய். கல்வியங்காடு, ஜீ.பி.எஸ். வீதியில் இருக்கும் செல்வரட்ணம் பிரஷாந்த் என்பவர் தான் "சீபாவின்" வளர்ப்பாளர், நண்பன், சகோதரன், தந்தை எல்லாமுமே.அவரையே எட்டடி நாகபாம்பிடமிருந்து சீபா, தன்னுயிரைக் கொடுத்துக் காப்பாற்றியிருக்கிறது. "சீபாவின்" இழப்பின் வலியில் இருந்தும், பாம்பைக் கண்ட அதிர்ச்சியில் இருந்தும் முற்றாக மீளாத நிலையில், நடந்தவற்றை பிரஷாந்த் மெல்ல மெல்லச் சொன்னார்.

## சீபா எனக்கொரு பிள்ளை போல...

"நான் கனடாவிலை இருந்து விடுமுறைக்காக வீட்டிலை எல்லாரோடையும் வந்திருக்கிறன். இப்ப எட்டு வருசத்துக்கு முன்னம் "டோமன் செபேட்" இன நாய் ஒண்டை யாழ்ப்பாணத்திலையே வாங்கி வளர்க்கத் தொடங்கினனான். அதுதான் சீபா. குட்டியா வாங்கின நாள் தொடக்கம் முதல் மூண்டு வருஷமா - நான் வெளிநாடு போக முன்னம்- நான் தான் வளர்த்தனான். சீபாவை வளர்த்தனான் எண்டு சொல்லிறதைவிட என்ரை பிள்ளைபோலத்தான் பார்த்தனான்.

## ஸ்கைப்பில் வளர்த்த உறவு

பிறகு கனடாவுக்குப் போனாலும் மொபைலிலை "ஸ்கைப்பிலை" சீபாவைப் பார்ப்பன். சீபாவோடை கதைப்பன். அதோட நான் கதைக்கேக்க மற்றவையளிட்டை இருந்து போனைப் பறிச்சுக் கொண்டு போய் வைச்சு என்னைப் பார்த்துக் கொண்டே இருக்கும். என்னைக்காண அதுக்கு ஏனோ தெரியாது நல்ல விருப்பம். என்னைப் பொறுத்தவரை சீபா என்ரை குடும்பத்திலை ஓராள் மாதிரித்தான் நான் பார்க்கிறன். போன ஐஞ்சு வருஷம் நான் கனடா போய் வந்தாலும் இலங்கையில நிண்ட நாள் தான் கூட. இப்ப எட்டு மாசமா இங்கை தான் நிற்கிறன்.

நான் எங்கை போனாலும் சீபா என்ரை கூடத்தான் வரும். நான் சில நேரம் வெளியாலை போனாலும் நான் வரும்வரை சீபா என்னைப் பாத்துக் கொண்டேதான் இருக்கும். என்ரை கையாலை சாப்பிட அதுக்கு விருப்பம் கூட. என்னிலை அப்பிடி ஒரு பாசம்.

வழமையா நாங்கள் வீட்டுக்குப் பின்னாலை உள்ள மாமரத்துக்குக்கிட்ட கதிரையைப் போட்டுட்டு வட்டமா இருந்து கதைக்கிறனாங்கள். அத மாதிரித்தான் போன திங்கட்கிழமையும் பின்னேரம் ஐஞ்சு மணிபோலை மாமரத்துக்குக் கீழ இருந்து கதைச்சுக் கொண்டிருந்தம். பொழுது போக்கா இடைக்கிடை பின்னாலை இருக்கிற கோழியளுக்கும் சாப்பாடும் போட்டுக் கொண்டிருந்தம். சீபாவும் வழமையா இருக்கிறது மாதிரி, நான் இருந்த கதிரைக்குக் கீழ படுத்திருந்தது. திடீரெண்டு எழும்பி பின் மதில் பக்கமிருந்த சின்னக் கொட்டில் பக்கம் பார்த்துக் குலைக்கத் தொடங்கிட்டுது. விடாமை குலைச்சிது.

## எட்டடி நாக பாம்பும் சீபாவும்

மதிலுக்குக்கிட்ட போறதும், வாறதுமாக சீபா குலைக்க நாங்க கொஞ்சம் அலேர்ட் ஆகிட்டம். ஏனெண்டால் சீபா சும்மா எல்லாம் குலைக்காது. சீபா போன பக்கம் பார்த்தா பெரிய நாக பாம்பு ஒண்டு சீறிக்கொண்டு வந்திது. சீபா அதோடை மோதக் கிட்டக் கிட்ட போகத் தொடங்கிட்டுது. சீபாவைப் பாதுகாப்பாக வைக்கிறதுக்காக அதைக் கொண்டு போய் வீட்டுக்குள்ளை விட்டு, கதவை சாத்திப் போட்டு, பாம்பைக் கலைக்கிற வேலையைப் பாத்தம்.

பாம்பு இன்னும் முன்னுக்க வந்து எங்களிலை பாயிற மாதிரி படமெடுத்திது. எங்களுக்குப் பயமாப் போட்டுது. சீபா அந்த இடத்துக்கு எப்பிடியோ கதவை இடிச்சுத் தள்ளிக் கொண்டு வந்திட்டுது. திரும்பவும் சீபாவைக் கொண்டுபோய் வீட்டுக்க விட்டம். பிறகு பாம்பைக் கலைக்கிற வழியைப் பார்த்தம். அது சாதாரண பாம்பில்லை. கிட்டத்தட்ட எட்டடிக்கு மேல தானிருக்கும். பல வருஷப்பட்ட வயதான பாம்பெண்டு இதைப் பார்த்த அன்ரி சொன்னவா. அவ்வளவு விசம் அந்த நாகபாம்பு. எங்கடை வீட்டிலையிருந்து கன வீடுகள் தள்ளியும் அந்த நாகம் சீறின சத்தம் கேட்டிருக்கு.

## சீபாவின் சாகசம்

படமெடுத்தபடி,முன்னுக்கு, முன்னுக்கு வந்து சீறிப்பாயத் தொடங்கிட்டம். நான் என்ரை கையிலை வைச்சிருந்த 'கெவர்' தடியாலையும் தட்டிப் பார்த்தன். ஒண்டும் செய்யேலாமப் போக, வீட்டிலை நிண்ட ஆக்களெல்லாம் பெருசாக் கத்தத் தொடங்கிட்டினம். அப்ப திடீரெண்டு திரும்பவும் சீபா எண்ணெண்டோ வந்து, எனக்கு மேல கொத்த வந்த பாம்பை, பாய்ஞ்சு பிடிச்சுது. அப்பிடியே பாம்பைக் கௌவிக் கொண்டு நாங்கள் நிண்ட இடத்தில இருந்து கனதூரத்துக்கு அங்கால, முத்தத்துக்கு கொண்டுபோய் சீபா அதை நல்லாக் காயப்படுத்திட்டுது. அதுக்கிடையிலை பாம்பின்ரை பல்லு சீபான்ரை காலிலை பட்டிட்டுது. காயப்பட்ட பாம்புக்கு பலம் குறைய, அதை மெல்லத் தட்டி கோழிக்கூட்டுக்க அடைச்சிட்டம்.

## உயிர்ப் போராட்டம்

பிறகு சீபாவை உடனடியாக நான் என்ரை மருமகன் டேவிட்டோட சேர்ந்து, டொக்கரிட்டைக் கொண்டு ஓடினன். 'சேலைன்' ஏத்தி மருந்தும் குடுத்தம். பெரிய போராட்டத்துக்குப் பிறகு, இரவு எட்டு மணிபோலை சீபா செத்திட்டுது. பிறகு சீபாவை வீட்டுக்குக் கொண்டு வந்து, குடும்பத்திலை உள்ளாக்களுக்கு என்ன செய்வமோ, அதுமாதிரி எல்லாம் செய்து மாலை மரியாதையோடை பெரிய மேசை ஒண்டிலை கிடத்தி வைச்சம். செவ்வாய்க்கிழமை முறைப்படி , மரியாதையோடை வீட்டுக்கு பின்புறம் சீபாவை அடக்கம் செய்தம். சீபான்ரை அடக்கத்துக்கு எங்கடை சில சிநேகிதரும் வந்தவை.

## மாயமான நாகம்

கோழிக்கூட்டிலை இருந்த பாம்பு இரவு மூண்டு மணிவரை கூட்டுக்குள்ள சுத்திச் சுத்தி வந்து கொண்டிருந்தது. திரும்பவும் நாலு மணிக்குப் போய் பாரக்கேக்குள்ளை பாம்பைக் கோழிக் கூட்டுக்க காணேல்லை. மாயமாப் போட்டுது. இன்னும் பாம்புக்கு என்ன நடந்தெண்டு தெரியாது. பாம்பைக் காணாதது இன்னும் மாயமாத்தானிருக்கு.

கொஞ்ச நாளுக்கு முன்னாலையும் இப்பிடி ஒரு பாம்பு வந்து பிடிச்சுக் கொண்டு போய் காக்கைதீவிலை விட்டம். அதே மாதிரித்தான் இதையும் கொண்டுபோய் விடுறதுதான் எங்கடை பிளானாக இருந்தது.அதுக்குள்ள கோழிக்கூட்டுன் ஓட்டைக்குள்ளால போட்டுது. ஆனா அந்தச் சின்ன 'நெற்' ஓட்டைக்குள்ளால அது போனதெண்டது அதிசயம் தான்.

என்னைப் பொறுத்தவரை சீபா , இன்னும் எங்களோடை இருக்கிற மாதிரித்தான் இருக்கு. அண்டைக்கு சீபா மட்டுமில்லாட்டா பாம்புக்கு நான் தான் பலியாயிருப்பன்" என்று சீபாவின் நினைவுகளைச் சொல்லி முடித்தார் பிரஷாந்த்.

வழக்கமாக "உனக்காக உயிரையும் கொடுப்பேன்" என்று ஒரு பேச்சுக்கு எல்லோரும் சொல்வோம். ஆனால் அப்படி இக்கட்டான கட்டம் வந்து விட்டால் நழுவி விடுவது மனிதக் குணம். எனினும் தன்னை வளர்த்தவருக்காக நாகத்தோடு போராடி உயிரைக் கொடுத்த 'சீபா' உண்மையிலேயே மனிதரை விடவும் மேலான பிறவிதான்.

## யாழ். கல்வியங்காட்டில் நெகிழ வைத்த சம்பவம்



சீபாவின் அடக்க நிகழ்வு

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## உயிர்களோடு விளையாட்டா?

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இரு மாவட்டங்களிலும் மொத்தம் 410 பேர் தங்கள் உடல்களில் குண்டுச் சிதறல்களைச் சுமந்தவாறு வாழ்ந்து வருகின்றனர் - என்ற தகவலை வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்றில் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த 410 பேரில் 132 பேர் பாடசாலை மாணவர்கள். ஜூலை மாதம் நாடாளுமன்றத்தில் "குண்டுச்சிதறல்களோடு வடக்கில் வாழ்பவர்கள் விபரத்தைத் தந்தால் அவர்களுக்கு சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுப்பேன்" என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அதன் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களின் செயலர்களையும் குறித்த விபரங்களை திரட்டி அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளார்.

ஆனால் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இரு மாவட்ட செயலர்கள் மாத்திரமே குண்டுச் சிதறல்களோடு வாழ்பவர்களின் விபரத்தை திரட்டி அனுப்பியுள்ளனர். ஏனையோர் அது குறித்து எந்த அக்கறையும் எடுக்கவில்லை. உண்மையில் போருக்கு அதிகம் முகம் கொடுத்தவர்களும், பாதிக்கப்பட்டவர்களும் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கிளிலேயே உள்ளார்கள். முள்ளிவாய்க்காலில் சிக்குண்டவர்களில் பெரும்பான்மையானோர் அவர்களே. குண்டுகளுக்கு மத்தியிலேயே அவர்களது பெரும்பான்மையான நாட்கள் கழிந்திருந்தன. எனவே குண்டுச்சிதறல்களை அகற்றுவதற்கான சிகிச்சை அவசரமாகவும், அவசியமாகவும், அதிகமாகவும் தேவைப்படுவது அவர்களுக்கே.

இருப்பினும் இத்தகைய ஒரு மனிதாபிமான பிரச்சினையைக் கூட சரிவரக்கையாளாமல், குறித்த மூன்று மாவட்ட செயலர்களும் அலட்சியமாக இருப்பது மனித உயிர்களோடு விளையாடுவதற்கு ஒப்பானதாகும். தற்போது பாதிக்கப்பட்டோரின் உடம்பிலுள்ள குண்டுச் சிதறல்கள் நாளடைவில் பெரும் பின்விளைவுகளை அவர்களுக்கு ஏற்படுத்தக்கூடும். அதற்கு முன்னதாக உரிய சிகிச்சையை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்க முடியும்.

போருக்கு அதிகம் முகம் கொடுக்காத வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே 410 பேருக்கு குண்டுச் சிதறல்கள் இருக்கின்றதென்றால் போரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ளோரின் விபரங்கள் கிடைத்தால் இந்த எண்ணிக்கை இன்னும் சில ஆயிரங்களாக உயரும். வழக்கமாக எந்தவொரு விடயத்திற்கும் பின்னடிக் கும் அரசு கூட, "விவரங்களைத் தாருங்கள் உடனடியாக அறுவை சிகிச்சைக்கு உதவுகிறோம்" என்று வலியச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வாய்ப்பை பயன்படுத்தி பாதிக்கப்பட்டோரின் எதிர்காலத்தை மலர்வானதாக்குவதே ஒரு உண்மையான அரச பணியாளரின் பொறுப்பு. அந்தப் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதும், அத்தியாவசியமான பணியைக் கூட அலட்சியம் செய்வதும் அரச அதிகாரிகளுக்கு அழகாகாது.

இனியாவது அலட்சியத்தைக் கைவிட்டு, குண்டுச் சிதறல்களோடு வாழ்பவர்களின் விபரங்களைத் திரட்டி அதை உரியவர்களுக்கு அனுப்பிவைக்க உரிய மாவட்டச் செயலர்கள் முன்வரவேண்டும். மனித உயிரின் மாண்பினை அறிந்தவர்கள் இனியாவது திருந்துவார்கள்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



தெகிடியான்

# 'ஜெயசிகுறு' அணைக்கப்பட்ட நெருப்பாறு

தமிழீழ விடுதலை போராட்டம் விழி பிதுங்க வைக்கும் அற்புதமான சாதனைப் பயணங்களால் நிறைந்தது. இந்த மாபெரும் சாதனை நிமிர்வு தாயக மண்ணுக்காக உரமாகி போன மாவீரர்களின் அற்புதமான தியாகங்கங்களால் நிரம்பப்பெற்றது. கரந்தடிப் படையாக தொடங்கிய போராட்டத்தை மரபு வழி இராணுவமாக உலகமே வியக்கும் வகையில் மாற்றிய பெருமை ஜெயசிக்குறு சமரையே சாரும். 'எடிபல' படை நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் எந்த எதிர்ப்பையும் பெருமளவில் காட்டாததால், அவர்களின் முதுகு எலும்பு முறிக்கப்பட்டு விட்டதாக எக்காளம் இட்ட படி அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையால் தொடங்கப்பட்ட 'ஜெயசிகுறு' படை நடவடிக்கை விடுதலைப் புலிகளின் மலையான நிமிர்வுக்கே இறுதியில் அடித்தளமிட்டது.

விடுதலைப்புலிகளின்கட்டுப்பாட்டிலிருக்கும் ஏ-9 நெடுஞ்சாலையைக் கைப்பற்றி தென் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வரை கட்டுப்பாட்டுப் பகுதியை ஏற்படுத்தும் நோக்கோடு சிறிலங்கா அரசதரப்பால் இராணுவ நடவடிக்கையொன்று திட்டமிடப்பட்டது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை ஊடறுத்து, ஏ-9 பாதையை முற்று முழுதாகத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதன் மூலம் பல அனுகூலங்களை அடைய இலங்கை இராணுவம் நினைத்தது. ஏ-9 பாதை விழுந்தால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி இரு கூறாக்கப்படும். இதனால் அவர்களின் விநியோக வலிமை, போரிடும் ஆற்றல், ஆளணி என்பன குறைவடைந்து நாளடைவில் புலிகள் தாமாகவே பலவீனமடைந்து, இறுதித் தோல்விக்கு செல்வர் என்று கணிப்பிடப்பட்டு தொடங்கப்பட்டதே ஜெயசிக்குறு நடவடிக்கை. ஒரே நேரத்தில் இரு முனைகளை உடைத்துக் கொண்டு வன்னியை வீழ்த்த ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் நேரடி மேற்பார்வையில் இருபதாயிரம் படை வீரர்களைக் கொண்டு இந்நடவடிக்கை தொடங் கப்பட்டது. வவுனியாவிலிருந்து ஏ-9 நெடுஞ் சாலை வழியாக ஏற்கனவே இலங்கை அரச படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த கிளிநொச்சி வரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே முதன்மைத் திட்டம். இதனாலேயே இந்நடவடிக்கை இரு முனைகளில் ஒரே நாளில் தொடங்கப்பட்டது. ஏ-9 நெடுஞ்சாலையை மையமாக வைத்து தாண்டிக் குளத்திலிருந்து ஓமந்தை நோக்கிய ஒரு முனையும், கிழக்குப் புறமாக மணலாற்று இராணுவ முகாம்களிலிருந்து நெடுங்கேணி நோக்கிய ஒரு முனையும் திறக்கப்பட்டன. பின் ஓமந்தையிலிருந்து ஏ-9 வழியாக தொடர்ந்து முன்னேறுவதும், நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் வரை இன்னொரு முனையால் முன்னேறி புளியங்குளத்தில் இரு முனைப் படைகளும் ஒன்றிணைந்து தொடர்ந்தும் கிளிநொச்சி நோக்கி முன்னேறுவது என்ற மூலோபாயத் திட்டத்துடன் அரசபடைகள் செயற்பட்டன. இந் நடவடிக்கையில் மிக உச்ச அளவில் வான்படை மற்றும் கவசப்படைகளை இலங்கை அரசு ஈடுபடுத்தியது

நீண்ட பெரிய வழி மறிப்புத்தாக்குதல்களை செய்ய புலிகளுக்கு பலமில்லை என்ற எதிர்பார்ப்பும் இந்த நடவடிக்கை வெற்றி அடையும் என்ற நம்பிக்கை அனுருத்த ரத்வத்தைக்கு இருந்தது. ஆனபோதிலும் போராளிகளின் விடுதலை வெறியும் தாயக உணர்வும் ஓயாத மாபெரும் சமரொன்றை எதிர்கொள்வதற்கு புலிகள் அணிகளை தயார்படுத்தியது. தலைவர் பிரபாகரன் தலைமையேற்க தளபதிகளான தீபன், ஜெயம், பால்ராஜ் ஆகியோரின் வழி நடத்தலில் களமிறங்கின விசேட அணிகள். விக்ரர் கவச எதிர்ப்பு படையணி உட்பட புலிகளின் அணிகள் ஆரம்பத்தில் பெரிய அளவில் பதில் தாக்குதல்கள் எதையும் முன்னெடுக்கவில்லை படையினரின் அகலக்கால் பதிப்புக்காக புலிகள் காத்திருக்க வைக்கப்பட்டனர். ஏ-9 நெடுஞ்சாலையில் மாங்குளம் வரை இலங்கை அரசபடைகள் வேகமான முன்னேறின. இந்த முன்னேற்றம் தமக்கு தாமே கட்டும் சவக்கிடங்கு என்பதை வெற்றிகளிப்பில் உணரவே இல்லை.

10.06.1997 அன்று தாண்டிக்குளம் இராணுவக் கூட்டுப்படைத்தளமும் அதன் பின் ஜூன்மாதம் 24 ஆம் நாள் மீண்டுமொரு வலிந்த தாக்குதலை நடத்தி விடுதலைப்புலிகள் ஜெயசிக்குறுமூலம் இலங்கை அரசபடையினரால் கைப்பற்றப்பட்டிருந்த பன்றிக்கெய்த குளம், பனிக்கநீராவி, பெரிய மடுப் பகுதிகளில் அமைந்திருந்த படைத்தொகுதிகளும், பின் ஓமந்தையில் அமைந்திருந்த ஆட்லறிகள் உள்ளடங்கிய இராணுவக் கூட்டுத் தளமும், 01.08.1997 அன்று இதன் பின் ஜெயசிக்குறு சமரின் பிரதான வழங்கல் மையமாக இருந்ததும் களமுனைகளில் முன்னேறிய படையினருக்கு விநியோகத் தளமாகச் செயற்பட்டதுமான கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் முகாமும் துடைத் தழிக்கப்பட்டமை படையினரை ஆட்டங் காண வைத்தது.

இதன் பின் நிமிர்வடைந்தன புலிகள் அணிகள். படையினர் போய் சேர வேண்டிய கிளிநொச்சி நகரம் புலிகளால் தாக்குதலுக்குள்ளானது. மற்ற வலிந்த தாக்குதல்கள் போலன்றி இம் முறை நகரை நிரந்தரமாகக் கட்டுப்பாட்டுள் கொண்டு வரும் நோக்குடன் புலிகள் தாக்குதலைத் தொடங்கினர். 1996 ஒக்டோபரில் புலிகளின் வசமிருந்த கிளிநொச்சி நகரை சத்ஜெய-1,2,3 நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசபடை கைப்பற்றியிருந்தது. அந்நகரத்தை மீளக் கைப்பற்றவதற்காக 2.2.1998 அன்று புலிகள் தாக்குதலைத் தொடங்கினர். எதிர்பார்த்தது போல் தாக்குதல் வெற்றியளிக்கவில்லை. குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டுமே கைப்பற்றித் தக்கவைத்துக் கொண் டனர் புலிகள். எனினும் செப்ரெம்பர் 30 ஆம் திகதி "ஓயாத அலைகள்-2" என்ற பெயரோடு பாய்ந்த புலிகள் வெறும் 3 நாள்களில் ஜெயசிகுறு என்ற நெருப்பாற்றை ஊதி அணைத்தனர்.

13 மே 1997 அன்று தொடங்கப்பட்டு பல நாட்களையும், பல்லாயிரக்கணக்கான படையினரையும் (சுமார் 5 படைபிரிவுகளையும்) இழந்து தொடர்ந்த இந்நடவடிக்கை இலக்கை அடையாமலேயே இடையில் இலங்கை அரசபடைகளால் கைவிடப்பட்டது. இந்த படை நடவடிக்கைக்கு எதிராக 1998 செப்ரெம்பர் 30 ஆம் திகதி கொடுத்த மரண அடிதான், ஜெயசிகுறுவைக் கைவிடுவதாக அரசை அறிவிக்க வைத்தது. இலங்கைப் போரியல் வரலாற்றில் அதிக நாட்கள் இடம்பெற்ற படை நடவடிக்கையாக ஜெயசிகுறு பதிவாகியுள்ளது.

ஜெயசிகுறு நடவடிக்கைக்கு எதிரான வெற்றி குறித்து புலிகளின் தலைவர் பிரபாகரன் இப்படிச் சொல்லி இருந்தார்,

**"தமிழர் பிரதேசத்தில் அகலக்கால் நீட்டுவதும், நீட்டிய காலை நிலையாக வைத்திருப்பதும் எவ்வளவு ஆபத்தான விடயம் என்பதை சிங்களம் ஜெயசிக்குறு சமரில் கற்றறிந்திருக்கிறது"**

# 10,000 குழந்தை வேட்டைகள்



யதார்த்தன்

நெடுங்கம்பளச்சாலைகளையும், கட்டடங்களையும் , மேலைத்தேச தொழிநுட்ப வருகையையும் மட்டுமே இன்றைய சமூகம் அபிவிருத்தி என்பதாகக் கருதுகின்றது. அபிவிருத்தி அல்லது நாகரிகமைடைதல் என்பது, இத்தகைய வெளிப்பகட்டு குறிகாட்டியாக நெடுநாட்கள் சமூகத்தில் நிலைப்பதில்லை. யதார்த்தத்தின் சிறு துளியின் வெளிப்பாடு கூட சமூகம் கட்டிக்காக்கும் போலி நிலைகளை போட்டு உடைத்துவிடும். சமீபத்தில் வெளியான ஒரு புள்ளி விபரம் இலங்கைத்திருநாட்டில் சமூக அமைப்புக்களின் போலி படோ படங்களைப் போட்டு உடைத்துள்ளது. சமூகத்தில் எரிந்துகொண்டிருக்கும் அபாயம் மிக்க பிரச்சினையை அது முன்வைத்துள்ளது. நாட்டின் அடிப்படை உரிமை, பண்பாடு, மனிதத்துவம் என்பவற்றின் மீது அப்புள்ளிவிபரம் சமூக இடைவெளியை அல்லது பிறழ்வைச் சுட்டிக்காட்டி கேள்வி கேட்டுள்ளது. நாட்டின் ஒவ்வொரு பிரஜை மீதும் கேட்கப்படும் கேள்வியாகவே அது இருக்கின்றது.

சமூகத்தின் எதிர்காலம் என்று சொல்லப்படும் சிறுவர்கள் மீது நடத்தப்படும் துஷ்பிரயோகம் தொடர்பில் வெளியான ஆய்வறிக்கை, கடந்த வருடம் மட்டும் 10000 க்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதை பகிரங்கப்படுத் தியுள்ளது. குறிப்பாக தலைநகர் கொழும்பிலேயே மிகச்செறிவான முறைப்பாடுகள் குவிகின்றன. இதில் கவனிக்கப்பட வேண்டியது அலுவலக ரீதியாக பதியப்பட்ட முறைப்பாடுகள் மட்டுமே இந்தப் புள்ளிவிபரத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன.

கௌரவம், பயம், அடக்குமுறை என்பவற்றின் காரணமாக முறையிட முடியாத ஏராளம் மௌன முறைப்பாடு கள் இதைவிட பல மடங்கில் உறங்கிக்கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது.

தந்தையால் துஷ்பிரயோகிக்கப்படும் மகள் மார், ஆசிரியரால் தவறாக தொடப் படும், கையாளப்படும் குழந்தைகள், வறுமையில் எங்கோ மூலைகளில் உடல் சிதைய உழைக்கும் குழந்தைகள் என்று பல லட்சம் மௌன முறைப்பாடுகள், முறைப்பாட்டு பத்திரங்களுக்கு மிகத் தொலைவாக நடந்தவண்ணம் உள்ளன. இந்தச் சமூகத்தின் மிகப்பெரிய அபத்தமாக இந்த மௌன முறைப்பாடு கள் நீண்டு கிடக்கின்றன.

இங்கே சிறுவர் வன்முறை என்பது இரண்டு விதமாக நிகழ்கின்றது. ஒன்று உடல் ரீதியான இம்சிப்பு. இரண்டாவது உள ரீதியான இம்சிப்பு. இவை இரண்டும் ஒன்றை ஒன்று பற்றி ஓடும் நிலைகளாகவே இருக்கின்றன.

சிறுவர் வன்முறை என்பது வெறுமனே வேலைத்தளங்களிலோ, பற்றைக்காடுகளிலோ மட்டும் நடப்பதில்லை. அடிப்படையில் சிறுவர்கள், சிறுமிகள் எங்கு எல்லாம் புழங்குகின்றனரோ அங்கெல்லாம் அவர்களைக் காவு கொள்ளும் மனித மிருகங்கள் வேட்டைக்கு தயாராகிக் காத்திருக்கின்றன. பெற்ற குழந்தையை, சகோதரியை, பக்கத்து வீட்டு குழந்தையை என்று அந்த மிருகங்கள் குடும்ப அலகுகளின் பாதுகாப்பு வட்டத் தில் கூட இருக்கின்றன. அடிப்படை உரிமைகளை மறுத்தல், பாலியல் ரீதியான தொடுகைகள், வற்புறுத்தல்கள் குடும்ப அமைப்புக்குள் ஏராளமாக நடக்கின்றன. இப்படியான துஷ்பிரயோகங்களில் ஏதேனும் ஒன்று பிடிபடும் போது அதை வெறும் செய்தியாக ஊடகங்கள் கடந்து போகும். ஆனால் நாம் கடந்து செல்லும் இடங்களில் குடும்பம் எனும் பாதுகாப்பு அமைப்புக்குள், வேலிகள் பயிரை மேய்கின்றன. தாம் மேயப்படுவது தெரியாமல், வேட்டையாடப்படுவதை சொல்ல பயத்துடன் பிஞ்சுகள் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டு அழிந்து போகின்றனர்.

இதேபோன்று பாடசாலைகள், கல்வி நிலையங்கள் என்பவற்றில் நிகழ்த்தப்படும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளும் ஏராளமானவை. அடிப்படையில் பார்க்கப்போனால் நம் தேசத்தின் கல்வி முறையே நாட்டின் மிகப்பெரிய சிறுவர் வன்முறையை செலுத்தும் தாபனமாகவே இருக்கின்றது. திணிப்பு கல்வி முறைமை தொடர்ச்சியாக சிந்தனை அற்ற பரீட்சை 'மிசின்களாக' குழந்தைகளைச் மாற்றியமைத்து அவர்களின் கனவுகளைத் தின்றுவிடுகின்றது. ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் இருந்து உயர் தரப் பரீட்சை வரை பாடசாலைகள் இயந்திர உற்பத்தி நிலையங்களாக இருப்பதை அரசு உணரவேயில்லை. சரியான பாலியல் அறிவற்ற சமூகத்தை பாடசாலைகளே உருவாக்குகின்றன. பாடசாலைகளில் ஆசிரியர்கள் குழந்தைகளைத் தவறாக கையாள்வதை, "அட இது வழமை தானே" என்று செய்தியாக மட்டும் படித்து விட்டுப் போகும் சமூகமாக நம்மை எது மாற்றியது?


இராணுவத்துக்கும், உல்லாசத்துக்கும் பொருளாதாரத்தை கொட்டும் இந்த தேசத்தில் வறுமையால் குழந்தைத் தொழிலாளராகும் அவலத்தைப் போக்குவதற்கு கஞ்சத்தனம் காட்டப் படுகின்றது. பெரும்பாலும் வறுமை காரணமாகவே பல சிறுவர்கள் பாடசாலைகளை விட்டு விட்டு தொழில் நிலைக்குள் நுழைகின்றனர். சில சமயங்களில் அவர்களை தேடிப்பிடித்து வில்லங்கமாக பாடசாலைக்கு அனுப்பும் அரசு, அவர்களின் வறுமைக்கான மூல காரணமான தன்னுடைய சிக்கல்களை தீர்ப்பது பற்றி சிந்திக்காது, சட்டம் என்ற பெயரில் குழந்தைகளை வேட்டையாட மட்டும் பழக்கப்பட்டிருப்பது எத்தனை நகை முரண்.

இத்தகைய சிறுவர் வன்கொடுமைகள் தொடர்ச்சியாக நிகழும் பட்சத்தில் எதிர்காலத்தில் மன நோய் கொண்ட மோசமான சமூகத்தையே நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும், புதுகட்டடக்காட்டுக்குள்ளும், சாலைகளிலும் உளநோய்களையும் பாலியல் வக்கிரங்களையும் சுமந்தபடி எங்களுடைய குழந்தைகள் இளைஞர்களாகி நடந்து செல்வார்கள். போலிப் பண்பாடுகளும், பிரசங்கங்களும் அப்போது வலுவிழந்து தேசத்தின் உண்மை உடலை நிர்வாணமாக்கும். சமூகம் மெல்ல தொலைந்து கொடும் வேட்டைக் காரர்களும் மிருகங்களுமே மிஞ்சும்.

நாட்டிலும் சர்வதேசத்திலும் ஏராளமான நிறுவனங்களும், செயற்பாட் டுக் குழுக்களும் சிறுவர் வன்முறைகளை தடுப்பது தொடர்பில் முனைப்புடன் இயங்குகின்றன. எனினும் சொற்ப அளவுள்ள அவர்களால் அதைச் செய்வது என்பது கடினமாகவே உள்ளது. எங்களுடைய குழந்தைகளுக்கு வாழ்வியல் உறுதிமிக்க சமூகத்தை பரிச ளிக்க இத்தகைய வன்முறைகளுக்கு எதிராக நாங்கள் குரலும், செயலும் கொடுக்க வேண்டியுள்ளது. நம் குழந்தைகளுக்கு பாலியல் கல்வியையும், சமூக பிரக்ஞையையும் சொல்லித்தரவேண்டியுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கவும் அவர்களைச் சமூகத்துடன் விலகாமல் சேர்த்துக் கொள்ளவுமான பக்குவத்தை அடையவும் நம் சூழலைப் பழக்க வேண்டும்.

வெறும் எழுத்தாக இருக்கும் சட்டங்களையும் குழந்தைகளின் உரிமைகளையும் ஒரு அசைவாக அல்லது செயற்பாடாக மாற்றுதல் வேண்டும். குழந்தைகளுக்கு, பெற்றோருக்கு, ஆசிரியருக்கு என குழந்தைகளின் சூழலுக்கு இது தொடர்பான விழிப்புணர்வையும், அவற்றை எதிர்கொள்ளும் மன நிலையையும் கொண்டுவர வேண்டும்.

கொடுக்கப்படும் அறிவு என்பதே நிலையான மாற்றத்தை உண்டுபண்ணும். அதனூடாக குழந்தைகளின் நரகமாக கடந்த வருடம் 10000 துஷ்பிரயோக முறைப்பாடுகளைச் சுமந்த நாட்டை, குழந்தைகளின் சொர்க்கமாக - துஷ்பிரயோகம் அற்ற நாடாக - மாற்ற முயலலாம். ●



# பேராதனைத் தாக்குதல்: நடந்தது என்ன?

அரவான்



இரவு நேரம் 8 மணியைத் தாண்டி இருந்தது. காட்டுப் பாதை என்பதால் எந்த நேரமும் முள்ளம் பன்றி உள்ளிட்ட விலங்குகளால் தாக்கப்படும் அபாயம் உண்டு. எனவே குறிஞ்சிக் குமரன் கோயிலில் இருந்து மாணவர்களும் மாணவிகளும் ஒரு முன்னெச்சரிக்கை உணர்வோடு தங்களுடைய விடுதியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களோடு பள்ளிவாசலில் தொழுகையை முடித்து விட்டு வந்த முஸ்லிம் மாணவர்கள் சிலரும் இணைந்து கொண்டார்கள். வந்து கொண்டிருந்தவர்கள் அனைவருமே இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள். அன்றைக்கு அவர்களின் பீடத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு நாள். அதனையொட்டி குறிஞ்சிக்குமரன் கோயிலிலும் பள்ளிவாசலிலும் விகாரையிலும் விசேட வழிபாடுகள் இடம் பெற்றிருந்தன. அதனை முடித்துக் கொண்டே இந்த மாணவர்கள் தங்கள் இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

திடீரெனக் காட்டுப் பாதையில் ஏதோ சலசலப்பு. ஏதும் காட்டு விலங்கு மறைந்திருக்கிறதோ என்று யூகிப்பதற் கிடையில் ஏறக்குறைய 20 பேர் அவர்கள் மீது பாய்ந்தார்கள். ஹெல்மெட்டு கள், தடிகள், விக்கெட் பொல்லுகள் என்பன மாணவர்களின் உடல்களில் விளையாடின. கண்மூடித்திறப்பதற் கிடையில் 'கண்மூடித்தனமாகத்' தாக்கி விட்டு இருளோடு இருளாக மறைந்து போனார்கள். அடிவாங்கிய மாணவர்கள் விறைத்துப் போனார்கள். ஏனெனில் அடித்தவர்களை அவர்களுக்கு நன்கு தெரியும். சிங்கள மொழிபேசும் அவர்களின் சிரேஷ்ட மாணவர்களே தாக்குதலாளிகள்.

### பகிடி வதையா? இனவாதமா?

கடந்த 22 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவமானது பகிடி வதையின் ஒரு வெளிப்பாடாகவே முதலில் சொல்லப்பட்டது. ஆனால் இந்த விவகாரம் தொடர்பில் தகவல்களைத் தேடிய போதுதான் அது நீறு பூத்த நெருப்பாக பேராதனைப் பல்கலைக் கழகத்தில் காணப்படும் இனத்துவேசத்தின் ஒரு வெளிப்பாடாகவே தெரிகிறது.

கடந்த மாதம் யாழ்.பல்கலைக் கழகத்தில் புகுமுகமாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் கண்டிய நடனம் திடீரென உட்புகுத்தப்பட்டதால் ஏற்பட்ட இரு தரப்பு மோதல் தமிழ் - சிங்கள மோதலாக வெளிப்படுத்தப்பட்டது. அதிலும் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்கள் மீது இனத்துவேசத்தை வெளிக்காட்டினார்கள் என்று அதனை சிங்கள அரசியல் வாதிகள் இனவாதமாக்க முயன்றார்கள். வடக்கு மாகாண ஆளுநர் இந்த இனவாதத் தீயை மூட்டுவதில் முன்னின்றார். அந்தச் சமயத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பரதநாட்டியம் ஆடப்படுவதையும் யாழ்ப்பாணத்தில் கண்டிய் நடனம் ஆடத் தடை விதிக்கப்பட்டமையும் ஒப்பிட்டு தமிழ் மாணவர்கள் செய்தது தவறு என்று வாதிட்டவர்களும் உண்டு.

எந்தப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கண்டிய நடனத்துக்கு நிகராக பரதநாட்டியத்துக்கும் இடம் கொடுக்கப் படுவதாகச் சொல்லப்பட்டதோ அதே பேராதனைப் பல்கலைக் கழகத்தில்தான் இப்போது தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் 12 பேர் சிரேஷ்ட சிங்கள மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளார்கள். இந்தச் சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவர்கள் தரப்பில் சொல்லப்பட்ட விடயங்கள் பிரச்சினையின் பாரதூரம் எவ்வளவு என்பதை வெளிப்படுத்தின.

### இது முதல் முறை அல்ல

"இப்பிடி தமிழ் மாணவர்கள் தாக்கப் படுவது இதுதான் முதன் முறையல்ல. இதற்கு முதலும் பல தடைவைகள் தமிழ் மாணவர்கள் மீது சிறு சிறு தாக் குதல்கள் இடம்பெற்றுள்ளன. மூன்று வருடங்களுக்கு முன்னர் வேட்டி கட்டிக் கொண்டு பல்கலைக் கழக விடுதியில் இருந்து குறிஞ்சிக்குமரன் கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்த மாணவர் ஒருவர் தாக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் சிங்கள மாணவர்களால் நான்கு முஸ்லிம் மாணவர்கள் தாக்கப்பட்டார்கள்.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் மாணவர் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் அளவுக்கு தாக்கப்பட்டார். இப்படி உதிரியாக பல சம்பவங்கள் இடம்பெற்ற போதும், தனிப்பட்ட முரண்பாடு அல்லது சக மாணவர்களுக்கிடையிலான மோதல் என்ற ரீதியில் நாம் அதனைப் பெரிது படுத்தவில்லை. இறுதியாக மட்டக்களப்பு மாணவன் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் இதுபோன்ற சம்பவங்கள் இனி மேல் இடம்பெறாது என்று சிங்கள மாணவர்களால் உறுதி மொழியும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அந்த உறுதி மொழிக்கு மாறாக பன்னிரண்டு தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் இரத்தக் காயம் ஏற்படும் அளவுக்கு மோசமாகத் தாக்கப்பட்டிருக் கிறார்கள். இதனை எப்படி பகிடி வதையாகவோ அல்லது தனிப்பட்ட முரண்பாட்டின் வெளிப்பாடாகவோ நாம் எடுத்துக் கொள்ள முடியும்?" என்று கேட்கிறார் ஒரு மாணவர்.

### திட்டமிடாத தாக்குதல்

"அன்றைக்கு சிரேஷ்ட மாணவர்களுக் கான கூட்டம் ஒன்றுக்கு முதல் நாளே எஸ்.எம்.எஸ் மூலம் அழைப்பு அனுப்பப் பட்டிருந்தது. அந்தக் கூட்டமும் 8 மணியளவில் நடைபெற்றுக் கொண்டி ருந்த .போது சுமார் இருபது சிங்கள மாணவர்கள் தாங்கள் உணவருந்திவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்கள். அப்படிச் சென்றவர்கள்தான் எமது கனிஷ்ட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக அறிகிறோம். இது திட்டமிட்ட தாக்குதலாக இருக்க முடியாது என்பதை அவர்கள் பயன் படுத்திய தடிகள் பொல்லுகளை வைத்து அனுமானிக்க முடிகிறது. ஆயினும் இந்தத் தாக்குதலின் பின்னணியில் இனத்துவேசம் ஒளிந்திருப்பதாகச் சொல்லுவதையும் மறுக்க முடியாது" என்கிறார் குறித்த பீடத்தில் பயிலும் சிரேஷ்ட தமிழ் மாணவர் ஒருவர்.

"பீடத்தின் வளர்ச்சி நிதிக்காக பொது இடங்களில் உண்டியல் குலுக்கி நிதி சேகரிக்கும் நடைமுறை ஒன்று உள்ளது. இதில் தமிழ் மாணவர்களும் பங்கேற்று உண்டியல் நிதி சேகரித்தாலும் தமிழ் மாணவிகள் பெரியளவில் பங்கேற்பதில்லை. ஏனெனில் இவ்வாறு உண்டியல் குலுக்கச் செல்லும் போது பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ள நேரிட்டது. தவறான வார்த்தைப் பிரயோகங்கள், செய்கைககள், அவர்களின் தொலைபேசி இலக்கங்களை கேட்டல் போன்ற பிரச்சி னைகளை மாணவிகள் சந்தித்திருந்தனர். இதன் பின்னர் தமிழ் மாணவிகள் உண் டியல் நிதிசேகரிக்க போவது குறைவு. எனவே உண்டியல் நிதி சேகரிக்கச் செல்லாமைதான் தாக்குதலுக்குக் காரணம் என்று சொல்வதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. அது மட்டுமே காரணம் எனில் 5 வருடங்களாக வராத பிரச்சினை இப்போது வருகிறதென்றால் அதற்கு வேறும் சில காரணிகள் இருக்க வேண்டும்"

### தவறான செய்திகள்

தாக்குதல் நடத்துவதற்கு முதல்நாள் சிரேஷ்ட சிங்கள மாணவர்கள் அழைத்த கூட்டம் ஒன்றுக்கு குறித்த கனிஷ்ட மாணவர்கள் செல்லாமையால் கோப முற்ற சிரேஷ்ட சிங்கள மாணவர்கள் தாக்குதலில் இறங்கியதாகவும் சிங்கள மாணவர்கள் தரப்பில் ஒரு கதை வந்துள் ளது. ஆனால் அது உண்மைக் காரணம் அல்ல என்பது எங்களுக்குத் தெரியும். இதேவேளை பெண் மாணவிகளுக்கு முன்னால் கைகளை உயர்த்தியபடி முழந்தாளிட்டு அமரச் செய்த பின்னரே தாக்குதலை நடத்தினார்கள் என்று சில இணையங்களில் வரும் தகவல் தவறானது. மறைந்திருந்து அடித்துவிட்டு ஓடினார்கள் என்பதே உண்மை என்று மாணவர்கள் நடந்த சம்பவம் தொடர்பில் தமது கருத்துக்களை வெளியிட்டார்கள்.

அத்தோடு ஜனாதிபதிக்கும், உயர் கல்வி அமைச்சருக்கும் இது குறித்து மாணவர்கள் அன்றிரவே தெரியப்படுத் தியுள்ளார்கள். நல்லாட்சி அரசின் நடவடிக்கை எப்படி இருக்கப் போகிறது என்று அவர்கள் காத்திருக்கிறார்கள்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்- சிங்கள மாணவர் மோதலின் போது "யாழ்ப்பாணத் தில் வைத்து சிங்கள் மாணவர்களை தமிழ் மாணவர்கள் தாக்கிவிட்டனர்" என்று "குய்யோ முறையோ" எனு கூச்சலிட்ட வர்கள் இந்தத் தாக்குதலைக் கண்டு கொள்ளவே இல்லை. அவ்வளவு ஏன், தமிழ் ஊடகங்களும் அரசியல்வாதிகளும் கூட பேராதனை தாக்குதல் சம்பவத்தைக் கண்டும் காணாதது போலவே கடந்து போனார்கள்.

### ஏனைய பீட தமிழ் மாணவர்களுக்கு பிரச்சினையில்லை

இதேவேளை யாழ்.பல்கலைகழக மோதல் முடிந்த கையோடு ஒட்டு மொத்தமாக மூடை முடிச்சுகளுடன் சிங்கள மாணவர்கள் தென்னிலங்கைக்கு சென்றிருந்தார்கள். குறித்த விவகாரம் மிகப் பெருமளவில் பேசப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. ஆனால் பேராதனையில் தாக்குதலுக்குள் ளான பீடத்தின் மாணவர்கள் மட்டும் தற்காலிக பாதுகாப்பிற்காக வீடுகளுக்கு செல்ல ஏனைய பீடங்களின் தமிழ் மாணவர்கள் தொடர்ந்தும் அங்கேயே இருக்கிறார்கள். எந்தவிதப் பிரச்சினைகளு மின்றி வழமைபோல் கற்கை நெறிகளை தொடர்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இனவாதமோ அல்லது பகிடிவதையோ எதுவாக இருப்பினும் சக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்துவதென்பது எவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. இத்தகைய சிறுபொறிகள் நாட்டையே எரிக்கும் பெருந்தீயாக மாறிவிடும் அபாயம் உண்டு. எனவே இத்தகைய வன்முறைக்கான காரணங்களைக் கண்டறிந்து களைவதோடு அவற்றுக்கு மூலகர்த்தாவாக இருந்தவர் களுக்கு உரிய தண்டனையை வழங்கவும் வேண்டும். அத்துடன் இத்தகைய முரண்பாடுகளைக் களைவது குறித்த பொதுமையான - ஆரோக்கியமான - கட்டமைப்புகளை உருவாக்குவதும் காலத்தின் கட்டாயமாகும்.



02

○ உமா சந்தோஷ்

## அந்தக் காலத்துச் சேட்டைகள்

# 'மைனர் மயிலன்'

கொஞ்ச நாள் தனிக் கட்டையா இருந்தான் மைனர். அந்த நேரத்திலையும் 'கவுழுவான்' சும்மா இருக்கேல்லை. றோட்டிலை நிண்டு, படிக்கப் போட்டுவாற பெடி பெட்டையளோடை சேட்டை. உப்பிடித் தான் ஒரு நாள் மம்மலுக்க பெட்டை யொண்டு படிக்கப்போட்டு திரும்பி வரேக்கை, மைனர் வீட்டுப் படலேக்கை வந்தாப் போல அதின்ரை காலைப் பிசுங்கான் ஒண்டு பதம்பாத் திட்டு.(அந்தப் பிசுங்கானையும் மைனர் மயிலன் தான் வைச்சிருப்பான்) இதுதான் சாட்டெண்டு "உள்ளுக்க வா பிள்ளை மருந்து கட்டி விடுறன்" எண்டு பெட்டை யை வீட்டுக்கை கூட்டிக் கொண்டு வந்திட்டான் அவன். மருந்து கட்டிவிடுற மாதிரி பெட்டை யோடை ஏதோ சேட்டைவிடப் பாத்திருக்கிறான் மைனர்.

அந்தப் பெட்டை வெருண்டு 'வீல்' எண்டு கத்திக்குளற, அவ்வளவுதான். அக்கம் பக்கமெல்லாம் கூடி, விசியம் பிழை எண்டு கண்ட உடனை, கதையைச் சடைஞ்சு விட்டிட்டினம். ஆனால் பெட்டையின்ரை தேப்பன் விடேல்லை. அவன் அந்தக்காலச் சண்டியனிலை ஒராள்.

'அவனைக் கொல்லாமல் விட மாட்டன்' எண்டு கத்தியோடை மைனரைக் கலைக்க, அண்டு முழுக்க ஒடிஒழிச்சு கந்தையாண்ணையின்ரை போயிலைப் பாடத்துக்கை தான் படுத்திருந்தான். இஞ்ச நிண்டால் எப்பிடியும் வெட்டாமல் விட மாட்டான் எண்ட பயத்தில, கொழும்புக் குப்போக மயிலன் பிளான் பண்ணினான். ஆனா சண்டியனுக்குப் பயத்தில ஒருத்தனும் மைனரை ஏத்தமாட்டன் எண்டிட்டாங்கள்.

அடுத்த நாள் மைனர் தன்ரை எடுபிடி யொண்டை வைச்சு, கொழும்புக்குப் போற வெங்காய லொறி றைவர் ஒராளிட்ட ஒரு போத்தல் 'பொல்' தாற னெண்டு பேரம் பேசினவன். பேரம் படிஞ்சிட்டுது. மற்ற நாள் இரவோடை இரவா, ஒருத்தருக்கும் தெரியாமல் அந்த லொறியிலை, கொழும்புக்கு எஸ்கேப் ஆகிட்டான் மைனர்.

கொழும்புக்குப்போய் நாலாங் குறுக்குத் தெருக்கடை ஒண்டிலை மயிலன் நிக்கிறானாம் எண்டு கேள்விப்பட்டாப் பிறகுதான் தேப்பன் அரியகுட்டியர் சமாதானப்பட்டார். அதுக்குப் பிறகு, ஊர்ப்பக்கம் தலை காட்டாமல் கன காலம் கொழும்போடை நிண்டான் மைனர். தேப்பன் அரிய குட்டியர்தான் அவசரப்பட்டு மேனைக் கூட்டிக் கொண்டுவர கொழும்புக்குப் போனவர். போனவரிட்டை, அவர் கொண்டுபோன காசை உருவிக்கொண்டு ஆளைச் சமாதானப்படுத்தி அனுப்பிப் போட்டான். ஆனாலும் அவருக்குக் குடுத்த வாக்கைக் காப்பாத்திற மாதிரி ஒரு கிழமை கழிச்சு மெயில் றெயினிலை 'பேர்த் புஃக்' பண்ணி ஊருக்கு வந்திறங்கினான் மைனர்.

வரேக்கையும் அவன் சும்மா வரேல்லை. நாலாங் குறுக்குத்தெருவிலை அவன் நிண்ட கடைக்குச் சமையலுக்க வாற மெனிக்காவையும் கூட்டிக் கொண்டு தான் வந்தவன். ஊரிலை அக்கம் பக்கம் எல்லாம் அவனை விடுப்புப் பாக்கிறதைப் பற்றி அவன் கவலைப் படேல்லை. அவளை வைச்சு கொஞ்ச நாள் படங் காட்டினான். பின்னேரத்திலை வெளிக் கிட்டு முத்த வெளிப்பக்கமா போய்வாறன் எண்டும், றீகல் தியேட்டரிலை இங்கிலீஸ் படமாப் பாக்கிறனெண்டும் ஊருக்கை ஒரே கதை. 'லோங்ஸ்' போட்ட மைனருக்கு 'ரைட்ஸ்கேட்' மெனிக்கா செமைப் பொருத்தமாத்தானிருந்திது.

"என்ர மேன்ரை சாதகம் தோஷ சாதகம். இனம், மதம் மாறிச் செய்தால் அவனுக்கும் குடும்பத்துக்கும் நல்லதெண்டு நயினா தீவுச் சாத்திரி சொன்னவர். அதால உவள் சிங்களத் தியைக் கட்டினதால அவனுக்கு இனி ராஜயோகம்" எண்டு மைனற்றை சேட்டையளை ஞாயப்படுத்தினார் தேப்பன் அரியகுட்டியர்.

ஒரு நாள் ரவுணுக்குப்போக மெனிக்கா வோடை பஸ்ஸுக்கு நிண்ட மைனருக்குப் பக்கத்திலை 'பொறின்' காரோண்டு வந்து நிண்டுது. அது கொழும்பான்ரை கார் எண்டு கண்ணாடியை இறக்கினப்பிறகுதான் மைனருக்கு தெரிஞ்சுது. கொழும்பானும் மைனரின்ரை ஊர் தான். எண்டாலும் அவருக்குவீடு, வளவு, கடை, களஞ்சியெல்லாம் கொழும்பிலைதான். ஊரிலை உள்ள முதுச வீட்டுக்கு அப்பப்ப வந்து போவார். வேறை ஒண்டுக்குமில்லை, குடிச்சுக் கூத்தாடத் தான். அவர் ஊருக்கு வந்திட்டாரெண் டால் நல்ல பனைக் கள்ளும், இறைச்சி பங்கும் எந்தநாளும் அவற்றை வீட்டுக்கு போகும். இது மைனருக்கு நல்லாத் தெரியும்.

கொழும்பானைக் கையிலைபோடப் படாத பாடு பட்டுத் தோத்துப்போனவன் மைனர். தனக்குப் பக்கத்திலை வந்து நிண்ட கொழும்பான்ரை காரை வலு அதிசயமா பாத்தான் மைனர். "மயிலா, என்ன? ரவுணுக்கே!" கொழும்பான் கேட்டான். மைனற்றை தலை மேலுங் கீழும் ஆடினதுதான் தாமதம் காரின்ரை கதவு 'ஓட்டமெற்றிக்காத்' திறந்திது. மைனருக்கு முன்னம் துள்ளிப் பாஞ்சு ஏறினது மெனிக்காதான். மைனரும் பின்னாலை ஏறினான். அண்டு தொட்டு மைனரும் மெனிக்காவும் கொழும்பான் வீட்டிலைதான் அடுகிடை படுகிடையாத் திரிஞ்சவை.

(சேட்டைகள் தொடரும்...)

# மாயாவின் டயரி

## –பார்க்கப்படாத பக்கங்கள்–

அன்பின் டயரி!

○ மாயா

அளவுக்கு அதிகமான துன்பங்களோ, இன்பங்களோ, என்னை நெருங்குகையில் எல்லாம் எனக்கு ஒருவித பயஉணர்வே எழுகின்றது. ஏனெனில் அவை இரண்டுக்கும் காரணமாக பெரும் எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. இந்த அழகு (beauty) தொடர்பான என்னுடைய எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் ஒருபுறம் வலுவடைந்து மற்றொருபுறம் வலுவிழந்து வருகின்றது. இந்த அழகியல் ஆசைகள் எவ்வாறு என் மனதை ஆக்கிரமித்துக் கொண்டன என்பது பற்றி யோசித்துப் பார்க்கின்றேன். இது எனக்கு மட்டும் இருக்கின்ற பிரச்சினையாகத் தோன்றவில்லை.

நான் சுமார் ஒரு வருடமாக வெள்ளையாக வருவதற்கான 'க்ரீமை' தினமும் பயன்படுத்தி வந்தேன். அந்த 'க்ரீமின்' விலை 500 ரூபா. மாதமொருமுறை அந்த க்ரீமிற்காக குறிப்பிட்ட பணத்தை ஒதுக்கியாவது நான் வெள்ளையாக வந்துவிட வேண்டும் என்கின்ற எண்ணத்தோடுதான் இதை ஆரம்பித்தேன். இன்றுவரை நான் வெள்ளையாக வரவுமில்லை என் அழகியலில் (aesthetic) பெரிதாக மாற்றம் ஒன்றும் நிகழ்ந்துவிடவுமில்லை.

ஒரு கட்டத்துக்கு மேல் அந்தக் 'க்ரீமை' பயன்படுத்துவதை விடுத்து யோசிக் கத் தொடங்கினேன். ஏழு நாட்களில் சிவப்பழகு, ஐந்து நாட்களில் அழகியாதல் இந்த மாதிரியான விளம்பரங்களோடு விற்பனை செய்யப்படும் க்ரீம்கள் ஏழு நாட்களின் பின் இல்லை, ஏழு வருடங்கள் ஆனாலும் நம்மை சிவப்பழகு ஆக்கப் போவதில்லை. ஆனாலும் நாம் அவற்றை வாங்கத் தவறுவதில்லை. ஏனெனில் அழகாகும் ஆசை நம்மில் மண்டிப் போய் கிடக்கின்றது.

உண்மையில் இந்த அழகு என்னும் விடயம் எது சார்ந்தது? நிறம் சார்ந்ததா? அப்படியானால் கறுப்பு என்னும் நிறம் அழகியலுக்குள் சேர்க்கப்படாத ஒரு நிறமா என்ன? இதை யார் உருவாக்கினார்கள்? நாம் ஏன் கிரீம்களில் அழகாதலில் நம் தன்னம்பிக்கையைப் பொதிந்து வைத்துள்ளோம் என்று பார்த்தால் இது அனைத்துமே எதிர்ப்பாலினத்தவர் சார்ந்த கவர்ச்சிக்காக நிகழ்வதே. அடிப்படை அதுவாகவே இருக்கின்றது.

ஐஸ்வர்யா ராயை, அழகின் அளவுகோலாக நிறுத்தி அழகியல் சார்ந்த உற்பத்திகளை நம்மை நோக்கி நகர்த்தியதன் பின்புலங்கள், நமக்கு எப்போதுமே புரிவதில்லை. உலக அழகி போட்டியே ஒரு வணிகம் என்பதையோ வியாபார யுக்தி என்பதையோ அறியாது எப்போதோ தெரிவுசெய்யப்பட்ட ஐஸ்வர்யாராயை அளவுகோலாகக் கொண்டு நம்மை அழகியலில் தரம் உயர்த்துவதற்காக இன்னும் நாம் ஓடிக் கொண்டிருக்கின்றோம். அழகு, புனிதம் இவற்றுக்குள் நம்மை அடைத்துக்கொண்டு காட்சிப் பொருட்களாக வலம் வருகின்ற நாம், அழகு என்பது வெறும் சாதனம், அறிவைக் கொண்டு அழகை தோற்கடிக் கலாம் என்னும் உண்மையை உணர வேண்டும்.



நாங்கள் எதை எதிர்பாக்கின்றோம்? ஒரு பாராட்டை. அதுவும் ஒரு பெண்ணாக ஒரு ஆணின் பாராட்டை, பார்வையைப் பெறுவது மட்டுமே இந்த அழகாதலின் பின்னுள்ள தார்ப்பரியம். அதனால்தான் நாம் எம்முடைய பார்வையினை உண்மைகளை நோக்கி திருப்பத் தவறியுள்ளோம். சமையலறை தான் உலகின் அடிப்படை பொருளாதார மையம். படுக்கையறைதான் உலகின் பெரும் அரசியற்களம். அங்குதான் பிறப்பியல் தீர்மானிக்கப்படுகின்றது. ஆக இருபெரும் சமூகத் தளங்களின் அடிப்படையாக உள்ள ஒரு பெண்ணால் சமூக மாற்றத்திற்கான ஒருத்தியாக மாற முடியாமைக்கு, அழகியல் நோக்கிய ஓட்டமும் முக்கிய காரணியாகும்.

ஒரு 'க்ரீமை' வாங்கி அதன் அடிப்பகுதி தட்டையாகி போகும் வரை கடைசிச் சொட்டு க்ரீமையும் விடாது முகத்தில் பூசிக் கொண்டே இருக்கின்றோம். அழகு ஒன்றுதான் நம்மை உயர்த்தும் என்கின்ற ஒரு பெரும் அடிப்படை உணர்வு எங்களுக்குள் வந்துவிட்டதே. எவ்வளவு தேய்த்தாலும் நம் முகம், நம் நிறம் என்பது ஒரு குறிப்பிட்ட சில நாளில் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி விடும். நான் நானாகத்தான் இருக்கப் போகின்றேன். ஆக எனக்குத் தேவை புற அழகு இல்லை. எனக்குத் தேவை பகுத்தறியும் திறன், எனக்குத் தேவை துணிவாக வாழ்வதற்கான வல்லமை.

"வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே"



கணபதி சர்வானந்தா

# விழியில்லா விடினும் ஒளியுண்டு

வழமையாகப் பத்தாம் திருவிழாவிற்கு மேலேயே நல்லூர் களைகட்டும். இம்முறையும் அதே போல கார்த்திகைத் திருவிழா வன்று மாலை கோயில் வீதியில் சனம் அலைமோதியது. சன நெரிசலுக்குள் நாமும் பங்காளராக திருவிழா பார்க்கச் சென்றிருந்தாலும், திருவிழாவில் நடக்கும் புதினமும் கோயிலை சுற்றிய மைக்கப் பட்ட கடைகளும் தான் எமது இலக்கு.

கந்தர் மடத்தினூடாக கோயிலின் மேற்கு வீதியை நோக்கிச் சென்றோம். கோயிலை அண்மிக்கச் சற்று முன்னர் வீதியின் வலது புறம் 'கருவி' என்ற பெயர்ப் பலகையுடன் ஒரு சிறு கடை ஒன்றைச் சுற்றி மக்கள் கூட்டம். அங்கு நின்றிருந்த வாட்ட சாட்டமான ஒருவர் கையில் ஒலிபெருக்கியில் "சைன் - இது ஒரு உள்ளூர் தயாரிப்பு. ஆடைகளைக் கழுவக் கூடிய சவர்க்காரத் திராவகம். உங்கள் உடைகளை தரம் கெடாமல் பாதுகாப்பாக சுத்தம் செய்ய சைனை வாங்கிச் செல்லுங்கள். ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் நேர்த்தியை நீங்கள் அறியலாம்" என உரத்த குரலில் விளம்பரம் செய்து கொண்டிருந்தார். புதினம் பார்க்கின்ற ஆவலில் அந்தக் கடையை அண்மித்தோம்.

அது, மாற்றுத் திறனாளிகளால் நடத்தப்படும் கருவி என்ற அமைப்புக்குச் சொந்தமான நிறுவனத் தயாரிப்பின் விளம்பர நிலையம் என்று அறிந்து கொண்டோம். பன்னாட்டு நிறுவனங் களின் தயாரிப்புக்கு இணையான தரம் 'சைன்' போத்தலின் புற அழகில் புலப்பட்டது. விழிப்புலன் இழந்தவர்களின் செய் நேர்த்தியான அந்த உற்பத்தி பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாக அறிவதற்காக, கருவி நிறுவன அமைவிடமான கல்வியங்காட்டுச் சந்தியிக்கு அருகிலுள்ள அருளம்பலம் ஒழுங்கைக்கு அடுத்தநாள் சென்றோம்.

நிறுவனத் தலைவர் தர்மசேகரம் தமது நிறுவன அங்கத்தவர் சிலருடன் எமக்காகக் காத்திருந்தார். அவர்கள் அனைவருமே விழிப்புலனற்றவர்கள். அரச நிறுவனங்களில் உயர் பதவிகளை வகிப்பவர்கள். 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி கருவி என்ற இந்த மாற்றுத் திறனாளிகளுக்கான சமூக வள நிலையத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து நடத்திவருகிறார்கள். கருவி நிறுவனத்தின் உருவாக்கம், செய்றபாடுகள் பற்றி அதன் தலைவர் தர்மசேகரம் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை "புதுவிதி" வாசகர்களுக்காக இங்கே கருகின்றோம்.

**2013** இல் இந்த நிறுவனத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்திருந்தாலும், அதற்கு முன் எமது உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் அவரவர் மட்டங்களில் வலுவிழந்தோருக்கான சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தவர்கள் தான். அப்படிப் பட்ட சமூகப் பணியாளர்களின் ஒன்றுகூடலே கருவி அமைப்பை உருவாக்கியிருக்கிறது. மாற்றுத் திறனாளிகளை சமூக விருத்தியில் ஆரோக்கிய பங்காளராக்குவது என்ற முக்கிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, எமது நிறுவனத்தின் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் அமைந்திருக்கின்றன. இதிலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதொரு விடயம் என்னவென்றால் எமது அங்கத்தவர்களுக்குவேண்டிய தற்காலிக வசதிப்படுத்தலைத் தாண்டி அவர்களின் நிரந்தரமான வாழ்வாதாரத்திற்கு வேண்டிய பணிகளை முன்னெடுப்பதையே மிகப்பிரதானமான நோக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

இதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம், யுத்தத்திற்குப் பின்னால் வலுவிழந்தோர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்திருக்கிறது. யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது அதனால் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாகப்பட்டவர்களின் வாழ்க்கை ஒரு விதமும், யுத்தம் நிறைவடைந்த பின்னால் அவர்கள் வாழ்க்கை இன்னொரு விதமுமாக அமைந்ததை எங்களில் பலர் கூர்ந்து அவதானித்திருந்தனர். அவர்கள் சமூகமயப்படுத்தப்பட்ட போது பல பிரச்சினைகளை எதிர் கொண்டார்கள். அதில் முக்கியமாகக் குடும்ப மட்டங்களிலே ஏற்பட்ட உடைவுகள். அதாவது முக்கியமாகக் குடும்பப் பிரிவுகளை குறிப்பிடலாம். அதுவே எம்மைப் பாதித்த முக்கியமான விடயம். பிரிவுகள் என்கின்றபோது, கணவர் வலுவிழந்தவராக இருந்தால் மனைவி அவரை விட்டுப் பிரிந்து செல்வதும், மனைவி வலுவிழந்தவராக இருந்தால் அவரை விட்டுக் கணவன் பிரிந்து செல்வதும் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது.



இதற்குரிய மாற்றுத் திட்டத்தை வைத்து அவர்களைச் செம்மைப்படுத்த வேண்டிய தேவை எமது சமூகத்திற்கு இருக்கின்றதென்பதை மனதிற்கொண்டே இந்த சமூகச் செயற்பாட்டு மையத்தை உருவாக்கியிருக்கிறோம். எமது இந்தப் பணியின் முக்கியம் கருதி, தேவைகள் கருதி எமது பின்னணியில் பல சமூக ஆர்வலர்களும் சமூக நலன் விரும்பிகளும் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் நாங்கள் சில தற்காலிகமான வசதிகளை அங்கத்தவர்களுக்குச் செய்து கொடுப்பதன் மூலம் அவர்களை நிரந்தரமான வாழ்வாதார நீரோட்டத்திற்குள் கொண்டுவருவதே எங்கள் பிரதான இலக்காக இருக்கிறது.

அந்த இலக்கை அடைவதற்கான முன் முயற்சியாக, அருளம் பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தற்காலிமாக இயங்கி வருகின்ற எமது நிறுவனத்தை இந்த வருட இறுதிக்குள் ஒரு நிரந்தர இடத்துக்கு மாற்றுவது என்று திட்டமிட்டிருக்கிறோம். அதற்காக ஒரு நிலப்பரப்பை, காணியைப் பெற்றுக் கொள்ளுகின்ற முயற்சியை பிரதான இலக்காகக் கொண்டிருக்கிறோம்.

அடுத்ததாக எமது நிறுவன அங்கத்தவர்களது பங்களிப்புடன் 'கருவி' பட்டிமன்ற குழு ஒன்றும் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பட்டிமன்றக் குழுவின் நோக்கம் என்னவெனில் சமூகத்திலே இழையோடியிருக்கின்ற பிரச்சினைகளை வாதப்பொருளாக்கி ஆரோக்கியமான கருத்துப் பரப்பலை சமூகமட்டத்தில் உருவாக்குவதே. குறிப்பாக ஆலயங்களிலும், கலாசார விழாக்களிலும் இந்த பட்டிமன்ற ஆற்றுகை நடைபெற்று வருகிறது.

அதேபோல இராக சுருதி என்ற இசைக்குழுவொன்றும் கருவி அங்கத்தவர்களின் பங்களிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. சமூகமட்டத்தில் ஒரு ஆரோக்கியமான இசை மரபை உருவாக்குவதுவும், சிறந்த இசை இரசனையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதுவும் இதன் பிரதான நோக்கமாகவும் செயற்பாடாகவும் இருக்கின்றது. அதே நேரத்தில் அதிலிருந்து கிடைக்கும் சிறு வருமானத்தை எமது நிறுவனச் செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தி வருகிறோம்.

அடுத்ததாக வலு என்ற காலாண்டுச் சஞ்சிகை ஒன்றினையும் நடத்தி வருகின்றோம். இந்தச் சஞ்சிகையானது வலுவிழப்புடன் கூடிய மக்கள் பற்றிய கருத்தியலை சமூகமட்டத்தில் பரம்பலடையச் செய்கின்ற நோக்கோடு வெளி வந்து கொண்டிருக்கிறது. அந்தச் சஞ்சிகையானது மக்கள் மத்தியில் கணிசமான வரவேற்பைப் பெற்றிருக்கிறது. வழமையாகச் சஞ்சிகைகள் எதிர் கொள்ளக்கூடிய போராட்டங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் தொடர்ந்து வெளி வந்து பதினொராவது இதழைத் தொட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

எமது நிறுவனத்தால் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த முயற்சியினூடாகத்தான் 'சைன்' என்கின்ற திரவ சலவைச் சவர்க்காரம் ஒன்றினை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறோம். இது முற்று முழுதாக எமது பகுதியிலே நடைபெறுகின்ற பொது முயற்சி. இதற்கு நல்ல ஆதரவும் ஒத்துழைப்பும் சமூக மட்டத்திலே இருந்து கிடைத்து வருகிறது. அத்துடன் இதனை அங்கத்தவர்களினூடாக நேரடியாகவே சந்தைப்படுத்துகிறோம். மேலும் சந்தைப் படுத்துதலை விஸ்தரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அதனூடாக வெற்றிகரமான வாய்ப்பொன்று எமது இந்த உற்பத்திக்குக் கிட்டு மென்று ஆணித்தரமாக நம்புகிறோம். அத்துடன் வேறு பல உற்பத்திகளையும் வெளிக்கொண்டுவரும் முயற்சிகளில் கருவி அங்கத்தவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.


(21 ஆம் பக்கம் பார்க்க...)

புதுமதி

# ஒலிம்பிக் - 2016
## விட்டுச் சென்ற நினைவுத் தடங்கள்

★ 2008, 2012, 2016 ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர், 4 x 100 மீற்றர் போட்டிகளில் தொடர்ச்சியாக 9 தங்கப்பதக்கங்கள் வென்று உலக சாதனை படைத்த உசைன் போல்ட் இந்த ஒலிம்பிக்குடன் ஓய்வை அறிவித்தார்.

★ 100 மீற்றர் இறுதிப்போட்டி, அரையிறுதிப்போட்டி நடைபெற்ற 1 மணித்தியாலத்தில் நடந்ததால் உசைன் போல்ட் மற்றும் ஜஸ்ரின் கட்லின் போன்றவர்கள் தமது கண்டனத்தை வெளிப்படையாகத் தெரிவித்திருந்தனர்.







★ 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் உலக சாதனை படைத்த தென்னாபிரிக்க வீரரான வன் நிகெர்க்கிடம் 300 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தன்னோடு ஓடுவதற்கு முடியுமா என சவால் விட்டார் போல்ட்



★ ஐந்து ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றி 23 தங்கம் 3 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்கள் பெற்ற அமெரிக்காவின் நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ் ஓய்வு.

★ எட்டு ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரில் தன்னுடன் புகைப்படம் எடுத்த ஜோசப் ஸ்கூலிங் என்ற சிறுவன் பின்னர் ஒலிம்பில் தன்னை தோற்கடிப்பான் என பெல்ப்ஸ் கனவிலும் நினையாத அதிசயத்தை 100 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் நிரூபித்து காட்டினான் ஜோசப்.




★ மகளிர் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பஹாமாஸ் வீராங்கனை இறுதி நேரத்தில் டைவ் அடித்து விழுந்து வெற்றி பெற்றுள்ளார்.





★ 1920 ஆம் ஆண்டு போட்டிகளுக்குப் பின்னர் பிரிட்டனைச் சேர்ந்த கிறிஸ் - ஹறபி அட்கொக் தம்பதியினர் கலப்பு இரட்டையர் பட்மின்ரன் போட்டியில் தங்கம் வென்றனர்.

# குட்டீஸ் பக்கம்

## வீட்டுத் தோட்டம்

வீட்டுத் தோட்டம் செய்வோமே
வீட்டுத் தோட்டம் செய்வோமே
வாட்டம் ஒன்றி வாழ்ந்திடவே
வளவில் தோட்டம் செய்வோமே

கத்தரி வெண்டி காய்கறிகள்
கனிதரும் இனிய பழமரங்கள்
பத்தடி நிலத்தில் என்றாலும்
பக்குவமாக பயிரிடலாம்

சுத்தமான காய்கறிகள்
சுகமாய் வீட்டில் பெற்றிடலாம்
பத்துச் சதமும் செலவின்றி
புத்தியோடு வாழ்ந்திடலாம்

-வேலணையூர் சுரேஷ்



## குட்டீஸ் பரிசுப் போதி – 07



★ இருப்பிடத்தை அடைய மீனுக்கு வழிகாட்ட முடியுமா?

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**குட்டீஸ் பரிசுப்போதி - 07**
புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**முடிவுத்திகதி: 06.09.2016**

★ தரம் 11 க்கு உட்பட்ட மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.

குட்டீஸ் பரிசுப் போதி – 04 முடிவுகள்
[18 ஆம் பக்கம் பார்க்க]

சிறுவர் தொடர் — 11

● செங்கை ஆழியான்



# பூதத்தீவுப்புதிர்கள்

"அப்பாடா.." எனப் பெருமூச் சொன்றினை நிம்மதியாக விட்டான்.

எல்லோரும் மாணிக்கத்தை இரக்கத்துடன் பார்த்தனர்.

"யாருக்குப் பதில் தெரியும்?" என்று வசந்தன் கேட்டன்.

"எனக்குத் தெரியும்..." எனப் பலர் முன் வந்தனர்.

"சரி மாலா நீர் சொல்லும்..."

"நத்தை சுவரின் உச்சியை அடைய 8 நாள்தான் எடுக்கும். 7 நாட்களில் 7 மீற்றர் ஏறிவிடும். எட்டாம் நாள் சுவரின் உச்சியை அடைந்துவிடும்..." என்றாள் மாலா.

"கெட்டிக்காரி,.." என்றார் கமலம் ஆசிரியை. அவருடைய பாராட்டைப் புன்னகையுடன் மாலா ஏற்றுக்கொண்டாள்.

"சரி இனி நீர் பழம் பிடுங்கும்..." என்றான் வசந்தன்.

மாலா சற்றுத் தயக்கத்துடன் சென்று அப்பிள் பழம் ஒன்றினைப்பறித்தெடுத்தாள்.

"யார் பழத்தைப் பறித்தது? முன்னே வா. நான் கேட்கிற வினாவுக்கு பதில் தா..." என்று கல்லாகவிருந்த மாணிக்கத்திட மிருந்துகட்டளை பிறந்தது. மாலா முன்னே வந்து நின்றாள்.

மாணிக்கம் வினாவைத் தொடுத்தான்.

"10 நத்தைகள் உள்ளன. 3 மீற்றர் ஒரு நாளைக்கு ஏறி... ஒரு மீற்றர் இறங்கி... இறங்கி... இறங்கி..."

"மாணிக்கத்துக்கு கேள்வியைச் சரியாகக் கேட்கவே தெரியவில்லை. பாவம்... என்ன செய்யப் போகிறானோ?" என்று வேடன் பச்சாதாபப்பட்டான். மாலா விடையைச் சொன்னதும், தோட்டத்தில் புது மலர்ச்சி ஏற்பட்டது. கல்லாகவிருந்த பழங்கள் கனிந்தன. மூக்கைத் துளைக்கும் வாசனை இனிமையாக எழுந்தது. அவர்கள் அனைவரும் தோட்டத்துக்குள் நுழைந்து கொண்டனர். விரும்பிய பழங்களை விரும்பியவாறு பறித்து உண்டனர்.

என்ன அற்புதமான சுவை. அவர்களின் களைப்பு மறைந்தது. பூதத்தீவில் அகப்பட்ட தைக் கூட ஒருகணம் மறந்து விட்டார்கள். சிலர் ஓடியாடி விளையாடினர்.சிரித்துப்பேசி மகிழ்ந்தனர்.

வானத்தில் பறவைகளின் சிறகொலி எழுந்தது. ஒரு கூட்டம் பச்சைக் கிளிகள் மரங்களில் வந்து அமர்ந்தன. பெயர் தெரியாத பறவைகள் எல்லாம் வந்து பழங்களைத்தின்று, பசியாறின. சூரியன் உச்சியில் எறித்தான்.

"இனிப் போவோமா?" என்று சீலன் கேட்டான்.

"சற்றுப் பொறுத்திருப்போம்"

"நாங்கள் தோட்டத்தை விட்டு வெளியேறினால் இங்கு கனிந்திருக்கும் பழங்கள் கல்லாகிவிடும். பறவைகள் வந்திருக்கின்றன. கொஞ்சம் உண்ணட்டும்..." என்றான் வசந்தன்.

"வசந்தா" என்று கமலம் ஆசிரியை அவனை அழைத்தார். அவன் எழுந்து ஆசிரியையின் அருகில் சென்றான்.

"என்ன ரீச்சர்...?"

"மூர்த்தி மாஸ்ரரையும் மாணிக்கத்தையும் மீட்பதற்கு ஏதாவது வழி இருக்கிறதா?"

வழியிருக்கும் ரீச்சர். பூதத்தீவில் இன்னமும் எத்தனை அற்புதங்கள் இருக்கின்றனவோ. வேடனோடும் கமக்காரனோடும் பேசிப் பார்ப்போம்

வசந்தன் கமக்காரன் அருகில் வந்து அமர்ந்தான்.

"ஐயா, இந்தத் தீவில் நீங்கள் எப்படி அகப்பட்டுக் கொண்டீர்கள்?" என்று கேட்டான். கமக்காரன் எதுவும் சொல்லவில்லை.

"இங்கிருந்து நாங்கள் வெளியேற மார்க்கமில்லையா?" என்று வசந்தன் வேடனிடம் கேட்டான். அவன் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

"நீ புத்திசாலியாக இருக்கிறாய். பயப்படாதே. நீயே வழி கண்டுபிடிப்பாய். நீ இவ்வளவு கேட்பதால் நான் உனக்கு ஒன்று சொல்வேன். நாங்கள் செய்யப் போகின்ற பயணம் நீண்டது. அந்தப் பயணத்தின் இறுதியில்தான் எங்களுக்கு விடிவு கிடைக்கும். எங்கள் பயணத்தில் நாங்கள் சந்திக்கப் போகின்ற சம்பவங்கள், வெற்றிகள், தோல்விகள் பலவாக இருக்கும். மனச்சோர்வு வரும். களைப்பு வரும். பயம் வரும். கோபம் வரும். உன்னுடன் வருபவர்களிடம் கூறி வை, எதையும் கண்டு பயப்படக் கூடாது என, மனம் தளரக்கூடாது என, எதையும் எங்களால் முடியும் எனத் தைரியமாக இருக்கச் சொல். மனந்தளர்ந்தோமோ நாங்கள் எல்லோரும் இங்கிருந்து விடுபட முடியாது" என்றான் வேடன்.

"நல்லது ஐயா.. நங்கள் இனி என்ன செய்வது?"

"பாதை வழியே செல்வோம். ஒரு சத்திரம் குறுக்கிடும். அங்கு இரவு தங்குவோம். அவர்கள் பசியாற உணவு தருவர். அங்கு தங்கிவிட்டு மறுநாள் பயணத்தை தொடருவோம்" என்றான் கமக்காரன்.

வசந்தன் ஒத்துக் கொண்டான்.

மதியவேளை கடந்து சொற்ப நேரத்தில் அவர்கள் தம் பயணத்தைத் தொடர்ந்தனர். மாணவர்கள் ஆதலால், புதுமைகளைக் காணும் பேரவா அவர்களின் களைப்பைப் போக்கியது.

(புதிர்கள் தொடரும்...)





இயக்குநர் ரஞ்சித் இயக்கத்தில் சூர்யா நடிக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகி வந்த நிலையில், ரஞ்சித் அடுத்ததாக விஜயை இயக்கவிருப்பது உறுதியாகியிருக்கிறது. சிங்கம் மூன்றாம் பாகத்தில் நடித்துவரும் சூர்யா அப்படத்தைத் தொடர்ந்து, முத்தையா இயக்க விருக்கும் படத்தில் நடிக்கவிருக்கிறார். குட்டிப்புலி, கொம்பன், மருது படங்களை இயக்கியவர் முத்தையா என்பது குறிப்பிடத்தக்கது.

'மருது' படத்தைத் தொடர்ந்து விஷால் நடித்து வரும் படம் 'கத்திச்சண்டை'. இப்படத்தை சுராஜ் இயக்கிவருகிறார். இப்படத்தில் முதன்முறையாக தமன்னா-விஷால் இணைந்து நடிக்கிறார்கள். இந்தப் படத்தின் மற்றோர் ஸ்பெஷல் வடிவேல். தற்பொழுது கிழக்குக்கடற்கரை சாலையில் மூன்று நாட்களாக படப்பிடிப்பு நடந்துவருகிறது. கார் சேசிங் காட்சிகள் ஷூட் செய்யப்பட்டு வருகின்றன. அக்காட்சிகள் படத்தில் முக்கியதிருப்புமுனையாக இருக்கும் என்று கூறப்படுகிறது.




கதிர் இயக்கத்தில் LBM நிறுவனம் தயாரிக்கும், 'குற்றம்' குறும்படம், குகனி, மிதுனா, சித்தாரா, துவா, முரளி. ஹரிஸ், சசிகரன்.யோ மிதுலன், லூகிஸ் கவிராஜ், சுஜீபன் என பல கலைஞர்களின் உழைப்பில் வேகமாக உருவாகி வருகிறது.

## நண்பர்கள்

காலில் ஏற்பட்ட காயத்தால் மருத்து வமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் நடிகர் கமல்ஹாசன். முதலில் அவரின் காலில் சிறிய அளவில் அறுவை சிகிச்சை ஒன்று நடந்தது. தற்பொழுது நலமாக இருக்கிறார் கமல். கமலின் நிலையைக் கேள்விப்பட்ட உடனே கமலுக்கு போன் செய்து உடல்நலம் பற்றி விசாரித்திருக்கிறார் நடிகர் ரஜினி.



பிரேமம் பட மேரியை நினைவிருக்கிறதா? இயக்குநர் சத்யன் இயக்கத்தில் துல்கர் சல்மான் படத்தில் நாயகியாக நடிக்கவிருக்கிறார் அனுபமா பரமேஷ்வரன். பிரேமம் படத்தைத் தொடர்ந்து மலையாளத்தில் அவருக்கு இரண்டாவது படம். ஹீரோவாக துல்கர்சல்மான் நடிக்கின்றார்.

ஜீவா, காஜல் அகர்வால் நடிப்பில் உருவாகிவரும் படம் தான் கவலை வேண்டாம். இப்படத்திற்காக நீச்சல் குளத்தில் ஒரு பாடல் படமாக்கப்பட்டது. அந்தப் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகியுள்ளன. ரொமாண்டிக் பாடலாக உருவாகியிருக்கும் இப்பாடலே படத்தின் அறிமுகப் பாடல் என்றும் கூறுகின்றனர் படக் குழுவினர். மஹாப் ஹோட்டலின் நீச்சல் குளத்தில் படமாக்கப்பட்ட இந்தப் பாடலுக்காக இருவரும் சுமார் 7 மணிநேரம் நீச்சல் குளத்தில் இருந்திருக்கிறார்கள்.

தெறி படத்தைத் தொடர்ந்து இயக்குநர் அட்லி, அடுத்த படத்துக்கான கதை விவாதத்தைத் தொடங்கிவிட்டார். இதுபோக தயாரிப்பாளராகவும் தன்னை முன்னிலைப்படுத்த அவர் முயற்சி செய்து வருகிறார். அந்த வகையில் ஜீவா, ஸ்ரீ திவ்யாவை வைத்து ஏற்கெனவே ஒரு படத்தைத் தயாரித்து வருகிறார் அட்லி. அந்தப் படத்தின் பெயர் "சங்கிலி புங்கிலி கதவ தொற". அடுத்ததாக நிவின் பாலி நடிக்கும் தமிழ் படம் ஒன்றையும் தயாரிக்கவுள்ளார். இப்படத்தின் மூலம் அவரின் நண்பர் சூர்யா இயக்குநராக அறிமுகமாகிறார்.

டிவியைப் போட்டாலே அக்கா, அம்மாக்களை கோபித்துக் கொள்ளும் அண்ணன், தம்பிகள் கூட கொஞ்ச நாளாக இரவு 10 மணியானால் ரிமோட்டும், கையுமாக டிவி முன் தவமிருக்கிறார்கள். காரணம் நாகினி என்னும் புதிய தொடர்நாடகம், அதில் கதாநாயகியாக, பழிவாங்கத் துடிக்கும் இச்சாதாரி பெண் நாகமாக நடித்திருக்கும் மௌனி ராய். சோஷியல் மீடியா பக்கம் சென்றாலே இந்த நாகினி பொண்ணுதான் இப்போதைய பிரபல கனவுக் கன்னியாகவுள்ளார்.





மணி செய்யோன் இயக்கத்தில் சிபிராஜ், ஐஸ்வர்யா ராஜேஷ், சாந்தினி, காளிவெங்கட் நடிப்பில் உருவாகிவரும் படம் கட்டப் பாவ காணோம். நாய்கள் ஜாக்கிரதை படத்தில் நாய் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தது போலவே, இப்படத்தில் மீன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறது. காணாமல் போகும் வாஸ்துமீன், அதைத்தேடும் கதையே கட்டப்பாவ காணோம் என்று கூறப்படுகிறது.

கௌசிகன் இயக்கத்தில் 'ஆறுவது 'சினம்', எனும் குறும்படம் ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி இணையத் தளங்களில் வெளியாகவுள்ளது. படத்தின் முதல் பார்வை வெளிவந்து பலரது வரவேற்பை பெற்றுள்ளது.



ஷங்கர் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் 2.0 படத்திற்கான முதல் பார்வை நவம்பரில் ரிலீஸாகிறது. இப் படத்தை தயாரிக்கும் லைக்கா நிறுவனத் தின் நிர்வாகிகளுள் ஒருவரான மகாலிங்கம் ட்டுவிட்டரில் உறுதிப்படுத்தி இருக்கிறார்.



முதல் முறையாக கிராமத்துக் கதையில் நடிக்கிறேன். விஜயலட்சுமி என்ற கதாப்பாத்திரத்தில் தைரியமான பொண்ணாக நடிக்கிறேன் என்று கண்கள் விரிய சொல்கிறார் ப்ரியா ஆனந்த்.

'வேலைனுவந்துட்டாவெள்ளக்காரன்' படத்தைத் தொடர்ந்து இயக்குநர் எழில் இயக்கவிருக்கும் படத்தில் உதயநிதி நடிக்கவிருக்கிறார். இப்படத் திற்கு நாயகியாக ரெஜினா நடிக்கவிருக்கிறார். காமெடிக்கு சூரி இப்படத்தில் நடிக்கவிருக்கிறார். முதல் கட்ட பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. டி.இமான் இசையமைக்கும் இப்படத்தின் படப் பிடிப்பு ஆகஸ்ட்டில் தொடங்கவிருக்கிறது.

நிக்கி கல்ராணி தமிழில் முதலில் ஒப்பந்தமான படம் 'யாகாவாராயினும் நாகாக்க' அதன் ஹீரோ ஆதி இப்போ நிக்கியின் நெருங்கிய நண்பராம். தொடர் தோல்விகளால் துவண்டிருக்கும் ஆதி, உடனடியாக ஒரு பேய்ப் படத்தில் நடித்து வெற்றியை சுவைக்க முடிவெடுத்து உள்ளாராம்.




'பீப்' பாடல் சர்ச்சையில் பாடலை உருவாக்கியவர் களைத் தூக்கிலிட வேண்டும் எனக் காரசாரமாகப் பேசி போர்க்கொடி உயர்த்திய ஒய்.ஜி.மகேந்திரன் தற்போது சிம்புவின் 'அன்பானவன் அடங்காதவன் அசராதவன்' படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் நடித்து வருகிறாராம்.




'கடுகு' படத்தில் வில்லன், 'பொட்டு' படத்தில் பேய், 'சிம்பா' படத்தில் காமெடி, 'என்னோடு விளையாடு' படத்தில் ஆக்‌ஷன் எனப் படத்துக்குப் படம் வித்தியாசம் காட்டி நடித்து வரும் பரத், அடுத்த ஒரு ரொமான்டிக் காமெடிப் படத்தில் நடிக்கிறார்.


ஹாலிவுட்டில் வளர்ந்து வரும் நடிகை சாரதா கபூர். தற்போது இவர் ஒகே ஜானு என்ற படத்தில் நடித்திருக்கிறார். இப்படம் அடுத்தாண்டு வெளிவர இருக்கிறது. ஸ்ரத்தா கபூருக்கு நெகட்டீவ் ரோலில் நடிக்க ஆசை வந்துள்ளதாம். இதுபற்றி அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றில் கூறியிருப்பதாவது. எனக்கு வில்லி மாதிரியான வேடத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை வந்துள் ளது. "வில்லி வேடங்களில் நடிக்க வாய்ப்பு வந்தால் நிச்சயம் நான் நடிப்பேன்" என்று கூறியுள்ளார்.




வித்தியாசமான கதையில் நகைச் சுவையோடு விவேக்சன் இயக்கத் தில் விரைவில் வரவிருக்கும் படம் 'அட அட அட' சமீபத்தில் படத்தின் முதல் பார்வை வெளியாகியுள்ளது.



'காவியத்தலைவன்' படத்தில் கெஸ்ட் ரோல் போன்ற ஒரு ரோலில் நடித்தவர் அனைகா. தற்போது அதர்வாவின் 'செம போத ஆகாத' படத்தில் பாலியல் தொழிலாளியாக மிகவும் துணிச்சலாக நடித் திருக்கிறார்.



'அன்பானவன் அடங்காதவன் அசராதவன்' படத் திற்கான முதல் கட்ட படப்பிடிப்பை திண்டுக்கலில் முடித்துவிட்டு சென்னை திரும்பியிருக்கிறது படக்குழு. இப்படத்தில் சிம்பு மூன்று வேடத்தில் நடிக்கிறார். ஸ்ரேயா மட்டுமே நாயகியாக ஒப்பந்த மாகியிருக்கிறார். மற்றொரு நாயகி ஹன்சிகா என்று கூறிவந்த நிலையில், அந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் ஹன்சிகா. தனது ட்டுவிட்டரில், அச் செய்தி வதந்தியே, உண்மை இல்லை என்று ட்டுவிட்டியிருக்கிறார்.

# சுவரில் கொய்தவை

**Kaniskar Raveendran**

எதுவுமே சுலபமில்லை!
ஆனாலும் எல்லாமே சாத்தியம்!

**ஷாலினி நாதன்**

சிறந்த பேச்சு .. ஒரு நேர்மையானபொய்
மோசமான மௌனம் ஒரு நிர்வாண உண்மை

**Dilexsan Gnanapiragasam**

"தவறு" நல்ல அனுபத்தை தரும்..!
நல்ல "அனுபவம்" தவறை குறைக்கும்..!

**Jermain Jma**

வாழ்க்கைல உன்ன ஏமாத்தினவன கூட மன்னிச்சுடு
ஆனா நீ ஏமாந்தத பாத்து சந்தோஷப்பட்டான் பாரு
அவன மட்டும் மன்னிச்சுடாதே..!

**Sabee Naa** feeling confused

யாராக இருப்பினும் நம் முன் திடீரென வேறு மொழியில் பேசும் போது என்ன ரகசியம் பேசுகிறார்களோ இல்லையெனில் நம்மை பற்றி என்ன பேசுகிறார்கள் என மனசு அடிச்சுக்குது!

**Amalraj Francis**

தங்கள் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய விடயங்கள்/ஆசீர்வாதங்கள் கிடைக்கப்பெற்றிருக்கிறது என்பதை உணரப்பெறாத மனநிலைதான் உலகத்தில் அதிபயங்கரமான மனநோயாளிகளை உருவாக்குகிறது


**காழி குமார்**

இளமையில் யாரும் தொல்லை பண்ணாதீங்கன்னு தனியறையில் இருப்பதும்
முதுமையில் பேச யாராவது இருந்தா பரவாயில்லைன்னு தனியறையில இருப்பதும்தான் வாழ்க்கை





பட்டதின் மேல் துளிர்த்தல்



## படித்ததில் பிடித்தது

**இரண்டு தினங்களுக்கு முதல் படிக்கும் போது கண் கலங்க வைத்த கதை...**

அவன் மனைவி விவாகரத்து செய்த பின் வீட்டுக்கு வந்தான். தன் அறையின் மூலையில் இருந்த காலியான மது போதல்களை பார்த்தான். கோபத்துடன் ஒன்றை எடுத்து "என் மனைவி விட்டு போக நீ தான் காரணம் என்று கூறி ஒன்றை எறிந்து உடைத்தான். "எனக்கு வேலை போக நீ தான் காரணம்" என்று கூறி அடுத்ததை எறிந்து உடைத்தான். "எனக்கு குழந்தை இல்லாதற்கு நீ தான் காரணம்" என்று கூறி அடுத்த போத்தலை எடுத்தான். அது சீல் உடைக்காத புது போத்தல். உடனே அருகில் வைத்து கூறினான். "உன் மேல் எந்த பிழையும் இல்லை நீ இருக்கலாம்"

நீதி:- ஆயிரம் குற்றவாளிகள் தண்டிக்கப்படலாம் ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படக்கூடாது.





## தங்க மகள்கள்

உலகத்தின் இரண்டாவது அதிக சனத்தொகை கொண்ட நாடான இந்தியா தன்னை ஜனநாயக நாடென அழைப்பதில் பெருமை கொள்கிறது.

அங்குதான் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், இழிவுபடுத்தல்கள், பாலியல் கொடுமைகள் யாவும் ஒரு நிறுவன மயப்பட்ட நிலையில் பிற்போக்காக நிகழ்வதாகக் கூறப்படுகிறது.

இந்த விதமான இழிவான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் ஆண்களாகவே இருக்கின்றனர். அந்நாட்டின் சட்டவாக்க துறை, நீதித்துறை, நிர்வாகத் துறை, ஊடகத்துறையாவும் ஆண்களின் பிடிக்குள் அவர்கள் சார்ந்த பண்பாடுகளுக்கூடாகவே கையாளப்படுகிறது.

இந்தச் சூழலில் அந்த நாட்டு ஆண்களினால் ஒலிம்பிக்கில் அசுர பலம் காட்டவே முடியாத சூழ்நிலையில் கடந்த பதினாறு ஆண்டுகளாக கர்ணம் மல்லேஸ்வரி, மேரி கோம், சாய்னா நேவால், சாக்ஷி மாலிக் போன்ற பெண்கள் அந்நாட்டின் மானத்தை உலக அரங்கில் காப்பாற்றி வருவதை வேடிக்கையாக நோக்கவே மனம் உந்துகிறது.

Dharshika Dhamodaran








## சைபர் மீன்கள்



**நிஜமும் கனவும்**



**இது எதேச்சையானதல்ல திட்டமிடப்பட்டது.!!!**



## இந்தவார மீம்ஸ் (Meme)

**உண்மையை முதலில் கொல்பவர்கள்.**




இணையவாசிகளுக்கு
உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள்.
சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும். https://www.facebook.com/puthuvithieditorial/



★ பளுதூக்கல் போட்டியில் ஆர்மேனிய வீரர் அன்ட்ரானிக் கரபெட்யன் தனது கையையும், ஜிம்னாஸ்ரிக் போட்டியில் பிரெஞ்வீரர் சமீர் அயிட் தனது காலையும் முறித்துக் கொண்ட சோகமும் இந்த முறை நிகழ்ந்தது.



முதன் முதலாக ஒலிம்பிக் போட்டிகளில் இம்முறை சேர்க்கப்பட்ட ஆண்களுக்கான றக்பி செவன் போட்டிகளில் பிஜி சம்பியனானது.



★ 100 மீற்றர் மகளிர் தடை தாண்டல் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் அமெரிக்கா கைப்பற்றியது.



★ மகளிருக்கான 100 மீற்றர் பிறி ஸ்ரைல் நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற முதல் அமெரிக்க கறுப்பின பெண் என்ற பெருமையை சிமோன் மனுவல் பெற்றார்.

# ஒலிம்பிக் - 2016
## விட்டுச் சென்ற நினைவுத் தடங்கள்



★ கொசாவோ தனி நாடாகப் பிரிந்து எட்டு வருடங்களின் பின்னர் முதல் தங்கத்தை மகளிர் ஜூடோ போட்டியில் மஜ்லிண்டா கெல்மண்டி பெற்றுக் கொடுத்தார்.




★ தென்னாபிரிக்க மகளிர் கிரிக்கெட் அணியில் விளையாடிய முன்னாள் வீராங்கனையான சனற்றே வில்ஜோயன் ஈட்டி எறிதலில் வெள்ளிப்பதக்கத்தை பெற்றுள்ளார்.

சிறுகதை

# அப்பாவின் கண்ணீர்

○ சி.பிருந்தன்



என்னால் இந்த சம்பவத்தை எப்படி சகித்துக் கொள்ள முடியும். என் அப்பா முதன் முதலாக அழுது நான் அன்று தான் பார்த்தேன். அப்பா அழுததைப் பார்த்த என்னால் சற்றுக் கூடத் தாங்க முடியவில்லை. என் அப்பம்மா கூட அப்பாவை ஆச்சரியமாக பார்த்தார். ஏனெனில் அப்பம்மா என்னிடம் அப்பாவைப் பற்றி அடிக்கடி கூறுவதுண்டு. அப்பா அழுத அன்று தான் எங்கள் சித்தப்பாவின் மரண நிகழ்வு நடந்தது. காலை நான் வழமை போல் பாடசாலைக்கு தயாரானேன். அப்பாவும் வேலைக்குத் தயாரானார். அம்மா உணவு தயாரித்தபடி வானொலியில் செய்திகளை கேட்ட வண்ணம் இருந்தார். மரண அறிவித்தலில் எங்கள் சித்தப்பாவின் பெயர் வாசிக்கப்பட்டது. நாங்கள் முதலில் நம்பவில்லை.


பின்னர் அப்பா மற்றும் தாத்தாவுடன் நாங்கள் சென்றோம். அங்கே நாங்கள் சித்தப்பாவின் சடலத்தை இனங்கண்டு கொண்டோம். அப்பாவும் தாத்தாவும் ஏதோ துண்டில் கையெழுத்து இட்டார்கள். நான் சடலத்தைப் பார்த்தவுடனேயே என் கண்ணிலிருந்து தாரை தாரையாக நீர் சொரிந்தது. தாத்தாவும் கூட அழுதார் ஆனால் அப்பா சற்றும் அழவில்லை. எனக்கு அதிசயமாகத் தெரியவில்லை.

நாங்கள் அனைவரும் வீட்டில் வந்து இறங்கினோம். நான் ஓடிச்சென்று அம்மாவை இறுக பிடித்துக் கொண்டு அழுதேன். அம்மாவும் அழுதார். பின்னர் திடீரென்று விடுதலைப் புலிகள் எங்கள் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர். என்னால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. யாராவது புலிகள் இறந்தால் தான் அவர்கள் இப்படிப் பாதுகாப்பு வழங்குவார்கள். ஆனால் எங்கள் சித்தப்பாவோ கணக்காளர் என்றல்லவா அப்பா என்னிடம் கூறியிருந்தார். இப்போது தான் என் காதிற்கு வந்தது அந்த விடயம். "என் சித்தப்பா வேவுப் போராளியாக பணியாற்றியவராம்"

நாங்கள் எல்லோரும் அழுதோம். ஆனால் அப்பாவோ மூலையில் எந்த ஒரு உணர்ச்சியும் அற்று இருந்தார்.

இரண்டாம் நாள் அன்று வானம் கண்ணீர் வடித்தது. நாங்கள் அனைவரும் இறுதிக் கிரியைக்குத் தயாரானோம். நான் அப்பாவுடன் மோட்டார் சைக்கிளில் சென்றேன். நாவலடி பாலத்தில் வெள்ளம் மேவிப் பாய்ந்தது. நான் வானத்தை நிமிர்ந்து பார்த்தேன்.

வானத்தின் துக்கமும் கருமேகக் குடையை துளைத்த வண்ணம் நீராகச் சொரிந்தது. நீரை மென்மேலும் சொரிந்து தனது ஆத்திரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. இரவாகும் பொழுது துயிலுமில்லத்தை அடைந்தோம். அந்த நடு நிசியில் கல்லறைகளை பார்த்த போதெல்லாம் எம்மை யாரோ அழைப்பது போன்ற ஒரு உணர்வு என் மனதில். எல்லாக் கிரியைகளும் முடிவடைந்தன. நாங்கள் எல்லோரும் சோர்வாக அமர்ந்திருந்தோம். நான் பார்த்தேன் அப்பாவைக் காணவில்லை. நான் தாத்தாவிடம் இதனைக் கூறினேன்.



உடனே அவர் அப்பாவைப் பார்க்கச் சென்றார். அப்பா எங்களிடம் வந்து நின்று திடீர் என்று பெரிதாக அழுதார். என்னால் நம்பமுடியாமல் விட்டாலும் அப்பாவின் கவலையை என்னால் அப்போது தான் புரிந்து கொள்ள முடிந்தது. என் அப்பம்மா கூறுவார். "உன் அப்பா சிறுவயதில் மிகவும் கஷ்டப்பட்டவர். ஆனால் கண் கலங்கி அழமாட்டான்" என்று சிறு வயதில் பாடசாலை செல்ல முன் வயலில் சென்று அப்பா வேலை செய்வார். பாடசாலை முடிந்த பின்னரும் அப்பப்பா வுடன் இணைந்து பாத்தி இடுவார். அப்பா, தான் உழைத்து வரும் காசில் அரைவாசியை அப்பம்மாவிடம் கொடுத்துவிட்டு மிகுதியை தானும் தன் சகோதரனும் பிரித்து எடுப்பார்கள்.

ஒருமுறை அப்பா தன் தம்பிக்கு (சித்தப்பாவுக்கு) அடித்த போது அப்பப்பா தண்டனை கொடுத்துள்ளார். இதில் என்ன ஆச்சரியம் என்றால், அப்பா தான் தடியை முறித்து அப்பப்பாவிடம் கொடுத்து விட்டு எங்கும் ஓடாமல் கையை கட்டிய வண்ணம் நின்று அடி வாங்கினார். நல்ல அடி. அப்பவும் அப்பா அழவில்லையாம்.

இன்னுமொருமுறை அப்பா கொழும்பில் ஒரு கூல்பாரில் வேலை செய்யும் போது அந்தக் கூல்பாரின் முதலாளி ஒரு சிங்களவரிடம் முரண்பட்டுள்ளார். இதை அறியாமல் வெளியில் வந்த எனது தந்தையை அந்த சிங்களவர் கம்பியால் முழங்காலில் அடித்தார். இதனால் எனது தந்தையின் வலக்கால் சிரட்டை நொடுங்கியது. இதன் போது கூட எனது தந்தை அழவில்லை. இன்று கூட அப்பா எங்களைப் போல் சைக்கிள் ஓட முடியாதவர்.

அடிக்கடி ஊரில் சுற்றிவளைப்பு நடக்கும். சந்தேகப்படுபவர்கள் அனைவரும் பிடிக்கப்பட்டு விசாரிக்கப்படுவார்கள். இந்த விசாரணையின் போது சில சமயங்களில் துவக்குப்பிடியால் அப்பாவுக்கும் அடிகள் விழுந்திருக்கின்றன. அப்போதும் அப்பா அழுது நான் பார்த்ததில்லை. இவற்றுக்கே அழாத அப்பாவின் கண்ணீரை இப்போது தான் முதன் முறையாகப் பார்க்கிறேன். சித்தப்பாவின் பிரிவுக்காக கண்ணீரோடு தேம்பியழும் அவர் என் கண்களுக்கு வழக்கமான அப்பாவாகத் தெரியவில்லை. ஒரு குழந்தையின் அழுகைக்கும் அவரது அழுகைக்கும் எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. அப்பா இன்னமும் அழுதுகொண்டே இருக்கிறார், கூடவே வானமும் தான்.

கரவெட்டி பிரதேச செயலகம் பாடசாலை மாணவர்களுக்கான சிறுகதைப் பயிற்சிப் பட்டறை ஒன்றை இரண்டு வாரத்திற்கு முன் நடத்தியது. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றிய மாணவர்கள் பயிற்சி நிறைவில் தாம் எழுதிய சிறுகதைகளை சமர்ப்பித்திருந்தனர்.

**அவர்களில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன். சி.பிருந்தன் எழுதிய சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.**

## பனியும் அவளும்

பின் ஜாமத்தின் மதியத்தில்
மலையின்
உச்சியிலிருந்து கீழிறிங்கியது
பனி.

கூர்மையான சுட்டிகளையும்
அறுக்கும் வாள்களையும்
ஏந்திய படி
போர் வீரனாய் விரைந்திறங்கியது

மொட்டுகளின்
பனிக்குடங்களை
உடைத்து எக்காளமிட்டபடி.
இலைகளின் விளிம்புகளை
சாணைப் பிடித்து
கூர்மையாக்கியபடி..

பாதைகளுக்குள் பதுங்கியிருக்கும்
சூரிய குஞ்சுகளை
மிதித்து மிரட்டிய படி

சலசலக்கும் ஓடைகளை
உறைய வைத்து
கடந்துச் சென்று
லயத்துக் கூரைகளில்
அமர்ந்து
ஓட்டைகளால் ஒழுகும்
அந்தரங்கம் தேடும்
களவாணியாய் காத்திருந்தது

ஆனால்
கூடையுடன் மலையேறும்
அவளிடம் மட்டும்
எஜமானை பின் தொடரும்
நாய்க் குட்டியாய்
வாலாட்டிச் சென்றது.

○ ஜெயதர்மன்



# அலம்பல் ஆச்சி

○ செல்வி

உந்த ஒலிம்பிக் போட்டியளிலை நடைபயணப் போட்டியெண்டு வைச்சாங்களெண்டா.. அங்கை தங்கம்.. வெள்ளி.. வெண்கலம் எல்லாம் எங்களுக்குத்தான் கிடைக்கும். ஆனா அதிலையும் ஒரு சிக்கல் இருக்கு. தமிழனுக்கோ சிங்களவனுக்கோ எண்டு அங்கை வைச்சும் இனப்பிரச்சினையை தொடக்கிப்போடுவாங்கள். உண்ணானைக் கேக்கிறன். ஏன்டாப்பா உங்களுக்கு உந்த வேண்டாத வேலையெல்லாம்? கொழுப்புக் கரைய நடக்கோணுமெண்டா, கோயில்களை சுத்தி நடவுங்கோ. இன்னும் கொஞ்ச காலத்திலை விகாரையை சுத்தித் தான் நடக்கவேண்டிவரும். ஆச்சி புசத்துதெண்டு நைக்காதேங்கோ. உதுதான் நடக்கப்போகுது. நான் பொய்யெண்டா இருந்து பாருங்கோ. நான் இண்டைக்கோ நாளைக்கோ செத்துப்போற ஆள். வேளைக்கு செத்துப்போயிடோணும். உங்கடை நல்லிணக்க விளையாட்டுக்களை பாத்தா கண் அழுகிடும். அதைவிட வேளைக்கு போய் சேருறது மேல். படிப்பு, வேலை எண்டு சுயநலமாய் இல்லாமை துவக்கெடுத் திருக்கோணும் எண்டு இப்பதான் ஆச்சிக்கு ஞானம் கிடைச்சிருக்கிது. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம். பிணக்குவியல்களுக்கு மேலை நிக்கேக்கை கிடைச்ச ஞானம், முந்தியே கிடைச்சிருந்தா இரத்த ஆறு ஓடுறதை தவிர்த்த காத்தவராயன்கள் ஆகியிருப்பம். ம்ம்ம்.. இப்ப புலம்பி என்ன பலன்.

மனத்தின்ரை பாரத்தை குறைக்கலா மெண்டு கோயிலுக்கு போனா அங்கை இன்னும் பாரத்தை ஏத்தியெல்லோ விடுதுகள். கோவில்களிலை திருவிழாக்காலம் தொடங்கியிட்டுது. என்னைப்போல ஆச்சிமார் பூச்சிமார் நிம்மதியா கோயிலுக்கு போகேலாமைக்கிடக்கு. அவ்வளவு சனம். அங்கனேக்கை ஒண்டிரண்டு தான் கும்பிட வருது. இப்ப கும்பிடுற முறையையும் மாத்திப்போட்டாங்கள். கையள் இரண்டையும் கூப்பி கும்பிடுற சிஸ்ரம் மாத்தியாச்சு.. ஒரு கையும்.. ஒரு தடவுற போனும் தான் தலையளுக்கு மேலாலை கூப்பி கும்பிடுது. அதிலை இருக்கிற ஒரே ஒரு நன்மை என்னெண்டா காற்சட்டையும் சட்டையுமா திரியிற பெடிபெட்டையள் எல்லாம் சும்மா பட்டு வேட்டியோடையும், சீலையளோடையும் தான் திரியுதுகள். எல்லாம் திருந்தியிட்டுதுகளோ எண்டு நினைச்சு என்ரை பேரப்பெடியனிட்டை கேட்டன். அவன் சொல்லுறான். சும்மா இரணை ஆச்சி.. அவங்கள் போட்டோ எடுத்து பேஸ்புக் வழிய போடோணும், அதுதான் விசயமெண்டு. அடக் கோதாரி. நல்ல இணையப் புரட்சிதான். என்ன அறுப்பெண்டாலும் பெடியள் வேட்டி கட்டுறதை மறக்காமை இருந்தா காணும். கோவில்லை கும்பிடுற ஆக் களைவிட பவனி பாக்கிற ஆக்கள் தான் கூட. தென்னிலங்கைக்காரருக்கு உல்லாசப் பயணத்துக்கான இடங்கள். தங்கடை போர்வெற்றிச் சின்னங்களை பாக்க வாற பெருமை அவைக்கு. புலம்பெயர்ந்து போனதுகளுக்கு நாட்டுக்கு வந்திட்டம் எண்டு பக்கத்து வீட்டுக்காரனுக்கு சொல்லிடோணும் எண்ட அவா. தாங்கள் அங்கை என்ன வேலை செய்யிறம் எண்டு ஆரும் கேட்டுடக் கூடாதெண்டு சும்மா கடனட்டைகளிலை காசை தண்ணியா செலவழிக்கினம். எங்கடை பெடியளும் அங்கை போனாக் காசுவரும் எண்டு வெளிநாட்டுக் கனவோடை படிப்புக்கு முழுக்குப்போடுதுகள்.

படிச்சதுகளிலை சிலதும் அங்காலை போய் கழுவிக்கொண்டுதானிருக்கினை. கழுவிறது தப்பெண்டு சொல்ல வரேல்லையடாப்பா நான். ஆனா ஆரின்ரையை கழுவுறம் எண்டது முக்கியம் தானே. பெடிச்சியளுக்கு வெளிநாட்டிலை மாப்பிளை பாப்பினம். பெடியன் என்ன செய்யிறான் எண்டு கேட்டா வெளிநாடெண்டுவினை. அட இருக்கிற இடத்தைக் கேக்கிறம் எண்டு நினைச்சிட்டு, பெடியன் அங்கை என்னவா இருக்கிறான் எண்டு கேட்டா, திருப்பியும் கனடா.. லண்டன்.. சுவிஸ் கிவிஸ் எண்டு நாடுகளின்ரை பெயர் தான் வரும். இஞ்சை பெடிச்சியும் கம்பஸ் படிக்கிறதை விட்டுட்டு இந்தியாக்கு ஓடும். ஏனெண்டா மாப்பிளை இலங்கைக்கு வரேலாதாம். இயக்கத்தைச் சாட்டி அங்கை விசா எடுத்திருப்பான். அப்பிடி ஒருத்தன் இருக்கிறானெண்டே ஆமிக்கு தெரியாமை இருந்திருக்கும். ஆனா அவரை ஆமி தேடுறான்.. கடத்தப்போறான் எண்டு புளுகியடிச்சு, தனக்கு தானே சூடும் வைச்சு ஆள் விசா எடுத்திருக்கும். என்ன கறுமத்தானோ.. இஞ்சை வரேக்கை வெளிநாட்டு சரக்கா தானே தெரியுது. பிறகென்ன.. இங்சை இருக்கிறவை எல்லாம் வளசரவாக்கத்தை நோக்கி ஒரு படையெடுப்பு. ஒரு கிழமைக் கூத்து.. கல்யாணம். பிறகு பெடிச்சி நாட்டுக்கு வந்து, ஒரு வருசம், ரண்டு வருசமென காத்திருக்க வேண்டியதுதான். பாவங்கள். இஞ்சைவாற ஆக்கள் வெக்கத்திலை தாங்கள் படுறபாடுகளை சொல்லுறேல்லை. இனியெண்டாலும் சொல்லுங்கோடாப்பவை. பெடியள் இஞ்சையே உழைச்சு சாப்பிடட்டும்.

சரியப்பனவை என்னெண்டாலும் செய்து துலையுங்கோ. பேரப்பெடியள் வெளிநாட் டாலை வந்துநிக்கினை.. 'செல்பி வித் அப்பம்மா' எண்டு போடுறதுக்கு ஒரு போட்டோ எடுக்கோணுமாம். எடுத்துட்டு வாறன். ஆச்சிட்டையும் ஐபாட் கிடக்கு. வாறன் ஒருக்கா கும்பிட்டுட்டு. ஊருக்கு உபதேசம். உனக்கல்லடி மகளே.

# நூல் இரசனைக் குறிப்புகள்

○ மௌனா

நூல் - வெளிச்சம் என் மரண காயம்


(கவிதைத்தொகுதி)

ஆக்கியோன் - நெற்கொழு தாசன்

வெளியீடு --கறுப்பு பிரதிகள், சென்னை.

பக்கங்கள் - 88

விலை - இந்திய ரூபா. 80.00



*வல்லை வெளியின் நினைவில் பனி படர்ந்த தேசங்களில், பாதம் பதிக்கவியலாத மன அவதியைக் கொண்டிருக்கும் இதிலுள்ள கவிதைகள் இன்னுமின்னும், நாம் புரிந்து கொள்ள வேண்டிய, அகதி இருப்பின் காவிகளாக நெற்கொழுதாசனின் வரிகள் தோன்றுகின்ற தென 'நீல கண்டன்' கறுப்புக் குறிப்புகள் என்ற தனது பக்கத்தில் குறிப்பிடுவதைக் கூர்ந்து கவனித்தால் இக்கவிதைகள் சொல்லும் செய்தியைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.*

*இது நெற்கொழுதாசனின் இரண்டாவது கவிதைத் தொகுதி.*

*"வலிகளும், வதைகளும் என்னையும் அலைக்கழித்துக் கொண்டே இருக்கின்றன. எப்படி மீள்வது? என்று தெரியாமலேயே, அந்த வரிகளோடு சொற்களைப் பிணையவிட்டுள்ளேன். மோகித்திருந்த கணங்களில் மோகத்தையும், தனித்திருந்த கணங்களில் தனிமையையும் அப்படியே இறக்கிவைத் திருக்கிறேன்" எனக் கவிஞர் குறிப்பிடுவதை கவிதைகள் நிஜமாக்குகின்றன.*

*மாதிரிக்குச் சில வரிகள்......*


வாழ்வைக் கடையும்
காலக்கயிறாகி விலகாது கிடக்கும்
ஏழாவது அறிவே இன்றெனக்குக்
கிடைத்த சாபமோ !

வல்லைவெளியின் கண்டல் மரங்களிலும்
வல்வைக் கடலின் முருகைக் கற்களிலும்
வயல் வெளிகளின் வரப்புகளிலும்
இன்னும் ஒழிந்திருக்கலாமென் வாழ்வு
திரும்பிப்பார்க்கிறேன்
பனிபடர்ந்த வீதியில் உருகிக்
கொண்டிருக்கிறது என் பாதச்சுவடுகள்.

*சொந்த மண்பற்றி உயிர்ப்புற்று உளத்தை நெருடும் நினைவுகளும், ஏக்கங்களும், உறவுகள் குறித்த ஆழ்மன அதிர்வுகளின் ஓசைகள் எழுப்பும் மானுட துயரங்களையும் கவிதை வரிகளாக்கி தனது ஆத்ம தேடலை கவிஞர் பதிவு செய்திருக்கிறார்.*

---

நூல் - இருள் மிதக்கும் பொய்கை
(கவிதைத் தொகுதி)
ஆசிரியர் - தர்மினி
வெளியீடு கருப்புப் பிரதிகள், சென்னை.
பக்கங்கள் - 72
விலை - இந்திய ரூபா. 70.00




*இயற்கையின் எல்லா அழகு அணுத்துகள்களுக்குள்ளும் தன்னை உள்ளடக்கிக் கொண்டவராக தன்னைத் தனது கவிதை வரிகளால் இனம் காட்டிக் கொள்ளும் தர்மினியின் உள்ளேயான வாசகனின் பயணமானது ஒரு புதிய வகையிலான ஆத்ம பரவசத்தை தருகின்றது என்றால் அது மிகையல்ல.*

இப்பாசி படிந்த குளத்தின்
ஒற்றை அல்லிப் பூ
காடுகளில் கரைந்த என் நிழலில்
சுகந்தம் பரப்பிய கொடி மல்லி நீர்
இருண்ட தண்ணீர்ப் படலத்தினை
ஊடுருவிப் பாயும்
செவ்வொளிச் சூரிய நீர்
எறிபட்ட கற்களின் சுமையில்
தளும்பிக் கிடந்த என் கரைகளை
அணைத்து வளர்ந்த புற்களில்
மலர்ந்த பூக்களெல்லாம்
உம் சொற்கள்

- எனத் தொடரும்

வரிகளின் சொற்கள் தர்மினியின் ஆத்ம ரம்மியத்தை அழகாக உணர்த் துவதை உணரமுடிகிறதல்லவா?

இப்படி ஒவ்வொரு வரிகளும் கவித்து வச் செறிவு கொண்டதாக மிளிர்கின்றன. இதுவே இக்கவிதைத் தொகுப்பு சுமந்து கொண்டிருக்கும் அற்புதமாகவும் உள்ளது.



வர்சி

# இலவு காக்கப் பிறந்தவர்கள்

காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பதற்கான பிரேரணை பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை சபாநாயகர் கருஜெயசூரிய கையொப்பமிட்டதன் மூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பதற்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நிறுவப்படவுள்ள காணாற்போனோர் தொடர்பான அலுவலகம் எவருக்கானது என்ற கேள்வி தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக அமைகின்றது. இந்த அலுவலகம் எந்தக் காலப்பகுதியை மையப்படுத்தப் போகின்றது? எந்தக் காலத்துடன் முடிவடையப் போகின்றது? என்பன குறித்த தெளிவு எவருக்கும் இல்லை. அது குறித்த விவரங்கள் யாவும் மூடு மந்திரமாகவே உள்ளது.

காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்படவுள்ளது என்ற பேச்சு எழுந்தவுடனேயே ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமாரதிஸநாயக்க, தமது அமைப்பின் முன்னாள் தலைவரான ரோகணவிஜயவீர மற்றும் அவரது காலத்தில் காணமற்போன ஜே.வி.பி போராளிகள் தொடர்பான முறைப்பாட்டை அந்த அலுவலகத்தில் செய்யப்போவதாக அறிவித்திருந்தார். அவ்வாறெனில் இந்தக் காணாமற் போனோர் அலுவலகம் இறுதிப்போரில் காணாமல் போனோரை மட்டுமல்லாது கடந்த காலங்களில் காணாமல் போன எல்லோருக்குமானதா? என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் எந்தக் காலப்பகுதியை தனது விசாரணைக்குள் கொண்டு வரும் என்பது குறித்த தெளிவான வரையறை வெளியிடப்படவில்லை "கடந்த காலங்களில் காணாமல் போனோர்" தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் என்று பொத்தாம் பொதுவாகச் சொல்வதால் பல சிக்கல்கள் தோன்றக்கூடும். சிறிமாவோ காலம் முதல் ரணசிங்க பிரேமதாஸ காலம் வரை பெருமளவில் ஜே.வி.பி உறுப்பினர்கள் கொல்லப்பட்டும். காணாமற்போயு மிருந்தனர்.அவர்களைப் பற்றியும் விசாரிக் கவே "கடந்த காலங்களில் காணாமல் போனோர்" என்ற பதம் பயன்படலாம். (அத்துடன் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஒல்லாந்தர், போர்த்துக்கீசர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் காணாமல் போனோர் குறித்துமல்லவா விசாரிக்க வேண்டியிருக்கும். ஏனெனில் அவர்களும் "கடந்த காலங்களில் காணாமல் போனவர்கள்" தானே)

அதேபோன்றே மூன்று தசாப்தகால தமிழரின் போராட்டத்தில் இலங்கை, இந்திய இராணுவங்களின் காலத்தில் பெருமளவில் தமிழர்கள் காணாமற் போயினர். அதிலும் குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் தமிழர்களின் காணாமற் போதல் மிகவும் உச்சம் பெற்றிருந்தது. நாளொரு வெள்ளை வானும் பொழுதொரு கடத்தலுமாக தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மறுவளமாகக் கூறுவதானால் இது ஒரு இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை எனலாம்.

அவ்வாறெனில் உருவாக்கப்படவுள்ள காணாமற்போனோர் செயலகம் தனது செயற்பாட்டை எந்தக் காலப்பகுதியை மையப்படுத்தி மேற்கொள்ளப் போகின்றது என்பதை அரசு முதலில் பகிரங்கப்படுத்த வேண்டும்.

சர்வதேசத்தின் பல்வேறு நெருக்குவாரங்களினால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஜனாதிபதி ஆணைக்குழுவை முன்னாள் நீதவான் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் நியமித்தார். இந்த ஆணைக் குழுவும் வடக்கு, கிழக்கு உட்பட பல இடங்களில் தனது சாட்சியப் பதிவை மேற்கொண்டது. இந்த ஆணைக் குழு முன்னிலையில் தமது உறவுகள் எவ்வாறு, யாரால், எங்கு கடத்தப்பட்டனர் என சாட்சியங்களுடன் காணாமற் போனோரின் உறவினர்கள், விலாவாரியாக எடுத்துக் கூறியிருந்தனர்.

ஆனால் அந்த ஆணைக்குழுவில் இருந்தவர்களோ அவர்களின் துயரங்களில் பங்கு கொள்ளாமல் அவர்களுக்கு ஆடு தருகிறோம். கோழிதருகிறோம். சமுர்த்தியில் சேர்க்கிறோம் என ஆசை வார்த்தைகளை மட்டுமே கூறிவிட்டு போய்விட்டனர்.

எனினும் இறுதியில் நடந்தது என்ன? கடந்த 15 ஆம் திகதியுடன் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்ததுடன் அந்த ஆணைக் குழுவின் பணிகள் முடிவுறுத்தப்பட்டன. அவ்வாறெனில் அந்த ஆணைக்குழுமுன் சாட்சிய மளித்தவர்களுக்கான நீதி என்ன?

தற்போது நல்லிணக்கச் செயலணி உருவாக்கப்பட்டு மீண்டும் அதே பல்லவி. அதே மக்கள். ஆனால் மக்ஸ் வெல்பரணகம இருந்த இடத்தில் வேறு நபர்கள். ஆட்கள் மாற்றப்பட்டார்களே தவிர காட்சி எதுவும் மாறவில்லை. அரசாங்கம் காணாமல் போனோர் விவகாரத்தையும், தமிழ் மக்களையும் கிள்ளுக்கீரையாகவே எண்ணுவதுடன், சர்வதேசத்தை ஏமாற்ற காலத்துக்கு காலம் ஆணைக்குழுக்களையும் அமைத்து நாடகமாடுகின்றது.

இந்த நாடகத்தின் ஓர் அங்கம் தான் இனிவரப்போகும் காணாமற்போனோர் அலுவலகம் அமைத்தல் செயற்பாடும் ஆகும். அந்த செயலகம் அமைக்கப்பட்டவுடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு, மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு, நல்லிணக்க செயலணி ஆகியவற்றில் சாட்சியமளித்தவர்கள் மீளவும் சாட்சியமளிக்க அழைக்கப்படுவர். அவ்வாறெனில் காலம் பூராகவும் சாட்சியமளிப்பதுதான் தமிழருக்கு எழுதப்படாத தலைவிதியா? தீர்வு என்பது வெறும் கானல்நீரா?

இன்னொரு முக்கியவிடயம் காணாமற்போனோர் பெருமளவில் வடக்கு, கிழக்கு பகுதிகளிலேயே உள்ளனர். ஆனால் காணாமற்போனோர் அலுவலகம் கொழும்பிலேயே அமைக்கப்படுமாம். பாதிக்கப்பட்டவர்களின் பகுதியிலேயே குறித்த அலுவலகத்தை அமைப்பது பொருத்தமாக அமையும். அதைவிடுத்து அரசாங்கம் தனது நலன்கருதி கொழும்பில் அலுவலகத்தை அமைக்க முற்படுவது கொழும்பிற்கு அடிக்கடி படையெடுக்கும் சர்வதேச பிரதிநிதிகளுக்கு படம் காட்டவே.

அத்துடன் காணாமற்போனோர் அலுவலகத்தை கொழும்பில் அமைத்துவிட்டு சாட்சியமளிக்க காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை கொழும்பிற்கு அழைத்தால் ஏற்கனவே நொந்து நூலாகியிருக்கும் அவர்களுக்கு பொருளாதார உதவிகளை வழங்குவது யார்?

முன்னாள் ஆட்சியாளரின் அச்சுறுத்தலுக்கு ஆளாகி ஆஸ்திரேலியாவில் குடும்பத்துடன் அரசியல் தஞ்சமடைந்த முன்னாள் பொலிஸ் பேச்சாளரான பிரசாந்த ஜெயக்கொடி தற்போதைய ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாடு திரும்பியுள்ளார். அவரை மீண்டும் பொலிஸ் சேவையில் இணைய அரசு அனுமதி அளித்துள்ளது.

முன்னைய ஆட்சியின் போது வெள்ளை வான் கலாசாரம் தொடர்பில் பெருமளவில் தான் அறிந்திருந்ததாகவும், முறையற்ற வகையில் ஊடகவியலாளர்களுக்கு தகவல் வழங்க பணிக்கப்பட்டதாகவும், தான் அதற்கு மறுத்தபோது தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அத்துடன் தனக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட இலக்கங்களை ஆராய்ந்த போது அது பாதுகாப்பு அமைச்சிலிருந்தே செயற்பட்டமையைக் கண்டு பிடித்திருந்ததாகவும் ஊடகங்களுக்கு அண்மையில் பிரசாந்த ஜெயக் கொடி தெரிவித்திருந்தார்.

வடக்கு, கிழக்கில் பெருமளவில் காணாமற்போதல் சம்பவங்கள் வெள்ளைவான் மூலமாகவே நடைபெற்றன. அவ்வாறெனில் வெள்ளைவான் தொடர்பில் பிரசாந்த ஜெயக் கொடியிடம் விசாரணை நடத்தினாலே காணாமற் போனவர்கள் தொடர்பில் பெருமளவில் தகவல்கள் கிடைக்குமல்லவா? இதன் மூலம் குற்றவாளிகளை சுலபமாக கண்டு பிடிப்பதற்கு வழிபிறக்கும். எனினும் தனது இனத்தை பிறிதொரு இனத்திற்காக காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டில் பேரின அரசு கடைசிவரை களமிறங்காது.

இறுதிப்போரில் 40 ஆயிரம் தமிழர்கள் கொத்து கொத்தாக கொல்லப் பட்டதனையும், கிளஸ்ரர் குண்டுகள் வீசப்பட்டதனையும் ஆதாரத்துடன் நிருபித்த போதிலும் அதனை மறுதலித்து புலிகள் மேல் பழியை போட்டுவரும் அரசாங்கம் காணாமற்போன உறவுகளுக்கு மட்டும் தீர்வை வழங்குமென எதிர் பார்ப்பது மடமை தானே. எப்போதும் நாங்கள் இலவு காக்கும் கிளிகள் தான்.

---

## குட்டீஸ் பக்கம்

### குட்டீஸ் பரிசுப் போதி – 05

புதுமுகங்கள்

**வெற்றியாளர்கள்**

- க.கிருத்திகா
  அளம்பில்,முல்லைத்தீவு.
- சந்திர குமார் சபேஸ்கர்
  புத்தளம்.
- பாலரட்ணம் கபில்றமணன்
  இணுவில்.

**விடை :**

**மின்சார ரயில்**
**புகையை**
**வெளிவிடாது.**



# சரியா? பிழையா?

பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசாவின் வாகனம் அண்மையில் விபத்துக்குள் ளான செய்தி கடும் விமர்சனங்களை கிளப்பியிருந்தது. அவரது வாகனம் இன்னொரு மோட்டார் சைக்கிளை மோதியது. இதன் போது சில இளைஞர்கள் அவரை மறித்து குறித்த சேதத்திற்கு பணம் கொடுத்தால் தான் வழி விடுவோம் என்று சர்ச்சை யில் ஈடுபட்டார்கள். அவசர விஜயமாக பாவிப் பாஞ்சானுக்கு செல்ல வேண்டியிருப்பதாக அவர் கூறிய போதும் பணத்தை தராமல் இந்த இடத்தை விட்டு நகர முடியாது என்று இளைஞர்கள் வாதிட்டனர்.

இதன் போது இளைஞர்கள் செயற்பட்ட விதம் சரியா என்ற கேள்வி பரவலாக எழுந்தது. அவர் மீது பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தாலே அதற்கான இழப்பீடு கிடைத்திருக்கும் அல்லது காப்புறுதி பணமும் கிடைத்திருக்கும். மேலும் வாகனத்தை பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா செலுத்த வில்லை. அது சாரதியின் தவறே. விபத்துக்கள் தற்செயலாக நடைபெறு பவை. திட்டமிட்ட ரீதியி லானவை அல்ல. ஆகவே இவற்றை முறையாக கையாள்வது தானே பொருத்தம்.

மக்கள் பிரதிநிதி சரியாக நடக்க வேண்டும் தான் அதே வேளை மக்களும் பொறுப்பாக இருக்க வேண்டும்.



அண்மையில் நல்லூரில் இடம் பெற்ற சம்பவம் ஒன்று சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

நல்லூர் திருவிழாதற்போது நடைபெற்று வருகின்றது. அதனை முன்னிட்டு ஆலயச் சூழலில் காலணிகளுடன் நடமாட வேண்டாம் என ஆலய நிர்வாகம் ஆலயத்திற்கு வருவோரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு திருவிழா முடிவடைந்த பின்னர், இரு இளைஞர்கள் ஆலயத்தின் பின் வீதிவழியாக காலில் செருப்புடன் சென்று கொண்டிருந்தனர்.

அங்கு சிவில் உடையில் கடமை யில் இருந்த இரு பொலிசார் அதனைக் கண்டு இரு இளைஞர்களையும் மறித்து "செருப்புடன் செல்ல கூடாது என தெயரியாதா?" என கேட்டு அவர்கள் மீது கைகளால் தாக்கியுள்ளனர்.

அதனை பார்த்த ஆலய வீதியில் இருந்தவர்கள் "செருப்புடன் சென்றதற்காக அவர்களை தாக்குவீர்களா?" என சிவில் உடையில் நின்ற பொலிசாருடன் கேள்வி எழுப்பி இருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு சீருடை யுடன் காலில் சப்பாத்துடன் வந்த பொலிசார் ஒருவர் குறித்த இரு இளைஞர்களையும் "சந்தேகத்தில் கைதுசெய்கிறேன்" என கூறி இருவரையும் கைது செய்து, யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றார். பின்னர் நீதவானின் முன்னிலையில் ஆஜர்படுத்தி பத்தாயிரம் ரூபாய் பிணையில் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இளைஞர்கள் காலணி அணிந்தது தவறா? பொலிஸ் நடந்து கொண்ட முறையும் சரியா? பிழையா ?

## சொல்லுங்கள் - 09 வெல்லுங்கள்

**விடை :** முடிவுகள்

**இதுவரை யாரும் இந்தியா சார்பில் தங்கம் பெறவில்லை.**

**முதலாம் பரிசு - ரூ. 2000**

1. M.M.M Malik
490/1 Kaswatta, Poojapitiya, Akurana.

**இரண்டாம் பரிசு - ரூ. 1500**

2. **ர.மயூரன்**
உடுத்துறை வடக்கு, தாளையடி.

**மூன்றாம் பரிசு - ரூ. 1000**

3. **சி.அன்னலிங்கம்**
நெல்லியான் வீதி, கல்விளான், சுழிபுரம்.

**ஆறுதல் பரிசு - (தலா ரூ.500 வீதம்)**

i. **சி.தருண் - தரம்-5**
அராலி முருகமூர்த்தி வித்தியாச்லை

ii. **தி.கம்ஷாயினி**
கனகபுரம் மகா வித்தியாலயம்

## புதுவிதி பாராட்டுப்பெறுவோர்

தி.சந்திரகலா - இல.44 , கனகபுரம் ,கிளிநொச்சி.
தி.கம்ஷாயினி - கனகபுரம் மகா வித்தியாலயம்
திருமதி பு.தில்லையம்பலம் - மட்டுவில் தெற்கு.
இ. சிவசிறிதரன் - அல்பா மிக்சர் கடை, சங்கானை.
சி.விஜயராணி - அராலிமத்தி, வட்டுக்கோட்டை
சி.பாவரசன் - தரம்-4 அராலி முருகமூர்த்தி வித்தியாசலை
திருமதி. ஆர். ஸ்ரீநிவாசன் - வெள்ளவத்தை.
க.திருவரசு - இல.44, கனகபுரம்,கிளிநொச்சி

*(பரிசில்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்)*

# விழியில்லா விடினும் ஒளியுண்டு

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் நோக்கம் வலுவிழந்தோருக்கான தொழில் வாய்ப்பை நேரடியாகவும், மறை முகமாகவும் வழங்குவதாக உள்ளது. அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதற்கான வசதிகளை ஏற்படுத்துவது என்ற அடிப்படையிலேயே திட்டமிடப் படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட வளங்க ளோடும் குறைந்த வசதிகளோடும் இந்த உற்பத்தியை மேற்கொண்டுவருகிறோம்.

எமது நிறுவனத்தினூடாக அங்கத்தவர்களுக்கு வட்டியில்லாத கடன் வசதி செய்து கொடுக்கிறோம். இதனூடாக அவர்கள் சுய தொழில் வாய்ப்பை மேம்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதோடு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பண்ணைத் தொழிலை விரும்புபவர்களுக்கு ஆடு, மாடு என்பனவற்றை வழங்குகிறோம். மிளகாய்த் தூள் மற்றும் மா அரைத்து விற்பவர்களுக்குரிய உபகரணங்களை வழங்கிவருகிறோம். அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குக் கற்றலுக்கான உபகரண உதவிகளையும் செய்து வருகிறோம்.

வலுவிழந்தவர்களிடையே தமது வாழ்வாதாரத்திற்குரிய நிதியை உழைத்துப் பெறமுடியாமல் நலிவுற்றிருப்போருக்கு சுழற்சி முறையிலே உலர் உணவுப் பொருட்களை வழங்கிவருகிறோம். இதற்குப் பொது மக்கள் தரும் ஆதரவு மகத்தானது.

எமது சமூகத்தில் மனிதம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றதென்பதற்கும், ஜீவகாருண்யம் இன்னும் அடிபட்டுப் போகவில்லையென்பதற்கும் கருவியின் செயற்பாடுகள் சாட்சியாயிருக்கின்றன. ஏனெனில் இதுபோன்ற நிறுவனங்களின் வெற்றியென்பது ஒரு குழுமத்தின் செயற்பாட்டோடு நிறைவுபெறுவதல்ல, இது ஒரு சமூகத்தின் முழுமையான பங்களிப்பும் அதை உறுதி செய்கிறது. அந்த வகையில் சமூகத்தின் பல தளங்களிலுமிருந்து கருவி சமூக நலவள நிலையத்தோடு இணைந்து பலர் தமது பங்களிப்பை உடலாலும், நிதியாலும் மற்றும் புலமைசார்ந்த பங்களிப்பையும் செய்கிறார்கள். உதாரணத்திற்கு எமது வலு சஞ்சிகைக்கு எமது உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய பலர் சமூகத்திலிருந்து விடயங்களை தந்துதவுவதைச் சொல்லலாம். மொத்தத்தில் சொல்லப்போனால் சமூகம் எமது பணியை நன்றாக அறிந்திருக்கிறது.




எம்மை நன்றாகப் புரிந்திருக்கிறது. அதனாலேயே பல விடயங்கள் சாத்தியமாகின்றன.

கடைசியாக சமூகத்திடம் வேண்டுகோள் ஒன்றை விடுப்பதற்கு விரும்புகிறேன். முன்பு இதைப் பத்திரிகை விளம்பரமாகவும் கொடுத்திருந்தோம். எமக்கு காணிக்கொடை தரக்கூடிய நன்கொடையாளர்களை கருவி தேடுகிறது. காணியையோ அல்லது அது தொடர்பாக நிதியையோ தரக்கூடியவர்கள் எம்முடன் கருவி, 1166/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியினூடாகவும் 021 - 205 4224 மற்றும் 076 858 2732 என்ற தொலைபேசியினூடாகவும் தொடர்புகளை மேற்கொள்ளலாம். விழியிழந்தாலும் நாங்கள் வலுவிழக்கவில்லை என்பதை சொல்வதற்கு "கருவி" தொடர்ந்து பாடுபடும்.

அபயன்



# தலைநகரில் ஒரு நாடகப் பெருவிழா

## திருமறைக் கலாமன்றத்தின் இன்னொரு முனைப்பு

திருமறைக் கலாமன்றம் 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அருட் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளே இதன் ஸ்தாபகரும் இயக்குநருமாக உள்ளார். இலங்கையில் 50 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இயங்கி வருகின்ற ஒரே ஒரு அரங்க நிறுவனமாக இது திகழ்கின்றது. யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு இன்றும் அங்கேயே தலைமைச் செயலகத்தினைக் கொண்டிருந்தாலும் இலங்கை முழுவதிலும் கிளைகளைக்கொண்டு இயங்கி வருகின்றது. இன, மத, மொழி கடந்து இயங்கி வரும் இந்நிறுவனம் காலத்தின் சூழமைவிற்கு ஏற்றதான அரங்கப் படைப்புக்களை உருவாக்கி அளிக்கை செய்து வந்துள்ளது. யுத்தகாலத்தில் முதலாக வடபகுதியில் இடையறாது இயங்கி வந்த ஒரே ஒரு அரங்க இயக்கம் இதுவே. யுத்த காலத்தில் நெருக்கீடுகளுக்குள் வாழ்ந்த மக்களுக்கு ஆற்றுப்படுத்தலையும் யுத்தத்திற்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான வலுவான குரலையும் அரங்கப் படைப்புக்களுக் கூடாக வழங்கி, சமாதானத்திற்காக உழைக்கும் தன்னார்வ நிறுவனமாக செயலாற்றி வந்திருக்கின்றது. நாடக மேடையேற்றங்கள், அரங்கச் செயற்பாடுகள், தொடர் நாடகப் பட்டறைகள், அரங்கியல் கண்காட்சிகள், நுண்கலைகளுக்கான அரங்கியல் கல்லூரி, ஓவியக் கலைக்கான ஓவியக்கூடம், மற்றும் பல்வேறு நூல் வெளியீடுகள், கலை இலக்கியத்திற்கான "கலைமுகம்" சஞ்சிகை, நாடக அரங்கியலுக்கான "ஆற்றுகை" சஞ்சிகை வெளியீடுகள், மரபுவழி நாடகங்களான நாட்டுக் கூத்துக்கள், இசை நாடகங்கள் என்பவற்றின் தொடர் மேடையேற்றங்கள, ஆவணமாக்கல் செயற்பாடுகள் என பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

ஒரே வகை மாதிரியான நாடகங்களுக்குள் மட்டுப்பட்டுவிடாது பல்வகை நாடகங்களையும் மேடையேற்றி வந்திருப்பதுடன் அரங்கில் பல்வேறு பரீட்சார்த்த முயற்சிகளையும் சாத்தியமாக்கியுள்ளது. இத்தகைய முயற்சிகளின் நீட்சியாக நீண்ட நாட்களுக்குபின் நான்கு வெவ்வேறுவகையைச் நாடகங்கள் அரங்கேறுகின்ற நாடக விழாவாக இந் நாடகவிழா காணப்படுகின்றது. இதில் மேடையேற்றப்படுகின்ற நாடகங்கள் வெவ்வேறு வகை சார்ந்திருப்பினும் அவை ஒவ்வொன்றும் மானிட நேசிப்பிற்கான அவசியத்தையும் சமாதானத்திற்கான வேண்டுதலையும் தருபவையாகவே அமைந்துள்ளன.

இந்த வகையில் எதிர்வரும் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் கொழும்பு, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மாலை 05.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ள திருமறைக் கலாமன்ற நாடக விழாவில் நரன்கு நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன. இதன்போது முதலாம் நாளில் குசேலர், 13.7+π=Ω ஆகிய ஆற்றுகைகளும் இரண்டாம் நாளில் புதியதொரு வீடு, அசோகா போன்ற ஆற்றுகைகளும் அரங்கேறுகின்றன.

### மஹாகவியின் புதியதொரு வீடு (கவிதை நாடகம்)

ஈழத்தின் சிறந்த கவிஞர்களில் ஒருவரான மஹாகவி என்ற புனை பெயரைக் கொண்ட உருத்திர மூர்த்தியினால் 1969 இல் எழுதப்பட்ட இந் நாடகம் முதன் முதலாக அதனை எழுதத் தூண்டிய அ.தாசீசியசாலும் பின்னர் பல நெறியாளர்களினால் பல்வேறு கால கட்டங்களிலும் மேடையேற்றப்பட்டு வந்துள்ளது. கொழும்புத் திருமறை கலா மன்றத்தினால் 1999 ஆம் ஆண்டு அ.பிரான்சிஸ் ஜெனத்தின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டது. இப்போது மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந் நாடகம் க.பொ.த (சா.த) இல் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்கான பாட நூலாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாடகம் முழுக்க முழுக்க மீனவ குடும்பம் ஒன்றினை மையப்படுத்தியதான கதைப் பொருளைக்கொண்டு காணப்படுகின்றது.புயல் ஒன்றினூடாக சிதைவுறும் குடும்பம் ஒன்றில் ஏற்படும் நெருக்கீடுகளும் அந் நெருக்கீடுகளுக்கு தீர்வுகாண முற்படும் போது எதிர்பாராது எழும் சவால்களை மானிடர்களாக நின்று அதனை எவ்வாறு எதிர்கொண்டு வாழ்வது என்ற முடிவினையும் கொண்டு காணப்படுகின்றது.

### குசேலர் (இசைநாடகம்)

ஈழத்தின் மரபுவழி நாடகங்களில் ஒன்றாக ஏற்கப்பட்டு இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக செல்வாக்கு பெற்றுள்ள ஸ்பெஷல் நாடகம், பார்ஸிய நாடகம் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்ற இசை நாடகப் பாரம்பரியமானது ஜனரஞ்சகம் மிக்க மரபாக நீட்சி பெற்று வந்துள்ளது. கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டு பாடுதலால் நடித்தல், நடித்ததால் பாடுதல் என்ற நுட்பங்களுடன் நிகழ்த்தப்படும் இம் மரபு நடிகமணி வி.வி.வைரமுத்து உட்பட பல்வேறு இசை மேதைகளால் பயில்விற்கு உட்பட்ட வடிவமாகும்.

யுத்தகாலத்தில் நலிவடைந்து சென்ற இவ்வடிவத்திற்கு திருமறைக் கலா மன்றம் புத்துயிர்ப்பு ஏற்படுத்தியது. பாரம்பரியமான இசை நாடகங்கள் மட்டுமன்றி தொண்ணூறுகளில் புதிதாகவும் பல இசை நாடகங்கள் மன்றக் கலைஞர்களினால் எழுதி நெறிப்படுத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக புதிதாக எழுதப்பட்ட "குசேலர்" சரிதை இங்கு இசை நாடகமாக அரங்கேற்றம் செய்யப்படுகிறது.

"குசேலர்" பல பிள்ளைகளுடன் வறுமையே வாழ்வாக வாழ்பவர். இனியும் சுமக்க முடியாத வறுமைச் சோகத்துடன் தனது பால்ய நண்பனான கண்ணனைக் காணச் செல்கிறார். கண்ணனைக் கண்டதால் வறுமைக் கோலம் நீங்கி பெரும் செல்வம் கொள்கிறார். அப் பெருஞ் செல்வம் ஆடம்பரத்தினையும், அகப்பிறழ்வுகளையும் தோற்றுவித்து அமைதியை அழிக்கின்றது. வறுமையில் கண்ட வாழ்வு இப் பெருமையில் கண்டிலேன் என்று வருந்துமளவிற்கு ஆடம்பரத்தினால் பிறழ்வுறும் தன் குடும்பத்தினையும் சமூகத்தினையும் கண்டு நொந்து கொள்கிறார். கண்ணன் அவரை ஆற்றுப்படுத்துகிறார். வெறும் பொருளாதார அபிவிருத்தி மட்டும் அமைதியை அளித்துவிடாது என்பது உணர்த்தப்படுகின்றது.



### 13.7+π=Ω (வார்த்தைகளற்ற நாடகம்)


யுத்த காலத்தில் பேசாப் பொருளை பேசவும், மொழிகடந்து எவரும் புரிந்து கொள்ளக் கூடியதுமான வார்த்தைகளற்ற 'ஊமை' நாடக வடிவமொன்றினை திருமறைக் கலாமன்றமே உருவாக்கியது. நீ.மரியசேவியர் அடிகளே இதன் பிதா மகன். பதினைந்திற்கு மேற்பட்ட வார்த்தைகளற்ற நாடகங்களை திருமறைக் கலாமன்றம் தயாரித்து அளிக்கை செய்துள்ளது. நடிகர்களின் உடல் மொழியும், செயல்கள், அசைவுகளுமே இந் நாடகத்தின் மொழியாகும், இசை இன்றியமையாத ஊடுபொருளாக இந்நாடக மரபில் இரண்டறக் கலந்து நிற்கும்.

இத் தொடர்ச்சியில் 13.7+π=Ω என்ற உலகத் தொடக்கம் முதல் அதன் முடிவு வரையான காலக் கணிப்பை வெளிப்படுத்தும் வாய்ப்பாட்டின் பெயரிலேயே இந் நாடகம் ஆக்கப்பட்டுள்ளது. உலகம் உருவான பெரு வெடிப்பில் இருந்து மனித குலம் தோன்றிய வரலாற்று முதல் படிப்படியான அதன் வளர்ச்சி, நாகரிகங்கள், கண்டுபிடிப்புக்கள் என வளர்ந்த இன்றைய இலத்திரனியல் தொழில்நுட்பயுகம் மட்டுமான வளர்ச்சி பிரமாண்டத்தினை காட்டுகின்ற அதேவேளை சிதைவுறும் "மனித நேயத்தின்" ஆபத்தினை வெளிப்படுத்தும் வடிவமாக இந் நாடகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### அசோகா (ஆடல் அளிக்கை)

தொண்ணூறுகளில் இருந்து திருமறைக் கலாமன்றம், அசோக சக்கரவத்தியின் வரலாற்றினை வார்த்தைகள் அற்ற 'ஊமை' நாடக வடிவத்தில் பல தடவைகள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் மேடையேற்றி வந்துள்ளது. யுத்த நாட்களில் யுத்தத்திற்கு எதிரான கருப்பொருளாக இக்கட்டான காலகட்டங்களிலும் தலைநகரில் இதனை மேடையேற்றி திருமறைக் கலாமன்றம் பலரது பாராட்டுக்களையும் பெற்றது. இப்போது அதனை பரத நடனத்தின் அடிப்படையிலான ஆடல் அளிக்கையாக திருமறைக் கலாமன்றம் தயாரித்தளிக்கிறது.

பல்வேறு பிரதேசங்களையும் போர் செய்து கைப்பற்றி ஆட்சிக்குட்படுத்தும் அசோகச் சக்கரவர்த்தி, கலிங்கத்துடனான போரில் மனமாற்றம் பெறுகிறான். கொன்று குவித்த மனித உயிர்களின் பெறுமதியை உணர்கின்றான். யுத்தத்தில் அழிந்த பிரதேசத்தினை மீளக்கட்டியெழுப்புகிறான். சமாதானத்தின் தூதுவனாக மாறுகிறான். இணக்கப்பாடு பற்றி சிந்திக்கும் ஒவ்வொருவருக்கும் "அசோகன்" ஒரு முன்மாதிரிகை.



# பறை

பறை ஒரு தமிழிசைக் கருவியாகும். இது தோலால் ஆன மேளமாகும். 'பறை' என்ற சொல் பேச்சைக் குறிப்பதாகும். 'பேசு' எனப் பொருள்படும். 'அறை' என்ற சொல்லினின்று 'பறை' தோன்றியது. (நன்னூல் : 458). பேசுவதை இசைக்கவல்ல தாளக் கருவி 'பறை' எனப்பட்டது. பன்னெடுங்கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பறை, ஓர் இசைக் கருவி மட்டுமல்ல தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து. தோலிசைக் கருவிகளின் தாய். தமிழினத்தின் தொன்மையான அடையாளம். உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம். தமிழர் வாழ்வியலின் முகம் என வருணிக்கப்படுகிறது.


# திருகல் (திரிகை)



எமது முன்னோர் தமது வேலைகளை இலகுவாக்கிக்கொள்வதற்காக கையாண்ட முறைகளில் ஒன்றே 'திருகல்' (திருகை) ஆகும். குரக்கன், உழுந்து, பயறு, அரிசி, சோழன், போன்ற இன்னோரன்ன தானியங்களை அரைப்பதற்குப் பயன் படுத்தப்படுகின்றது. கருங் கல்லினால் நன்கு பொழிந்து, தானியங்களை அரைக்கத்தக்க வகையிலும், பிடித்து சுற்றும் வகையில் கைபிடி வைத்து வடிவமைக்கப்பட்டிருக்கும். இருந்த இடத்திலிருந்து இலகுவாக அரைக்கத்தக்க வகையில் தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டிருப்பது வியப்பினை ஏற்படுத்துகின்றது.

இன்று இவற்றிற்கு பதிலாக இலத்திரனியல் இயந்திரங்களின் வருகையினால் இவற்றின் தேவை குறைவடைந்து செல்கின்றன. இதனால் எமது முன்னோர்களின் பொறிமுறை உத்திகள் கேட்பாரற்று நூதன சாலைகளிலும், வீட்டு மூலைகளிலும் அநாதரவாகக் கிடக்கின்றன.


# சோமசுந்தரப்புலவர்



சோமசுந்தரப் புலவர் (மே 25, 1878 - ஜூலை 10, 1953) தங்கத் தாத்தாஎன அன்பாக அழைக்கப்பட்டவர். ஏறக் குறையப் பதினைந்தாயிரம் செய்யுள் களை இயற்றியுள்ளார். "ஆடிப் பிறப் புக்கு நாளை விடுதலை" போன்ற பல செய்யுள்களை சுவையான முறையில் எளிய தமிழில் பாடியுள்ளார். பல வகைப் பக்திப் பாடல்களையும் அவர் இயற்றியிருக்கின்றார். பனையின் பெருமைகளைக் கூறும் தாலவிலாசம், கதிர் காமம், முருகக்கடவுளைக் குறித்துபாடிய கதிரைச் சிலேடை வெண்பா என்பன புகழ் பெற்றவை.

நவாலியூர் அருணாசல உபாத்தியாயரிடம் தமிழ், இலக்கண இலக்கியங்களையும் தனது உறவினரான இராமலிங்க உபாத்தியாயரிடம் ஆங்கிலத்தையும் கற்றார். சிறுவயதிலேயே பேச்சாற்றலையும் விவாதத்திறமையும் பெற்றார். தனது இளமைப் பருவத்திலேயே அட்டகிரி முருகன் பதிகம், அட்டகிரி முருகன் திருவூஞ்சல், சாவித்திரி கதை, பசுவின் கதை போன்ற நூல்களை இயற்றினார்.

கிராமிய, மரபார்ந்த பாடல் பண்பாட்டினை அறிந்து கொள்ளும் போது சோம சுந்தரப் புலவர் முதலான ஆளுமைகளைத் தவிர்த்துவிட்டு அவற்றின் முழுமையை அடைய முடியாது.



# காவன் தீசனின் தமிழ்த் தளபதிகள்

வரலாற்று புகழ் மிக்க தமிழ் மன்னன் எல்லாளன் வடக்கு இலங்கையை அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்ட போது காவன்தீசன் (கி.மு. 205 -167) தெற்கு மற்றும் தென்கிழக்கு இலங்கையை இணைத்த உருகுணைப் பிரதேசத்தை ஆண்டான்.

காவன்தீசனின் பத்துத் தளபதிகள் எனப்படுபவர்கள் இலங்கையின் காவன்தீச மன்னனால் தனது படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பலம் வாய்ந்த விசேட திறமைகள் கொண்ட நந்தி மித்ர, சுரநிமல, மகாசேன, கோதாயிம்பர, தேரபுத்தபாய, பரண, வேலுசுமண, கஞ்சதேவ, புஸ்ஸதேவ, லபியவசப எனும் பத்து இளைஞர்களாவர். அங்கம்போர என்ற இலங்கையின் தற்காப்புக் கலை வல்லுநர்கள். காவன்தீச மன்னன் இந்தப் பத்துத் தளபதிகளையும் நியமித்து அவர்கள் ஒவ்வொருவரின் கீழும் ஆயிரம் இளைஞர்கள் பணிபுரியும் வண்ணம் தனது படையை ஒழுங்கமைத்தான்.

இப் பத்து தளபதிகளும் தமிழர்களாவர். அக்கால வரலாற்றில் இடம் பெற்ற போர்களில் இத்தளபதிகளின் பணிகள் பற்றிச் சிங்கள, பாளி வரலாற்று நூல்கள் தகவல்களைத் தருகின்றன.

# பிளா



எமது முன்னோரின் கண்டு பிடிப்பில் இதுவும் ஒன்று. பனை ஓலையை வெட்டி மடித்து செய்யப்படும் பிளா இயற்கையான பனை, தென்னங்கள், கூழ் முதலான பானங்கள் குடிக்கப் பாவிக்கப்படுகின்றது. இப்படி ஓலையை மடித்துக்கட்டி கிராமப்புறங்களில் இறைச்சி, வெள்ளரிப்பழம் என்பவற்றினை காவிச்செல்லவும் பிளா மாதிரியாகத்தான் பின்னப்படுகிறது. பனையிலிருந்து இறக்கிய கள்ளை பனைக்குக் கீழே இருந்து பிளாவில் குடிப்பதும் சுகம்தானென்று தாத்தாமார் சொல்வது அன்றைய இயற்கை வாழ்வை எடுத்தியம்புகின்றது.

## மரபுரிமைப்போட்டி - 09 முடிவு

சரியானவிடை - கணேஸ்வராச்சாரி

வெற்றி பெற்றவர் - கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை.

# வாரப் பலன்



**மேடம்**
சாப விமோசனம். பணி முடக்கம். நூதன வரவு. கள்வர் பயம்.

**ரிஷபம்**
சஞ்சலம். கருத்து வேற்றுமை. தூர உறவு நன்மை. மங்கள நிகழ்சி.

**மிதுனம்**
பிரிவுத் துயர். மண்ணால் பயன். சமூக நன்மை. நற் பெயர்.

**கடகம்**
நட்பால் நன்மை. பிறதேச செய்தி. பயிர்பலிதம். பூர்வ புண்ணியம்.

**சிம்மம்**
எதிரிகளால் தொல்லை. கனவு பலிதம். தெய்வ சிந்தனை.

**கன்னி**
நிலை தடுமாற்றம். ஜலதோஷம். காரியக் கேடு. தெய்வ அனுக்கிரகம்.

**துலாம்**
கனவு பலிதம். குறை கேட்டல். போக சுகம். தான விருத்தி. மன மகிழ்சி.

**விருச்சிகம்**
நிலை விருத்தி. விருந்துபசாரம். காரியக்கேடு. பண வரவு. சுக செய்தி.

**தனுசு**
நேர்மை. மன வலிமை. தெய்வ சிந்தனை. இட மாற்றம்.

**மகரம்**
சோதனையில் வெற்றி. தர்ம சிந்தனை. வியாபார மேன்மை

**கும்பம்**
கல்வித் தடங்கல். காரிய சமபலன். கால்நடை நன்மை. தெய்வ சிந்தனை.

**மீனம்**
நன்மை தீமையற்ற சமநிலை. சத்திய சோதனை. வித்யா விருத்தி. பயணம். சுகசெய்தி.

"**நினைவுக் குறிப்புகள்**" என்ற அ. யேசுராசாவின் நூல் அறிமுக நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை மாலை (21.08.2016), குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அருட்பணி ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வரவேற்புரையை கு.இராயப்புவும், அறிமுகவுரையை யேசுதாசன் இக்னேசியசும், மதிப்பீட்டுரையை தி.செல்வமனோகரன், த.அஜந்தகுமார் ஆகியோரும் நன்றியுரையை இன்பகுமாரும் நிகழ்த்தினர்.

படைப்பாளிகளும், பெருமளவான பிரதேசவாசிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## பிறந்த நாள்



- ஆவணி 28 -
இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்கவின் பிறந்த நாள்.

## இந்த வார வரி



"நான் சுட்டு வீழ்த்தப்பட்ட பெண்ணாக அல்ல. அதன் பின்னும் எழுந்து நின்ற பெண்ணாகவே நினைவு கூரப் பட விரும்புகிறேன்"

- மலாலா -

## இந்த வாரப் பாடல்

மொழியின் உச்சபட்சமான ஆளுமையை ருசித்தவர்கள் பண்டைய தமிழ்ப்புலவர்கள். சுவாரஸ்யமும், நுட்பமும் அழகியலும் கொண்ட பாடல்களை இயற்றுவதிலும் பாடுவதிலும் வல்லவர்களாக இருந்தனர். உதாரணமாக கீழே இருக்கும் பாடல் நாயக்கர் காலத்தில் வாழ்ந்த புலவர்களில் ஒருவரான காளமேகத்தால் பாடப்பட்டது.

**தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி**
**துத்தித் துதைதி துதைதத்தா தாதுதி**
**தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த**
**தெத்தாதோ தித்தித்த தாது**

என்ன நாக்கு புரள்கின்றதா, தகர வரிசையை வைத்து புலவர் ஏதோ பம்மாக்கிறார் என்று தோன்றுகிறதா? மேற்கண்ட பாடலின் பொருள் அத்தனை அழகானது, பொருள் இதுதான்.

"தத்தி தாவி பூவிலிருக்கும் தாதுவாகிய மகரந்தத் தூளைத் தின்னும் வண்டே, ஒரு பூவினுள் உள்ள தாதுவை உண்ட பின் மீண்டும் ஒரு பூவினுக்குள் சென்று தாதெடுத்து உண்ணுகிறாய், உனக்கு எந்தப் பூவிலுள்ள (எத்தாது) தேன் தித்தித்தது (இனித்தது)?

## பிறந்த நாள்



ஆவணி 29 - மைக்கேல் ஜாக்சன் பிறந்த நாள்
நடனத்தால் இந்த உலகத்தை அதிர வைத்த கால்கள் இந்த பூமியை தொட்ட நாள்

## 'செவாலியே' விருது

பிரெஞ் அரசு அதன் உயரிய விருதான "செவாலியே" விருதை இந்த வருடம் கமலஹாசனுக்கு அறிவித்திருக்கிறது. இதற்கு முன் சிவாஜிகணேசன் இவ்விருதை பெற்ற தமிழ்நடிகர் என்பது குறிப்பிடத்தக்கது.



## நினைவுச் சின்னம்

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி வீரரான பிலிப் கியூக்ஸ் பயிற்சியின் போது பந்து தலையில் பட்டதால் 2014 நவம்பர் 27 மரணித்தார்.

அவர் உயிரிழப்பதற்கு காரணமான பந்தில் "கியூப்ஸ் என்னை மன்னித்துவிடு" என்று பாவமன்னிப்புக் கோரி அந்தப் பந்தை வீசிய ஷேன் அபோட் எழுதியுள்ளார். இந்த பந்து தற்போது அவுஸ்ரேலிய கிரிக்கெட் அக்கடமியில் நினைவுச் சின்னமாகப் பேணப்படுகிறது.





கபிலன்

# பனித்தேச வடலி

11

எனக்கு கிரிக்கெட் விளையாட்டு அறிமுகமாகியது இங்கே தான். புதிய ஊரில் எனது வீட்டருகே ஒரு பெரிய மைதானம் இருந்தது. ஆரம்ப காலத்தில் வேற்று நாட்டவர்கள் அங்கே உதைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். தமிழர்கள் அதற்கு அருகில் கிரிக்கெட் மற்றும் கரப் பந்தாட்டம் விளையாடினார்கள். வெள்ளைக்காரர்களிற்கு கிரிக்கெட் விளையாட்டு புரியவில்லை. அந்த வழியால் போகும் போது நின்று பார்த்து விட்டு செல்வார்கள். அவர்களை போலவே நானும் பார்த்துக் கொண்டு நிற்பேன்.

ஆட்கள் பற்றாக்குறை வரும் போதெல்லாம் என்னையும் சேர்த்துக் கொள்வார்கள். 'பட்டிங்' வரை எனக்கு சந்தர்ப்பம் வந்ததே இல்லை. தமிழர்கள் மட்டும் இந்நாட்டிற்கு அகதியாக வரவில்லை. சில பாகிஸ்தான் நாட்டவர்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாக வந்திருந்தார்கள். அவர்களும் எங்களுடன் கிரிக்கெட் விளையாடினார்கள். மலையாளத்தை தாய்மொழியாகக் கொண்ட இந்தியர் ஒருவரும் இங்கே அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிக்கும் போது தன்னையும் ஈழத்தமிழர் என்றே குறிப்பிட்டிருந்ததால் அவரின் விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவர் நன்றாக தமிழும் பேசுவார் என்பது அவருடன் பழகும் போது தெரிந்து கொண்டேன். அவரும் இந்த கிரிக்கெட் அணியில் இருந்தார்.

அவர்கள் கிரிக்கெட் ஆடும் போது நான் அருகில் உதைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருப்பேன்.

எனது மாநிலத்தில் அதற்கு முன்னர் தமிழர்கள் சேர்ந்து ஒரு உதைபந்தாட்டக் கழகத்தை உருவாக்கியிருந்தார்கள். ஏனைய மாநிலத்தில் வசிக்கின்ற தமிழர்களும் இப்படி கழகங்களை உருவாக்கி சுற்றுப் போட்டிகளாக நடாத்தி வந்தனர். வேறொரு கழகத்துடன் ஏற்பட்ட அடிபாட்டில் எனது மாநிலத்தில் இருந்த அணி அதன் பின்னர் சுற்றுப் போட்டிகளிற்கு செல்வதை நிறுத்திக் கொண்டது.


எனவே நானும் எனது நண்பர்களும் பக்கத்து மாநிலத்தில் இருந்த கழகத்திற்கு விளையாடச் சென்றோம். மாதத்தில் ஒரு முறையாவது இப்படி சுற்றுப் போட்டிகள் நடைபெறும். ஊரில் என்ன பெயரில் கழகங்கள் இருந்தனவோ அதே பெயரில் கழகங்களிற்கு இங்கே பெயரை வைத்தார்கள். பாடும்மீன், உதயசூரியன், எவர்கிரீன் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். எனது தலைமுறையில் இந்த பெயர்கள் காணாமல் போயின. அதற்கு முக்கிய காரணம் எங்களிற்கும் ஊரிற்குமான தொடர்பு அறுந்து போனதே. எனது 15 ஆவது வயதில் ஒரு சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற தால் என்னை சிறந்த விளையாட்டு வீரனாக தெரிவு செய்திருந்தார்கள். இது இன்னும் சற்று உற்சாகத்தை தந்தது. இப்பொழுது நானும் எனது நண்பர்களும் பதின்மவயதின் நடுப்பகுதியில் இருந்தோம்.

எங்களின் மாநிலத்திற்கென்றொரு கழகத்தை உருவாக்க விரும்பி அது பற்றி கலந்தாலோசித்து இறுதியாக ஒரு கழகத்தை உருவாக்குவதாக முடிவெடுத்தோம். நாங்கள் ஒரு 7 பேர் தான். மிகுதிக்கு முன்னர் எனது மாநிலத்தில் உதைபந்தாட்டம் விளையாடிய சிலரை உதவிக்கு நாடினோம். அவர்களும் ஆதரவு தந்தார்கள். கழகத்திற்கு ஒரு பெயர் வைக்க வேண்டும். ஆளுக்கொரு பெயருடன் வந்தார்கள். இறுதியில் நாட்டுப்பற்றுடன் தாய்மண் விளையாட்டுக்கழகம் என்று வைத்தோம். அனைவரும் படித்துக் கொண்டிருந்ததால் சீருடைக்கான பணம் எங்களிடம் இல்லை. எனவே எனது மாநிலத்தில் உள்ள ஏனைய தமிழர்களின் வீட்டு கதவுகளை தட்டினோம். சீருடைக்கான பணம் மற்றும் சுற்றுப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான பணமும் சேர்ந்தது.

சீருடை சிவப்பு அல்லது மஞ்சள் நிறம் என்பதில் முதற்கொண்டே உறுதியாக இருந்தோம். எங்களின் தேசிய நிறமல்லவா!

அத்துடன் சீருடையின் நடுவில் தமிழீழ சின்னமும் பொறித்துக் கொண்டோம். சிவப்பு நிறசீருடையில் நடுவில் வெள்ளைநிற தமிழீழபடம். கழகத்தின் சின்னமாக தமிழீழ வரைபடத்திற்கு நடுவில் ஒரு விளையாட்டு வீரன். இதோ கழகம் தயாராகிவிட்டது.





பனிக்காலங்களில் இங்கே வெளியில் விளையாட முடியாதல்லவா. எனவே உள்ளரங்கங்களில் விளையாடுவதற்கான வசதிகள் இருந்தன. உள்ளரங்கங்களில் ஆறு வீரர்கள் கொண்ட சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன.

எமது முதலாவது சுற்றுப் போட்டியும் எனது மாநிலத்தில் எங்களின் ஏற்பாட்டில் தளபதி கேணல் கிட்டு அவர்களின் ஞாபகார்த்த கிண்ணமாக நடைபெற்றது. முதலாவது சுற்றுப் போட்டியிலயே நாங்கள் இறுதியாட்டம் வரை வந்திருந்தோம். நாங்கள் முன்னர் விளையாடிய பக்கத்து மாநில அணியிடம் படுதோல்வியையும் தழுவிக்கொண்டோம். இப்படி அடுத்தடுத்து வந்த ஏனைய உள்ளரங்க சுற்றுப் போட்டிகள் எதிலும் நாங்கள் இறுதியாட்டம் வரை வரவேயில்லை. ஆனாலும் ஒரு வேறுபட்ட வித்தியாசமான விளையாட்டு முறையை நாங்கள் கையாண்டு வந்தோம். சுவிஸ் நாட்டு கழகத்தில் விளையாடி பயிற்சி பெற்றதால் இந்த வேறுபாடாக இருக்க வேண்டும்.

வெளி மைதானங்களில் பதினொரு பேர் கொண்ட சுற்றுப் போட்டிகளில் எங்களிற்கு ஆட்கள் பற்றாக்குறை இருந்தது. எனவே அனைத்து சுற்றுப் போட்டிகளுமே சொதப்பலாகவே முடிந்தது.

பதின்ம வயதை கடந்ததும் எங்கள் நடை உடை மாறத் தொடங்கியது. ஏனைய கழகங்களுடன் கைகலப்பில் தொடங்கி அடி பாட்டில் முடிந்தது. ஒவ்வொரு வருடமும் ஏதாவது ஒரு கழகத்துடன் இப்படி சண்டையிட்டுக் கொண்டே இருந்தோம்.

இங்கே நடைபெறுகின்ற சுற்றுப் போட்டிகளில் முக்கியமானது தமிழீழக் கிண்ணம். தமிழர்களின் உலகக்கிண்ணம் என்று சொன்னால் சரியாக இருக்கும். ஏனைய வெளிநாடுகளிலிருந்து சிறந்த வீரர்கள் தாங்கள் வசிக்கின்ற நாட்டின் சார்பில் கலந்து கொள்வார்கள். கனடா, ஜேர்மனி, டென்மார்க், இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்த் என்று பல நாட்டு தமிழ்தேசிய அணிகள் பங்கு பற்றும்.

சுவிஸ் நாட்டிலிருந்து குறிப்பிட்ட அணிகள் பங்குபற்ற அனுமதிக்கப்படும். அதில் அவ்வப்போது எனது அணியும் உள்ளடங்கியது.

இவ் விளையாட்டுப் போட்டி ஒரு பெரும் திருவிழாவாகவே இரண்டு நாட்கள் ஏனைய பல விளையாட்டுக் களையும் உள்ளடக்கி நடைபெறும்.

தமிழ் கழகங்களிற்கான சம்மேளனம் ஒன்றும் உருவாக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் கண்காணிப்பின் கீழ் இயங்கிக் கொண்டிருந்தது. இதனால் விளையாட்டுப் போட்டிகளில் நடைபெறுகின்ற வன்முறைகள் கணிசமாக குறைந்திருந்தன. எனது கழகமோ எப்பொழுதும் கைகலப்பில் ஈடுபட்டுக் கொண்டேயிருந்ததால் பல ஆயிரம் பிராங்குகளை தண்டனைப் பணமாக சம்மேளனத்திற்கு செலுத்திக் கொண்டே வந்தோம். சம்மேளனத்தின் பாதி வருமானம் எங்களை நம்பியே இருந்திருக்க வேண்டும். அவ்வப்போது எங்களை சில மாதங்கள் தடையும் செய்து பார்த்தார்கள்.

நாங்களோ திருந்திய பாடில்லை. இதன் உச்சக்கட்டம் தமிழீழ கிண்ணத்தில் நடந்தேறியது.

வழக்கம் போலவே தோல்வியை சந்தித்து விட்டு நாங்கள் ஏனைய ஆட்டங்களை பார்வையிட்டுக் கொண்டிருந்தோம். எனது அணியில் ஒருவன் மது அருந்தியிருந்தான். விடுதலைப்புலிகளின் பணியாளர்களுடனும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டிருந்தான். அன்றைநாள் முடிவில் நானும் எனது நண்பர்கள் பலரும் வீடு வந்து விட்டோம். அவன் வேறுசிலருடன் அதிகநேரம் அங்கேயே நின்றிருந்தான்.

அவன் கையில் வைத்திருந்த கோலா ரின்னிலிருந்த கோலாவை தேசியக் கொடியில் ஊற்றிவிட்டனாம். உண்மை இன்று வரை தெரியவில்லை, வேறு காரணங்களாகவும் இருந்திருக்கலாம். அதனை காரணம் காட்டி அவனை நடு மைதானத்தில் வைத்து ஏறத்தாழ 50 விடுதலைப்புலிகளின் பணியாளர்கள் இரும்புத்தடிகளாலும் பெல்டுகளாலும் அடித்தனர். அவன் உள்ளாடையுடன் மட்டுமே நிற்க வைத்து அடிக்கப்பட்டான். இந்த விடயம் வீடு சென்றிருந்த எனக்கு அடுத்த நாள் தெரிய வந்திருந்தது.

எனக்கும் எனது நண்பர்களிற்கும் இது கடுங்கோபத்தை உண்டாக்கியது. என்ன தவறு செய்திருந்தாலும் ஒருவனுக்கு இப்படி 50 பேர் சேர்ந்து அடித்தது ஏற்றுக் கொள்ள முடியாது என்பது எங்களுடைய வாதமாக இருந்தது. எனது அப்பா மூலம் வன்னியில் இருந்த விடுதலைப்புலிகளின் காரியாலயத்திற்கு தொலைநகல் அனுப்பினோம். அதுபோய் சேர்ந்ததா இல்லையா என்பதெல்லாம் எங்களுக்கு தெரியவில்லை. ஆனால் விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளை எங்களை சந்தித்து பேசுவதற்கு வந்தது. செய்த தப்பிற்கு தண்டனை கொடுத்ததாக அவர்கள் வாதிட்டார்கள். நாங்களும் அதனை ஏற்றுக் கொண்டோம். ஆனால் அவர்கள் ஒருவனிற்கு இத்தனை பேர் சேர்ந்து அடித்ததை தவறு என்று ஏற்றுக் கொள்ளவில்லை. அவனை எங்களின் கழகத்திலிருந்து நீக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். நாங்களோ அவனை நீக்குவதென்றால் உங்களின் அந்த 50 பணியாளர்களையும் நீக்க வேண்டுமென்று விடாப்பிடியாக நின்றோம். இறுதியில் ஒரு சுமுகமான முடிவு எட்டாமலே சந்திப்பு முடிவிற்கு வந்தது.

(இன்னும் வளரும்...)




# திருப்புமுனை நாயகர்கள்

தொகுப்பு:
சி. விமலன்

சர்வதேச கிரிக்கெட்டில் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில், தொடரைத் தீர்மானித்ததில் திருப்புமுனையாக அமைந்த ஆட்டமென்றால், அது 2001 ஆம் ஆண்டு இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையில் கொல்கத்தாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டி தான். இந்தியாவுக்கு வருகை தந்த அவுஸ்ரேலிய அணி மும்பையில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. கொல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் தோல்வியை நோக்கி இந்தியா "பலோ-ஒன்" நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த நிலையில் தான் இந்தியாவின் வி.வி.எஸ். லக்ஸ்மன் 281 ஓட்டங்களையும் ராகுல் டிராவிட் 180 ஓட்டங்களையும் குவித்து 5 ஆவது விக்கெட்டுக்காக 376 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்தனர். இதன் மூலம் அதிலிருந்து மீண்ட இந்தியா இறுதியில் 171 ஓட்டங்களால் வெற்றிபெற்றதனால் லக்ஸ்மன் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். சென்னையில் நடந்த மூன்றாவது டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கரின் சதத்தோடு இந்தியா இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுத் தொடரை கைப்பற்றியிருந்தது.

அதுபோலவே இலங்கை அணிக்கெதிரான தொடரில் அவுஸ்ரேலியாவின் கையே ஓங்கி இருக்கும் என்று பலரும் எதிர்பார்த்திருந்த நிலையில், நிலைமை தலைகீழாக மாறி அவுஸ்ரேலியா வெள்ளையடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொடரில் திருப்புமுனையை ஏற்படுத்திய பெருமை குசல் மெண்டிசையே சாரும். பல்லேகலவில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் இன்னிங்சில் அவர் குவித்த 176 ஓட்டங்களே இலங்கை அணியின் மனோநிலையை மாற்றி தொடர்ச்சியாக தனஞ்ஜய டீ சில்வா, சண்டிமல், கௌசல் சில்வா போன்றவர்களும் சதமடிப்பதற்கான உந்துசக்தியை அளித்து தொடரைக் கைப்பற்ற வழிசமைத்திருந்தது.

லக்ஸ்மனுடைய ஆட்டத்தையும் குசலினுடைய ஆட்டத்தையும் திருப்புமுனை ஆட்டங்களாக ஒப்பிட்டாலும் இரண்டு ஆட்டங்களுக்கும் இடையில் சிறந்த ஆட்டம் எதுவென்று தெரிவு வரும் போது லக்ஸ்மனுடைய ஆட்டத்தில் 1 : 0 என்று தொடரில் பின் தங்கி இருந்தநிலையும் இரண்டாவது போட்டியில் Follow - on இற்குத் தள்ளப்பட்ட நிலையும் அவரை மிகுந்த மன அழுத்தத்துக்கு மத்தியிலே விளையாட வைத்ததனால் தான் தற்போதும் அழுத்தங்களுக்கு மத்தியில் பெறப்பட்ட மிகச் சிறந்த இன்னிங்ஸாக கிரிக்கெட் வல்லுநர்களால் அது கொண்டாடப்படுகிறது.

குசல் 176 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததனால் சங்ககார 2007ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிராக ஹொபாட்டில் நடந்த போட்டியில் 192 ஓட்டங்களைக் குவித்த சாதனையை முறியடிக்க முடியாது போயிருந்தது. ஆனாலும் சங்கா சிறப்பாக ஆடியிருந்தும் இலங்கை அந்த டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைந்ததோடு தொடரையும் அவுஸ்ரேலியா வெள்ளையடிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்லேகல டெஸ்ட் போட்டியில் இலங்கை 86 ஓட்டங்கள் பின்தங்கி இருந்த நிலையிலும் அதிலும் 86 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்த நிலையிலும் ஒருபக்கம் விக்கெட்டுக்கள் சரிய குசல் ஆடிய ஆட்டம் வெற்றியில் முடிந்ததனால் கிரிக்கெட் வரலாற்றில் இந்த இன்னிங்சும் என்றும் நினைவு கூரத்தக்க ஒன்றாகவே இருக்கும் எனலாம்.

# சாதகமும் பாதகமும்

இம் முறை ஒலிம்பிக் போட்டிகளில் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம் விளையாட்டு விதிமுறைகளை மட்டும் கருத்தில் எடுக்காமல் மனிதாபிமானத்துடன் சில விட்டுக் கொடுப்புக்களை மேற்கொண்டமை ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

பெண்களுக்கான 5000 மீற்றர் அரையிறுதிப் போட்டியில் எதிர்பாராத விதமாக வீராங்கனைகள் மோதிக் கொண்டதனால் கீழே தவறி விழுந்த அமெரிக்க வீராங்கனையான அக்கொடினாவுக்கு உதவி செய்ததனால் நியூசிலாந்து வீராங்கனையான நிக்கி ஹம்ளினுக்கு கடைசிக்கு முதல் இடமே கிடைத்தாலும் அவரது மனிதநேயத்தைப் பாராட்டி இறுதிப் போட்டியில் பங்குபற்ற அனுமதி அளித்திருந்தது.

அதேபோல பெண்களுக்கான 3000 மீற்றர் Steeplechase தெரிவு ஓட்டப்போட்டியில் மைதானத்தில் இருந்த தண்ணீரினுள் எதியோப்பியாவின் டிப்ரோ, அயர்லாந்தின் டிரீகி, ஜமேக்காவின் ஆயிஷா ஆகிய மூன்று வீராங்கனைகள் கால் இடறி கீழே விழுந்தனர். மேற்படி வீராங்கனைகள் முதல் மூன்று இடங்களுக்குள் வராதபோதிலும் எதிர்பாராமல் ஏற்பட்ட இந்த நிகழ்வைக் கவனத்தில் கொண்டு இறுதிப் போட்டியில் அம்மூவரும் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்பட்டமை சாதகமான அம்சங்கள் எனலாம்.

அதேசமயம் ஒலிம்பிக்கில் நடைபெற்ற 239 குத்துச் சண்டைப் போட்டிகளில் கிட்டத்தட்ட 60 போட்டிகளின் முடிவுகள் தவறானவை என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதையடுத்து பன்னாட்டு குத்துச்சண்டை சம்மேளனம் அது குறித்து முழுமையாகப் பரிசீலனை செய்திருந்தது. அதன்படி அவ்வாறு பக்கச்சார்பாக நடந்து கொண்ட நடுவர்களைப் பணி நீக்கம் செய்தமை வரவேற்கத்தக்க முடிவு என்றாலும் வழங்கப்பட்ட முடிவுகளில் மாற்றங்கள் இருக்காது எனக் குறிப்பிட்டமை தான் கவலைக்குரியது. இப்போட்டிகளை மீள நடத்துவதற்கு ஒலிம்பிக்போட்டிகள் நடைபெறும் நாட்களின் வரையறை தடையாக இருந்ததனால் அவ்வாறானதொரு முடிவுக்கு வந்ததைப் புரிந்து கொண்டாலும் பாதிக்கப்பட்ட வீரர்களுக்கு எந்தவிதத்திலும் இந்தத்தீர்ப்பு நன்மை பயக்கவில்லை என்பது பாதகமான அம்சமே.






# தவிர்க்கப்படும் தடைகள்

இம்முறை ஒலிம்பிக்போட்டிகளில் பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் எகிப்து - ஜேர்மனி அணிகள் விளையாடிய போட்டி பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. இப்போட்டியில் பிகினி எனும் நீச்சல் உடையில் விளையாடுவதே வழக்கம் என்றாலும் எகிப்து சார்பில் முதன்முதலாக இப்போட்டியில் விளையாடிய நடா மீவாட் மற்றும் தோவா எல்போபஷி ஆகிய வீராங்கனைகள் உடலை முற்றாக மறைக்கும் வகையில் ஆடை அணிந்து விளையாடினர். இவர்களில் தோவா எல்போபஷி, ஹியாப்பும் (தலையை மூடி அணிவது) அணிந்திருந்தார்.

அதுபோல பெண்களுக்கான 100மீற்றர் முதல் தெரிவுப்போட்டியிலும் சவுதி அரேபியா சார்பில் முதன்முதலாக கலந்துகொண்ட கரீமன் அபுல்ஜதாயேல் உடலை முற்றாக மறைக்கும் வகையில் ஆடை அணிந்து ஹியாப்பும் அணிந்து பங்குபற்றி இருந்தார். இவை வரவேற்கத்தக்க மாற்றங்கள் ஆகும்.

ஏனென்றால் 2014ஆம் ஆண்டு கொரியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டிகளில் கட்டார் - மொங்கோலிய நாடுகளுக்கிடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் கட்டார் வீராங்கனைகள் ஹிஜாப் அணிந்து விளையாடுவது சர்வதேச கூடைப்பந்தாட்ட சம்மேளன விதிமுறைக்கு முரணானது எனக்கூறி தடை விதித்ததனால் போட்டியிலிருந்து கட்டார் வீராங்கனைகள் விலகிக்கொண்டார்கள். ஹியாப்புடன் விளையாட முதலில் அனுமதி அளித்து பின்னர் விளையாட மறுத்திருந்தமை பலத்த சர்ச்சையை அப்போது ஏற்படுத்தி இருந்தது.

அந்த வகையில் ஒவ்வொரு நாட்டு போட்டியாளர்களது கலாசாரங்களை உணர்ந்து அவர்களது மத நம்பிக்கைகளுக்கு மாறாகச் செயற்பட வற்புறுத்தாமல் 2012 ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னதாகவே நீண்ட காற்சட்டை முழுநீளக்கை கொண்ட அங்கிகளுடன் கடற்கரை காப்பந்தாட்டம் விளையாட சர்வதேச கரப்பந்தாட்டச் சம்மேளனம் அனுமதி வழங்கி இருந்தது. அத்தகைய அனுமதிக்கு எந்தவொரு குளறுபடியும் ஏற்படாமல் இம்முறை ஒலிம்பிக் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. எனவே தடகளம் மற்றும் கரப்பந்தாட்டச் சம்மேளனங்கள் வழங்கிய இவ்அனுமதி சர்வதேச விளையாட்டுக்கள் அனைத்திலும் பரவல் அடைவதற்கான கட்டியங்கூறலாகவே அமைகிறது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 27.08.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.